# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 மாசி / ஃபிப்ரவரி 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்:

## பாசிச பாரதிய சனதா கட்சியை வழிமறிப்போம்!




கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்பார் கம்பர். தமிழ்நாட்டு மக்களாகிய நாம் எவ்வளவு கடன்பட்டுள்ளோம் தெரியுமா? மாநில அரசின் கடன் மட்டும் கிட்டத்தட்ட 6 இலட்சம் கோடியாம்! பொதுத்துறை நிறுவனங்கள் பட்டுள்ள கடனையும் சேர்த்தால் 9 இலட்சம் கோடி வருமாம்!

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் - 2021
3. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் நிலைப்பாடு -7
4. புகழ்பாடி வஞ்சிக்கும் நிதி நிலை அறிக்கை -10
5. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சொல்கிறது -22
6. ஏற்றம் பெறுவது ஏற்றத்தாழ்வு மட்டுமே -26
7. இந்திய அரசுக்கு வேண்டுகோள் -35
7. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (16) -37
8. டாலருக்கு வந்த வாழ்வு (11) -43
9. கியூபாவின் புரட்சிப் பெண்கள் (12) -59



**பதிவு எண்** :R.Dis. No. 1964/2014

அதாவது கைக்குழந்தை முதல் தொண்டு கிழம் வரை ஒவ்வொரு தமிழர் தலையிலும் கட்டப்பட்டுள்ள கடன் கிட்டத்தட்ட ஒன்றேகால் இலட்சம்!




இத்துடன் இந்திய அரசு பட்டுள்ள பெருங்கடன் 147 இலட்சம் கோடியையும் சேர்த்துக் கணக்கிட்டால் நாம் ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய் கடன்பட்டிருப்பதை உணரலாம். இந்திய ஆட்சியாளர்களும் தமிழ்நாட்டின் ஆட்சியாளர்களும் நம்மைக் கேட்காமலே நம்மை இந்த அளவுக்குக் கடனாளிகளாக்கிக் கலங்கி நிற்கச் செய்துள்ளார்கள்.

இதோ வரப்போகிறது சட்டப் பேரவைத் தேர்தல்! இதில் போட்டியிடும் கட்சிகள், கூட்டணிகள், வேட்பாளர்கள் யாராவது நம்மைக் கடன் எனும் படுகுழியிலிருந்து மீட்பதற்கு உருப்படியான வழி சொல்லியிருக்கின்றார்களா? இல்லை.

வாக்காளர்களுக்குக் கையூட்டுப் போல் இலவயங்களும் சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மயங்கினால் நம்மை மேலும் கடன் வலையில் சிக்க வைத்து அயலானுக்குக் கொத்தடிமைகளாக்கி விடுவார்கள்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பல இலட்சம் மனித உயிர்களை நோய்க்கு இரையாக்கியது மட்டுமல்ல, அவசரகோலமான ஊரடங்கு விதித்து, இயல்பு வாழ்வை முடக்கிக் கோடிக்கணக்கான மக்களைச் சோறும் நீருமின்றி நீண்ட நெடுந்தொலைவு நடையாய் நடக்க விட்டுப் பட்டினிச் சாவுகளுக்கு வழி கோலியது நரேந்திர மோதி தலைமையிலான பாரதிய சனதா அரசு!

பெருந்தொற்று நெருக்கடியையும் கூட உழைக்கும் மக்களை மேலும் மேலும் ஓட்டாண்டிகளாக்கவும், அம்பானி, அதானி போன்ற பெருமுதலாளிகளை உலகப் பெரும்பணக்காரர்களாக வளர்த்து விடவும் பயன்படுத்திக் கொண்டது நரேந்திர மோதி தலைமையிலான பாசக அரசு!

உழவை அழித்து உழவர்கள் வாழ்வைக் கெடுக்கும் புதிய வேளாண் சட்டங்களைக் கொண்டுவந்து, அவற்றை எதிர்த்து மாதக் கணக்கில் போராடி வரும் உழவர்களை அடக்குமுறையாலும் அலட்சியத்தாலும் ஒடுக்கி வருவது நரேந்திர மோதி தலைமையிலான பாசக அரசு!

சிறுகுறு தொழில்களைச் சிதைத்துத் தொழிலாளர் உரிமைகளைப் பறித்து, வறுமையைப் பெருக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்த்து பாரதத்தையே பட்டினி தேசம் ஆக்கி வைத்திருப்பது நரேந்திர மோதி தலைமையிலான பாசக அரசு!

பணமதிப்பு நீக்கத்தால் மக்களையும், ஜிஎஸ்டி எனும் சரக்கு சேவை வரியால் மாநிலங்களையும் சூறையாடி, சேம வங்கி இருப்புகளை ஒட்டச் சுரண்டி நாட்டின் பொருளியலையே நெருக்கடிகளின் நெருப்பு வளையத்தில் நிறுத்தியிருப்பது நரேந்திர மோதி தலைமையிலான பாசக அரசு!

இத்துணை நெருக்கடிக்கிடையிலும் பிரான்சிலிருந்து போர் வானூர்திகள், அமெரிக்க வல்லரசிடமிருந்து படைக்கருவிகள் என்று ஆய்தக் கொள்முதல் செய்து காசைக் கரியாக்கிக் கொண்டிருப்பது நரேந்திர மோதி தலைமையிலான பாசக அரசு!

மோதி அரசின் ஆதரவோடு ஆர்எஸ்எஸ் பரிவார அமைப்புகள் இந்துத்துவத்தின் பேரால் இந்து மதவெறியை வளர்த்து வருகின்றன. மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முன்னுக்கு நின்று செல்வங்கொழிப்பதும் அவர்களே! மாட்டிறைச்சி வைத்திருந்தார்கள் என்று சொல்லி ஏழை எளிய முசுலிம்களை அடித்துக் கொல்லும் 'பசுக் குண்டர்களும்' அவர்களே!

ஜெய் சிறிராம்! ஜெய் அனுமான்! என்று கத்தும் படி வேற்று மதத்தவரைக் கட்டாயப்படுத்தி, மசூதிகளை இடித்து, தேவாலயங்களை உடைத்து, வகுப்புக் கலவரங்களைத் தூண்டிக் குருதிச்சேற்றில் அரசியல் நச்சுப் பயிர் வளர்ப்பதுதான் ஆர்எஸ்எஸ்-பாசகவுக்கு வாடிக்கை.

வெளிப்படையாகவே இசுலாமிய மக்களை விலக்கிவைக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கும் தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டுக்கும் நாடுதழுவிய எதிர்ப்பு எழுந்தது. சிறுபான்மைச் சமுதாயங்களோடு குடியாட்சிய ஆற்றல்களும் இணைந்து போராடிய போதும் எல்லா வகையான சூழ்ச்சிகளையும் அடக்குமுறைகளையும் மோதி-அமித்ஷா வகையறா கையாளக் கண்டோம்.

மலைகளைப் பிளந்தும் காடுகளை அழித்தும் பழங்குடி மக்களை விரட்டியடித்தும் சுரங்கம் வெட்டி இயற்கை வளங்களைக் கொள்ளையிடப் பன்னாட்டுப் பெருங்குழுமங்களின் சுரண்டலுக்கு வழியமைத்துக் கொடுப்பதைத்தான் வளர்ச்சி என்கிறது பாசக.

மக்கள் நலன் குறித்தோ சுற்றுச் சூழல் நலன் குறித்தோ கொஞ்சங்கூட அக்கறை இல்லாமல் அணுமின் நிலையங்கள் - அனல்மின் நிலையங்கள் - துறைமுகங்கள் - பேரணைகள் - அனைத்தும் மென்மேலும் தனியார் துறையில் அமைத்துக் கொண்டே போகும் அழிவுக் கொள்கையால் தமிழ்நாடு உட்பட இந்தியத் துணைக்கண்டமே பாழாகிக் கொண்டிருக்கிறது.

காப்பீட்டுத் துறை, போக்குவரத்துத் துறை உள்ளிட்ட முகன்மைத் துறைகள் பலவும் விரைந்து தனியார் மயமாக்கப்படுகின்றன. இடைத்தட்டு மக்களின் சேமிப்புகள் யாவும் பறிக்கப்பட்டு பெருமுதலாளிகளின் முதல்-திரட்டலுக்குத் தீனியாக்கப்படுகின்றன.

அனைவர்க்கும் கல்வி என்ற கொள்கையைக் கைகழுவி விட்டு பெருங்குழுமத் தேவைகளுக்கு ஏற்பவும் சமூகநீதிக்குப் புறம்பாகவும் கல்விமுறையை மாற்றியமைக்கும் முயற்சிதான் தேசியக் கல்விக் கொள்கையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் புறக்கணிக்கப்படுவதும், இந்தியும் ஆங்கிலமும் சமற்கிருதமும் திணிக்கப்படுவதும் ஏழை எளிய ஒடுக்குண்ட மாணவர்களின் கல்விச்சாலைகளில் பள்ளம் தோண்டி வைப்பதே ஆகும்.

புதிய வேலைவாய்ப்புகள் தோற்றுவிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல. இருக்கிற வேலைவாய்ப்புகளும் சுருங்கிக் கொண்டிருக்கும் அவலநிலை! பெருந்தொற்றுக் காலத்தில் வெடித்து வெளிப்பட்ட புலம்பெயர் தொழிலாளர் துயரம் என்பது வேலையின்மைச் சிக்கலின் முழுப் பரிமாணத்தையும் வெளிப்படுத்தி விட்டது. இத்தனைக்குப் பிறகும் நரேந்திர மோதியின் வாய்வீச்சுக்கும் நிர்மலா சீத்தராமனின் திமிர்ப் பேச்சுக்கும் குறைவே இல்லை.

திகிலிய எதிர்ப்பின் பேரால் மனிதவுரிமைகளுக்கும் மாநில உரிமைகளுக்கும் எதிராக இந்திய அரசு - காங்கிரசாட்சியே - உருவாக்கிய தேசியப் புலனாய்வு முகமை (என்ஐஏ) நிறுவனத்துக்கு மேலும் கடுமையான அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரப் பெருக்கத்துக்கு நாடாளுமன்றத்தில் திமுகவும் ஆதரவளித்தது வெட்கக்கேடு!

அடக்குமுறைச் சட்டங்கள் மேலும் கூர்தீட்டப்படுவதன் வழியில் ஊபா (UAPA) எனப்படும் சட்டப்புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் மேலும் கடுமையாக்கப்பட்டுப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பீமா கொரேகான் வழக்கில் கவிஞர் வரவர ராவு, அறிஞர் ஆனந்த் டெல்டும்ப்டே, அருள்தந்தை ஸ்டேன்சாமி, ஊடகர் கௌதம் நவ்லேக்கா வழக்கறிஞர் சுதா பரத்வாஜ், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலரும் அடுத்தடுத்து சிறைப்படுத்தப்பட்ட நிகழ்வுகள் போராடும் மக்களை நடுங்க வைக்கும் நோக்கமுடையவை.

தமிழ்நாட்டிலும் அண்மையில் 'மாவோயிஸ்ட்' விவேக், பாலன், சீனிவாசன் உள்ளிட்ட தோழர்கள் ஊபா சிறையில் அடைக்கபட்டுள்ளனர். பேரறிவாளன் உள்ளிட்ட தமிழர் எழுவர் விடுதலைக்குத் தமிழக அமைச்சரவையே தீர்மானம் இயற்றிய பிறகும் ஆளுநர் முடக்கி அழிச்சாட்டியம் செய்வதற்கு பாசக ஆட்சியின் வஞ்சகமே அடிப்படை. இருபதாண்டுகளுக்கு மேலாகச் சிறையில் வாடும் இசுலாமியக் கைதிகளுக்கு விடுதலையின் நம்பிக்கைக் கீற்று கண்ணுக்கு எட்டிய வரை தென்படவே இல்லை.

பாசிச பாசக அரசின் எடுபிடியாகவே தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான

அதிமுக அரசு செயல்பட்டு வருகிறது அதன் அழிவுத் திட்டங்களுக்கும் அடக்குமுறைச் சட்டங்களுக்கும் தொண்டூழியம் செய்யும் ஏவலாளாகவே இருந்து வருகிறது. வரப்போகும் சட்டப் பேரவைத் தேர்தலிலும் பாசகவின் பல்லக்குத் தூக்கியாகவே அதிமுக செயல்படுகிறது.

இந்திய அரசமைப்பில் மாநிலச் சட்டப் பேரவைக்கு இறைமை இல்லை, இவ்வழியில் அமைந்திடும் மாநில அரசுக்கு அரசுரிமை இல்லை. ஒரு விடுதலை இயக்கம் தன் குறிக்கோள்களை அடைவதற்கு இந்தச் சட்டப்பேரவை ஒரு கருவியாகப் பயன்பட வாய்ப்பே இல்லை. இந்த நிலையிலும் பாசிச பாசக தமிழகத்தில் கால்பதிக்க இந்தச் சட்டப் பேரவைத் தேர்தலை ஒரு வழியாகப் பயன்படுத்த முற்பட்டிருப்பதால் அந்த வழியை மறிப்பதற்கு குடியாட்சிய ஆற்றல்களும் அதே தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இந்தத் தேர்தலில் பாசக தோற்பது மட்டுமே பாசிசத்தை ஒழித்து விடாது, மக்கள்-போராட்டங்களே பாசிசத்தை இறுதியாக வீழ்த்தும் வழி என்றாலும், பாசிசப் படையெடுப்புக்கு ஒரு தடைக்கல் அமைத்திட இந்தத் தேர்தலிலும் களம் காண்போம்!

குடியாட்சிய ஆற்றல்கள் தாமே தேர்தலில் போட்டியிட்டு பாசகவைத் தோற்கடிப்பதற்கான சூழலும் சொந்த வலிமையும் இல்லாத நிலையில் பாசகவைத் தோற்கடிக்கப் பொருத்தமான வழியை வாக்காளர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்!

பாசக போட்டியிடாத தொகுதிகளே பெரும்பாலானவை என்றாலும் அவற்றில் எந்த ஓர் அணியையும் (அல்லது கட்சியையும்) ஆதரித்தோ எதிர்த்தோ வாக்களிக்க வழிகாட்டுவது கொள்கையற்ற பதவி அரசியலுக்குத் தூபமிடுவதாகவும் போராட்ட அரசியலுக்குரிய விழிப்புணர்வைத் தளர விடுவதாகவுமே அமையும். எனவே யாருக்கும் வாக்கில்லை என்பதன் அடையாளமாகவும் புறக்கணிப்பின் முறைசார் வடிவமாகவும் நோட்டாவைப் பயன்படுத்தலாம்!

எதிர்காலத்தில் மக்கள் போராட்டங்களின் வலிமை கூடி அதனால் சூழல் மாறிச் செல்லும் போது அந்தப் போராட்டங்களின் நலனுக்கு ஏற்பத் தேர்தல் களத்தை வேறுவிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வழிகள் திறக்கப்படவும் வாய்ப்புண்டு என்பதை நாம் மறக்கவில்லை.

ஆனால் யாவற்றிலும் முதன்மையான உடனடிக் குறிக்கோளை மறவோம்! வரப் போகும் தேர்தலில் பாரதிய சனதா கட்சியை அது போட்டியிடும் ஒவ்வொரு தொகுதியிலும் வீழ்த்திட நம் தோழமை ஆற்றல்களுடன் ஒன்றுபட்டு உழைப்போம்!

## தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் - 2021

### தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் நிலைப்பாடு

1.தமிழ்நாட்டின் சட்டப் பேரவைத் தேர்தலில் வாக்குப்பதிவு நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. கூட்டணி பேரங்கள், தொகுதிப் பங்கீடுகள், வேட்பாளர் தேர்வுகள், பரப்புரைக் கூட்டங்கள், தேர்தல் வாக்குறுதி அறிக்கைகள் என்று நாடே களைகட்டி நிற்கிறது. தமிழ்த் தேசிய விடுதலைக்காகவும் சமூக நீதிக்காகவும் போராடி வரும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் "வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல்" என்ற குறள்நெறிப்படி இத்தேர்தல் குறித்து தன் நிலைப்பாட்டைத் தீர்மானிக்க வேண்டும்.

2.நாம் தேர்தல் என்ற குடியாட்சிய வடிவத்தை விரும்பி ஏற்றுக் கொள்கிறோம். வாக்குரிமை என்பது அடிப்படையான குடியியல் உரிமைகளில் ஒன்று. வயது வந்தோர் அனைவர்க்கும் வாக்குரிமை என்பதற்காக உலகில் பல தேசங்களும் நீண்ட நெடுங்காலம் போராடியிருப்பதை நாம் மனங்கொள்கிறோம். தேர்ந்தெடுக்கவும் தேர்ந்தெடுக்கப்படவுமான உரிமை இல்லையேல் குடியாட்சிய உரிமை பொருளற்றதாகி விடும்.

3.தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சந்திக்கும் முதல் தேர்தலன்று இது. நாம் பொதுவாகத் தேர்தலில் போட்டியிடவோ வாக்குக் கேட்கவோ இல்லை என்றாலும், நாம் புறக்கணிப்புவாதிகள் அல்லோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். மூலவுத்தி நோக்கில் தேசிய விடுதலைக் குறிக்கோளை அடைய இப்போதுள்ள வடிவில் இந்தியத் தேர்தல் முறை உதவாது என்பது தமிழ்க் குமுகத்தின் வரலாற்றுப் பட்டறிவு ஆகும்.

4.நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்த வரை எவ்வளவு முயன்றாலும் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் பத்திலொரு பங்குக்கும் குறைவாகவே தமிழ் மக்களால் பெற முடியும். ஒடுக்குண்ட தேசங்களின் அடிமைமுறியாக இருக்கும் இந்திய அரசமைப்புச்

சட்டத்தில் நாம் விரும்புகிற எந்த் திருத்தத்தையும் கொண்டுவர நூறாண்டு ஆனாலும் வழியே இல்லை.

5.சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்த வரை சட்டப் பேரவை என்பது இறைமையற்றது. அதனால் தன்னுரிமையோடு ஒரே ஒரு சட்டம் கூட இயற்ற முடியாது. மாநில அரசு என்பது அரசே அன்று. அது இந்திய அரசின் முகமை நிறுவனமாக மட்டுமே இருக்க முடியும். சொல்லளவிலும் செயலளவிலும் இது மெய்ப்பிக்கப்பட்ட உண்மையாகும். தனித்தோ ஒத்த நோக்குள்ள இயக்கங்களுடன் கூட்டாகவோ சட்டப் பேரவைத் தேர்தலில் பங்கேற்று மாநில அரசைக் கைப்பற்றி விடுதலைக் குறிக்கோளை அடையவோ அந்தத் திசையில் முன்னேறிச் செல்லவோ கோட்பாட்டளவில் கூட வாய்ப்பில்லை. ஆகவே ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற நிலையில் மூலவுத்தி நோக்கில் இப்போதைய இந்தியத் தேர்தல் முறையில் முனைப்புடன் பங்குபற்றும் வாய்ப்பே நமக்கில்லை. குடியாட்சிய நோக்கிலும் தமிழ்த் தேசிய நோக்கிலும் தேர்தல் முறையில் உரிய மாற்றங்கள் ஏற்பட்டு நம் நோக்கங்களுக்கு அதில் பங்குபற்றும் வாய்ப்பு அமையுமானால் நம் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளத் தடையில்லை.

6.ஆகவே, மூலவுத்தி வகையில் இந்தியத் தேர்தல் முறையில் பங்குபற்றும் வாய்ப்பில்லாதவர்களாக நாம் இருந்த போதும் குறுவுத்தி வகையில் தேர்தல் அரசியலில் இடையீடு செய்வதில் நமக்குத் தயக்கமில்லை. இந்த அடிப்படையில்தான் ஈழத்தில் இந்தியாவும் சிங்களமும் ஏவிய தமிழினவழிப்புப் போரின் பகைப்புலத்தில், ”இந்தியாவே, போரை நிறுத்து!” என்ற முழக்கத்தின் தொடர்ச்சியாக 2009 பொதுத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்ளத் தோழமை அமைப்புகளுடன் சேர்ந்து முடிவெடுத்துச் செயல்பட்டோம்.

7.இப்போது வரவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் பாசிச பாரதிய சனதாக் கட்சி தமிழகத்தில் கால் பதிக்க முயன்று வரும் பகைப்புலத்தில் நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு, ”பாசிச பாசகவை வீழ்த்துவோம்” என்ற முழக்கத்துடன் ஒருங்கிணைந்துள்ள அமைப்புகள் சார்பில் பாசகவை எதிர்த்து வாக்களிக்குமாறு தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்க முடிவெடுத்துள்ளோம்.

8.மற்றத் தொகுதிகளைப் பொறுத்த வரை பாசக ஆதரவுக் கட்சிகளையும் தோற்கடிக்குமாறு அழைப்பு விடலாமா? என்று கருதிப் பார்த்தால், பெரும்பான்மைத் தொகுதிகளில் இப்படிச் செய்வது புறநோக்கில் திமுகவை ஆளும்கட்சியாக்குவதற்கு அளிக்கும் ஆதரவாக அமைந்து, மாநில ஆட்சியால் பயனில்லை என்ற நம் மூலவுத்தி நோக்கிற்கு முரணாக அமைந்து விடும். திமுக அதிமுக இரண்டுமல்லாத எந்தக் கட்சிக்கும் இந்தத் தேர்தல் முடிவில் தாக்கமுண்டாக்கும் வலிமை இல்லை என்றே கணிக்கிறோம்.

9.தனித்தோ தோழமை அமைப்புகளோடு சேர்ந்தோ நாமே போட்டியிட்டு பாசக கூட்டணியைத் தோற்கடிக்கலாம், பிறகு இறைமையற்ற ஆட்சியமைக்க மறுத்துப் பதவி விலகலாம் என்பதும் கூட கோட்பாட்டளவில் ஓர் உத்திதான். ஆனால் அதற்கான வலிமை இப்போதுள்ள நிலையில் நமக்கு இல்லை. போராட்ட வலிமையின் அடிப்படையில்தான் இவ்வாறான உத்திகளை நாம் வகுக்கவும் செயலாக்கவும் முடியும். பாசகவைத் தோற்கடிக்க வேண்டும் என்பதும், அதற்கு எதிராகப் போட்டியிடும் யாருக்கும் வாக்களிக்குமாறு கேட்காமல் விடுவதும் ஒரு முரண்பாடுதான். இந்த முரண்பாட்டை ஏட்டளவில் தீர்க்க முடியாது. நடைமுறை வாழ்க்கையில்தான் தீர்க்க முடியும். போராடும் ஆற்றல்களின் வலிமை பெருகுவதுதான், அதற்காக உழைப்பதுதான் தீர்வுக்கு வழி.

10.அனைத்திந்திய அளவிலான உழவர் போராட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் கூட வரவிருக்கும் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் ஆதரவு தெரிவிக்காமலே பாசகவைத் தோற்கடிக்குமாறு அழைப்பு விடுத்திருப்பது நம் நிலைப்பாட்டுக்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது.

11.இறைமையற்ற மாநில ஆட்சியாக இருந்தாலும் இந்திய பாசக அரசின் மக்கள்பகைச் சட்டங்களையும் அடக்குமுறை நடவடிக்கைகளையும் எதிர்த்து மக்கள் பக்கம் நிற்க வேண்டும் என்ற பரப்புரையை நாம் மேற்கொள்ளலாம். இது இப்போதைய ஆட்சியாளர்கள் பற்றி மட்டுமல்லாமல் இந்திய அரசமைப்பு பற்றியும் மக்களிடையே விழிப்புண்டாக்கப் பயன்படும்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

•**தியாகு,** பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

•89391 54752 / thozharthiagu@gmail.com

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# புகழ்பாடி வஞ்சிக்கும் நிதி நிலை அறிக்கை

சமந்தா

## பொருளாதார ஆய்வறிக்கை

2020-21 நிதியாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் ஓர் ஆய்வறிக்கைக்கான அறிவியல் நோக்கையோ, பாரபட்சமற்ற உண்மைசார் அணுகுமுறையையோ வெகு அரிதாகவே காண முடிகிறது. பாஜக அரசின் தோல்விகளை மறைப்பதற்கான சாதனமாக ஆய்வறிக்கை அவக்கேடான முறையில் திரிக்கப்பட்டு தற்புகழ்ச்சியையும், பொய்களையும் பரப்புரை செய்கிறது. இந்திய அரசின் கொள்கை, தற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்படும் பொருளாதாரத்தின் விலையைக் காட்டிலும் மனித வாழ்வின் மதிப்பிற்கு முன்னுரிமை அளித்துள்ளதாகவும், "அனைத்தின் விலையையும் அறிந்தும் எதனுடையை மதிப்பையும் அறியாத ஆஸ்கார் வொயில்டின் சூதனைப் போலல்லாமல்," ஆபத்திலிருக்கும் ஒருயிரைக் காப்பாற்றுவதே தர்மத்தின் தோற்றமாக மகாபாரதம் குறிப்பிடுவது போல், தொற்றுநோய்த் தடுப்புக்கான இந்தியாவின் கொள்கைமுடிவு மனிதாபிமானக் கொள்கையின் அடிப்படையில் உருவானது. என்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை மீட்க முடியும், இழந்த மனித உயிர்களை மீண்டும் திரும்பப் பெற முடியாது என்பதை அங்கீகரித்ததால், உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்களைக் காப்பாற்றுவதில் இந்திய அரசு கவனம் செலுத்தியது என்றும் புகழ்பாடுகிறது பொருளாதார ஆய்வறிக்கை. இவ்வாறு பொய்யையை உண்மையாகத் திரித்துக் கூறுவதால் யார் உண்மையான சூதன் என்பதை மக்கள் மறந்து விடப் போவதில்லை. பாஜக அரசு கொண்டு வந்த பொதுமுடக்கத்தால் 37 லட்சம் நபர்கள் கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டதாகவும் 1 லட்சம் இறப்புகள் தடுக்கப்பட்டதாகவும் பாராட்டும் இந்த அறிக்கை, பொருளாதார முடக்கத்தினால் எத்தனை வேலையிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்பது குறித்து ஒன்றுமே குறிப்பிடவில்லை.

பொருளாதாரத்தில் 'V' வடிவ மீட்சி ஏற்பட்டுள்ளதாகப் பொருளாதார ஆய்வு அறிக்கையில் பல முறை குறிப்பிடப்பட்டுள்ளது. கோவிட் தாக்கத்திற்கு முன்பிருந்த பொருளாதார நிலைக்கு மீண்டு வந்தால்தான் பொருளாதாரம் மீட்சி அடைந்துள்ளது எனக் குறிப்பிட முடியும். அரசு தரப்புப் புள்ளியியல் தரவுகளில் பொருளாதாரச் சரிவு 7.7 விழுக்காடாக மதிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேசப் பண நிதியம் 2025இல்தான் இந்தியப் பொருளாதாரம் கோவிட்-19 தாக்கத்திற்கு

முந்தைய நிலைக்கு மீண்டு வரும் எனக் குறிப்பிடுகிறது. ஆனால் பொருளாதார ஆய்வறிக்கை 2022ல் இந்தியப் பொருளாதாரம் 11 விழுக்காடு வளர்ச்சி பெறுமெனக் குறிப்பிடுகிறது!

தர மதிப்பீட்டு நிறுவனங்கள் இந்தியாவின் கருவூலக் கடன்களுக்கான தர மதிப்பைப் பொருத்தமில்லாமல் குறைக்கின்றன என்றும், ஆகவே இந்திய அரசு அவற்றிற்கு அச்சப்படாமல் செலவுகள் செய்யலாம் என்றும் ஆலோசனை வழங்கியுள்ளது. ஆனால் இதே தர்க்கத்தை உள்நாட்டுக்குள்ளும் பொருத்திப் பார்க்கலாமே! எதற்காக மத்திய அரசு குறைந்த வட்டியில் கடன் வாங்கும் போது மாநிலங்களின் தர மதிப்பீடு குறைக்கப்பட்டு அதிக வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய நிலைக்கு அவற்றை மத்திய அரசு தள்ளியுள்ளது என்பதற்கும், சிறு குறு நிறுவனங்களை ஏன் பெருநிறுவனங்களை விட அதிக வட்டிக்கு கடன் வாங்கும் நிலைக்கு இந்திய அரசு தள்ளியுள்ளது என்பதற்கும் இதே வாதத்தை பொருத்திப் பார்க்கலாமே! இவற்றை எந்த அடிப்படையில் நியாயப்படுத்த முடியும்?

இந்தியா, சீனா போன்ற அதிக மக்கள்வளம் கொண்ட, வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் அரசு அதிகம் கடன் பெறுவதால் தனியார் துறை பாதிக்கப்படாது என்றும், மாறாக, அது தனியார்துறையின் நடவடிக்கைகளுக்குத் தூண்டுதலாக அமையும் என்றும் பொருளாதார ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. பிறகு ஏன் கோவிட்-19 தாக்குதலுக்குப் பிறகும் இந்திய அரசு சிக்கன நடவடிக்கையைக் கையாண்டு வருகிறது என்ற கேள்வி எழுகிறது. வளர்ந்த நாடுகளில் ஆரம்ப காலத்தில் அதிக நிதிச்சலுகைகள் அளிக்கப்பட்டன, இங்கு அப்படி அளிக்க வேண்டியதில்லை, இந்திய அரசு திறமையாக எப்பொழுது அளித்தால் மக்களுக்கு அதிகப் பயன்பாடு கிடைக்கும் என்ற அடிப்படையில் உரிய நேரத்தில் சரியான அளவிற்கு நிதியுதவி அளித்தது எனப் பாராட்டுகிறது இந்த ஆய்வறிக்கை.

ஆயுஷ்மான் திட்டத்தைச் செயல்படுத்தாத மாநிலங்களுடன் ஒப்பிடும் போது ஆயுஷ்மான் திட்டத்தைச் செயல்படுத்தும் மாநிலங்களில் மருத்துவக் காப்பீடுகள் அதிகரித்துக் குழந்தை இறப்பு விகிதம் குறைந்து, குடும்பக் கட்டுப்பாட்டுச் சேவைகளின் பயன்பாடு மேம்பட்டிருப்பதாகவும், எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றி அதிக விழிப்புணர்வு அடைந்திருப்பதாகவும் போற்றுகிறது பொருளாதார ஆய்வறிக்கை.. அரசு சேவைகளால் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் குடிநீர், வீட்டு வசதி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை பெறுவதில் ஏழைக் குடும்பங்களே பணக்காரக் குடும்பங்களுடன் ஒப்பிடும் போது பெருமளவில் பயனடைந்திருப்பதாக நம்பமுடியாததொரு பொய்யைப் பரப்புரை செய்கிறது பொருளாதார ஆய்வறிக்கை..

இந்தியாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வு கடுமையாக அதிகரித்து விட்டதாகவும், பெருஞ்செல்வந்தர்களிடமிருந்தும் வரி விதிக்க வேண்டுமென்றும் ஆக்ஸ்ஃபார்ம் அறிக்கை பரிந்துரை செய்கிறது. பொருளாதார ஆய்வறிக்கை என்ன கூறுகிறது, என்றால், பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்துவதன் மூலமே பொருளாதார மறுபங்கீட்டை சாத்தியமாக்க முடியும் என்றும், இப்போதைய நிலையில் பொருளாதார மறுபங்கீடு சாத்தியமில்லை என்றுமே வாதுரைக்கிறது.

பொருளாதார வளர்ச்சியின் மூலம் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முடியா விட்டாலும், வறுமையைக் குறைக்க முடியும் என்கிறது பொருளாதார ஆய்வறிக்கை. சாதியை ஒழிக்கா விட்டாலும், தீண்டாமையைக் குறைத்தால் போதும் என்பது போன்ற வாதமே இது. வளர்ந்த நாடுகளைப் போலல்லாமல், இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியை (ஜிடிபி) அதிகப்படுத்துவதன் மூலமே சமத்துவமின்மையையும், வறுமையையும் குறைக்க முடியும் என்கிறது பொருளாதார ஆய்வறிக்கை!.

இந்தியாவில் பொருளாதாரத்தை அதிகமாக ஒழுங்குமுறைப்படுத்துவதே திறனற்ற செயல்முறைக்கு காரணமாகிறது என்றும், ஒழுங்குமுறைகளைத் தளர்த்தி, எளிதாக்க வேண்டும் என்றும் தாராளமயப் பரிந்துரையை முன்வைக்கிறது

பொருளாதார வளர்ச்சி (ஜிடிபி) அதிகமாகும் போது கடனின் அளவைக் குறைக்க முடியும். ஆனால் குறைந்த கடனின் மூலம் அதிக வளர்ச்சியை அடைய முடியாது ஆகவே மக்கள் எக்கேடு கெட்டால் என்ன ஜிடிபியை அதிகரிக்கும் பாதையிலே இந்தியா ஓட வேண்டும் என்ற ஆலோசனையே ஆய்வறிக்கை எங்கும் விரவியுள்ளது.

**நிதிநிலை அறிக்கை 2021-22**

முற்றிலும் இணைய வடிவில் நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டதை மட்டுமே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சமாகக் கருத முடியும்.

சர்வாதிகார பாஜக அரசை உண்மையாகப் புகழ்பாடவோ, பாராட்டவோ மக்களோ, எதிர்க் கட்சிகளோ முன்வர மாட்டார்கள் என்பதால் வழக்கம் போல் தற்புகழ்ச்சிக்கான, பிரசாரத்திற்கான வாய்ப்பாக நிதிநிலையறிக்கையை மீண்டும் ஒரு முறை பயன்படுத்தியுள்ளனர்.

பாஜக அரசு சரியான முறையில் பொதுமுடக்கம் செய்ததால்தான் பொருளாதாரமும், வாழ்வாதாரமும், மக்களின் இன்னுயிரும் ஆபத்து நேரிடாமல் காக்கப்பட்டன, இல்லையென்றால் பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கும் என்று நிதியமைச்சர் கூறுகிறார். இதனால்

இந்தியாவில் கோவிட்19 தொற்றால் ஏற்படும் இறப்பு விகிதம் பத்து லட்சம் பேருக்கு 112 என்ற அளவில் மிகவும் குறைந்துள்ளதாகவும், தொற்றின் தாக்கமும் பத்து லட்சம் பேருக்கு 130 என்ற அளவிற்கு மிக மிகக் குறைந்துள்ளதாகவும் இதன் மூலமே பொருளாதார மறுமலர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

மக்களும் எதிர்க்கட்சிகளும் எதிர்த்து வரும் வேளாண் சட்டங்கள், தொழிலாளர் சட்டங்கள், கனிமத்துறையை வணிகமயப்படுத்துதல், உற்பத்தி சார்ந்த சலுகை போன்ற உன்னதமான அமைப்புமாற்றச் சீர்திருத்தங்களை பாஜக அரசு விரைவாகச் செயல்படுத்தியதாக பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

பொது விநியோகம் மூலம் உணவு தானியங்கள் வழங்குதல், விவசாய மானியத் திட்டம், இலவச சமையல் எரிவாயு திட்டம், இவை யாவுமே கோவிட்-19 தாக்கத்திற்கு முன்பிருந்தே செயல்படுத்தப்படும் திட்டங்கள். ஆனால், இவற்றைப் புதிதாக அறிவித்த திட்டங்கள் போல் நிதித் தொகுப்பில் சேர்த்துக் காட்டி பெரிய நிதித் தொகுப்பு அளித்து விட்டதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதை மீண்டும் குறிப்பிட வேண்டியுள்ளது. 27.1 லட்சம் கோடி ரூபாய்க்கு, அதாவது 13% மொத்த பொருளாக்க மதிப்பிற்கு நிதித் தொகுப்பு அளித்துள்ளதாக நிதியமைச்சர் பெருமிதம் கொள்கிறார்! சமூகத்தின் மிகவும் பாதிக்கப்பட்ட பிரிவினரான ஏழைகள், தலித்துகள், பழங்குடியினர், முதியவர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், குழந்தைகளுக்கு வழங்குவதற்காக அளிக்கப்பட்ட பிரதம மந்திரி கரீப் கல்யாண் யோஜனா, மூன்று முறை ஆத்மநிர்பர் யோஜனா என அவர்கள் அளித்த உதவி 5 சிறும நிதி நிலையறிக்கைக்குச் சமம் என்று குறிப்பிட்டுள்ளார்.

பாஜக அரசு 5 விழுக்காட்டிற்கும் குறைவாகவே நிதித்தொகுப்பு அளித்துள்ளது. அதிலும் பெரும்பாலானவை கடன் திட்டங்களே. விவசாய உதவித் தொகையும் (6000 ரூபாய்) உரிய விவசாயிகளுக்கு அளிக்கப்படவில்லை, வருமான வரி செலுத்துபவர்களான தகுதியற்ற பயனாளிகளுக்கே அளிக்கப்பட்டது என்பதே தகவலுரிமைச் சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. ஆண்டிற்கு 6000 ரூபாய் வழங்கும் பிரதம மந்திரி விவசாய நிதித் திட்டத்திற்கு 2021-22 நிதியாண்டில் 15,000 கோடி குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நலனில் சொல்லளவிற்குக் கூட அக்கறை காட்டாத பாஜக அரசு சென்ற ஆண்டைக் காட்டிலும் 2021-22 நிதியாண்டிற்கு 7,474 கோடி குறைவாகவே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சென்ற ஆண்டில் 1.11 லட்சம் கோடி அளிக்கப்பட்ட நூறு நாள் வேலை திட்டத்திற்கு இந்த ஆண்டு, வேலையின்மை கடுமையாக அதிகரித்துள்ள நிலையிலும், அதைக்

காட்டிலும் குறைவாக 73,000 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அமைப்புசாராத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் ஒரு தளத்தை உருவாக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர, அவர்களுக்கு ஓரு ரூபாய் கூட ஒதுக்கப்படவில்லை.

மருத்துவ சுகாதாரத் துறைக்கு 2,23,846 கோடி ஒதுக்குவதாகக் கூறி அதனுடன் நகர்ப்புறங்களுக்குக் குடிநீர் அளிக்கும் ஜல் ஜீவன் திட்டத்தையும், தூய்மை இந்தியா-2 எனப்படும் நகர்புறங்களில் சுகாதாரக் கழிப்பிடங்களை உருவாக்குவதற்கான திட்டத்தையும் கோர்த்து அவற்றையும் மருத்துவ சுகாதாரத் திட்டங்களாகக் காட்டியுள்ளது!. கோவிட்-19 தடுப்பு மருந்துக்காக 35,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய கல்விக் கொள்கையின் படி 6 விழுக்காடு கல்விக்கு ஒதுக்கப்படும் என அறிவித்து விட்டு உயர் கல்விக்கு வெறும் 65,350 கோடி ஒதுக்கியுள்ளது பாஜக அரசு.

பன்னாட்டு நிறுவனங்களுக்கும், இந்தியப் பெருநிறுவனங்களுக்கும் மட்டுமே சலுகை அளிக்கும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான உற்பத்திசார்ந்த உதவித் தொகை 13 துறைகளுக்கு அளிப்பதற்காக 1.97 லட்சம் கோடி ஒதுக்கப்படவுள்ளது. ஆனால் சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு வெறும் 15,699 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியுள்ளது.

**தனியார்மயம்**:

பாரத் பெட்ரோலியம், ஏர் இந்தியா, இந்தியக் கப்பல் கட்டுமான நிறுவனம், இந்திய கன்டெய்னர் கார்ப்பரேஷன், ஐடிபிஐ வங்கி, பிஇஎம்எல், பவன் ஹான்ஸ், நீலாச்சல் இஸ்பத் நிகாம் உள்ளிட்ட பல நிறுவனங்கள் 2021-22இல் தனியார் துறைக்கு விற்கப்படும் என்றும், ஐடிபிஐ வங்கியுடன் மேலும் இரண்டு பொதுத்துறை வங்கிகளும், ஒரு பொதுக் காப்பீட்டு நிறுவனமும் 2021-22இல் தனியார் மயமாக்கப்படவுள்ளது என்றும், மேலும் பொதுத் துறைக் காப்பீட்டு வங்கியான எல்ஐசி பொதுப் பங்கு வழங்கல் மூலம் தனியார் மயமாக்கப்படவுள்ளது என்றும் நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

செயல்படாத சொத்துக்கள் தற்சார்பு இந்தியாவுக்கு (‘ஆத்மநிர்பர் பாரத்திற்கு’) பங்களிக்காது. ஆதலால் முக்கியமற்ற சொத்துக்கள், நிலங்கள் விற்கப்படும் என நிதியமைச்சர் புது விளக்கம் அளித்துள்ளார். தற்சார்பு என்ற பெயரில் முக்கியத் துறைகளில் 4 பொதுத்துறை நிறுவனங்கள் மட்டுமே அரசால் நிர்வகிக்கப்படும் என்றும், மற்ற அனைத்து நிறுவனங்களும் தனியார் மயமாக்கப்படும், முக்கியமற்ற துறைகளில் அனைத்து நிறுவனங்களுமே தனியார்

மயமாக்கப்படும். இதற்கான திட்டத்தை நிதி அயோக் ஏற்படுத்தும் என அறிவித்துள்ளார் i) அணுசக்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்பு ii) போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு iii) மின்சாரம், பெட்ரோலியம், நிலக்கரி, பிற கனிமங்கள் iv) வங்கி, காப்பீடு மற்றும் நிதி சேவைகள் ஆகியவை மட்டுமே முக்கிய துறைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பாஜக அரசு மாநிலங்களையும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்த ஊக்குவிக்கவுள்ளது. 2021-22 நிதியாண்டில் பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதன் மூலம் 1,75,000 கோடி ரூபாய் நிதித் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொது உள்கட்டமைப்பு சொத்துக்களை விற்று நிதித் திரட்டி புதிய நெடுஞ்சாலைத் திட்டங்கள், ரயில்வே திட்டங்களின் மூலம் உள்கட்டமைப்பை மேம்படுத்துகிறோம் என்று அறிவித்துள்ளார். நெடுஞ்சாலைகளை எதற்கு விற்கப்படவுள்ளது? புதிய நெடுஞ்சாலைகளை ஏற்படுத்துவதற்காக! ரயில்வே சொத்துக்களை எதற்கு விற்க வேண்டும் புதிய ரயில்வே தடங்களை உருவாக்குவதற்காக! இதை எந்த விதத்தில் வளர்ச்சி என்று கருத முடியும்? இப்படிப்பட்ட திட்டங்கள் வேண்டுமென்று யார் அழுதார்கள்? யாருக்காக இத்தகைய திட்டங்கள்? பெருமுதலாளிகளைத் தவிர யார் இதனால் பலனடையப் போகிறார்கள்?

உள்கட்டமைப்பில் வளர்ச்சி ஏற்படுத்துகிறோம் என்ற பெயரில் பொதுத்துறைச் சொத்துகளையெல்லாம் விற்று விட்டு, மக்கள் நலன்களுக்கு எந்த விதத்தில் துணை செய்யாத, விளிம்பு நிலை மக்களையும் இயற்கை வளங்களையும் அழிக்கும் நெடுஞ்சாலை திட்டங்களையே செயல்படுத்துகிறார்கள்.

ஏற்கெனவே பாரத்மாலா திட்டத்தில் 13,000 கி.மீ.க்கும் அதிகமான சாலைகள் திட்டம் நடைமுறைபடுத்தப்படுத்தப்பட்டது. தற்பொழுது 2022 மார்ச்சுக்குள் 3,800 கி.மீ தொலைவில் நெடுஞ்சாலைகளை ஏற்படுத்தவும், 11,000 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளின் மூலம் பொருளாதார வழித்தடத்தை ஏற்படுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால் பாஜக அரசு இந்த நான்கு மாநிலங்களின் மீதும் கூடுதல் அக்கறை செலுத்திப் புதிய உள்கட்டமைப்பு திட்டங்களை அறிவித்துள்ளது. புதிய அக்கறையுடன் அசாம், மேற்கு வங்கத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், பெண்கள், குழந்தைகள் நலனுக்காக ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 1.03 லட்சம் கோடி முதலீட்டில் மதுரை-கொல்லம் வழித் தடம், சித்தூர்-தாச்சூர்

வழித்தடம் ஆகியவை உட்பட -3,500 கி.மீ தேசிய நெடுஞ்சாலைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. சென்னை - சேலம் 277 கி.மீ. அதிவேக நெடுஞ்சாலை 2021-22இல் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ விரிவாக்கப் பணிகளுக்கு ரூ.63,246 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் சென்னையில் ஒரு கடற்பாசி பூங்கா அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏற்கெனவே தேவைக்கும் அதிகமாகவே நெடுஞ்சாலைகள் உள்ளன. மக்கள் மீது உண்மையிலே அக்கறை இருந்திருந்தால் பொதுப் பேருந்துப் போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்துவதற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும் ஆனால் வெறும் 18,000 கோடி ரூபாய் மட்டுமே பொதுப் போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கிடப்பட்டுள்ளது. சாலைகளுக்குப் பல லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும் போது பேருந்துகளுக்கு ஆயிரம் கோடிகளிலே ஒதுக்கப்படுகிறது. உண்மையில் பொதுமக்களுக்கான உள்கட்டமைப்புத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதிக எண்ணிக்கையில் பொதுப் பேருந்துச் சேவையை ஏற்படுத்த வேண்டுமே தவிர பெருமுதலாளிகளுக்கு சுங்கவரி பெற்று தரும் நெடுஞ்சாலைகளை அல்ல.

பொதுத்துறை உள்கட்டமைப்புச் சொத்துக்களை விற்பதன் மூலம் புதிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான நிதி திரட்டப்படவுள்ளது. இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் 5,000 கோடி ரூபாய் மதிப்பிலான 5 சாலைகளும், மின் பகிர்மானக் கழகம் (பிஜிசிஜஎல்) 7,000 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும், உள்நாட்டு, அந்நிய முதலீட்டாளர்களுக்கு விற்கப்படவுள்ளது. ரயில்வே துறையில் சரக்கு நடைபாதை, சொத்துக்களை விற்றுப் பணம் திரட்டப்படும் என்றும் விற்காமல் மீதமுள்ள மற்ற விமான நிலையங்களும், அதன் சொத்துக்களும் விற்கப்படும் என ஆரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் செயல்பாட்டிலுள்ள சுங்கவரிச் சாலைகள், கெயில், ஐஓசிஎல், ஹெச்பிசிஎல் ஆகியவற்றின் எண்ணெய், எரிவாயுக் குழாய்கள், பிஜிசிஜஎல், ஏ.ஐ.ஐ விமான நிலையங்களின் சொத்துக்கள், பிற ரயில்வே உள்கட்டமைப்புச் சொத்துக்கள், பொதுத்துறை நிறுவனங்களின் கிடங்குகளான மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம், இந்தியத் தேசிய விவசாயக் கூட்டுறவுக் கூட்டமைப்பு ஆகியவையும், விளையாட்டு அரங்கங்களும் விற்கப்படவுள்ளன.

துறைமுகங்களின் நிர்வாகப் பொறுப்புகள் தனியார்மயமாக்கப்படவுள்ளது. முக்கியத் துறைமுகங்களில் 2,000 கோடிக்கு மேல் மதிப்புள்ள 7 திட்டங்கள், பொது-தனியார்க் கூட்டாண்மை (PPP) முறையில் செயல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த கடப்பாடுள்ள நிறுவனங்களின் (LLP) செயல்பாடுகள் குற்ற நடவடிக்கை விதிமுறைகளிலிருந்து நீக்குவதற்கான செயல்முறை தொடங்கப்படும் என்றும், ஒரு நபர் நிறுவனங்களும் எந்த வரம்புக்குட்படாமல் வளர்வதற்கும் அனுமதிக்கப்படும் என அறிக்கப்பட்டுள்ளது. தொடக்க நிறுவனங்களில் முதலீடுகளுக்கு மூலதன ஆதாய வரிவிலக்கை இன்னும் ஒரு வருடம் நீட்டிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

ஆழ்கடல் கணக்கெடுப்பு ஆய்வுக்காகவும், ஆழ்கடல் உயிர் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதற்கான ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 4,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே பன்முகப் பாதுகாப்பிற்காக கொண்டுவரப்பட்ட திட்டமா? சந்தேகம்தான், புதிய ஆழ்கடல் வளங்களைத் தனியார் நிறுவனங்கள் கொள்ளையடிக்க அனுமதிப்பதற்கான முன்னோட்டமாகத்தான் தோன்றுகிறது.

2021-2022 நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டுத் தொகை 34.83 லட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-21 நிதியாண்டிற்கான மத்திய அரசின் வரிவருவாயும், நிதி ஒதுக்கீடுகளும் நம்பகத் தன்மையில்லாதவாறு அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது,இதே நிலை தான் 2021-22லும் தொடர உள்ளது. இதில் உண்மையில் எவ்வளவு நிதி ஒதுக்கப் போகிறார்கள் என்பதற்கே காலம்தான் பதில் சொல்ல வேண்டும். 2020-21 ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறை மொத்த பொருளாக்க மதிப்பில் 9.5% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021-22ல் நிதிப் பற்றாக்குறை 6.8 விழுக்காடாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021-22 ஆண்டிற்கான மூலதனச்

தோழர் தியாகுவின் அறிவுக்குரல் கேட்க

கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https:www.youtube.com/user/ajanthavalga?fbclid=IwAR0APppP9wjVctyVG1DShVLvQWRKtHOTuuR4g7zwwBeqLE-6zcuyiKZjxoQ

செலவினங்களுக்கு 5.54 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாகவும் இது 2020-2021இல் ஒதுக்கப்பட்டதைக் காட்டிலும் 34.5 விழுக்காடு அதிகம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய உணவுக் கழகத்திற்கு நிதிநிலை அறிக்கைக்கு வெளியே சிறு சேமிப்பு நிதியின் மூலம் கடன் அளிக்கும் செயல்முறையைக் கைவிடுவதாகவும், நேரடியாக நிதிநிலை அறிக்கையின் மூலமே மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிதிச் சிக்கனத்தைக் கடைபிடிக்கும் மத்திய அரசு இன்னும் எத்தனை ஆண்டுகள் இவ்வாறு இந்திய உணவுக் கழகத்திற்கு நிதியளிக்க முன்வரும் என்பதும், இல்லை, பொது வினியோக முறையை நிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

கூட்டுறவுக் கூட்டாண்மை:

2025-2026க்குள் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை 4.5 விழுக்காடாக்க் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாநிலங்களை மட்டும் நிதிப் பற்றாக்குறையை 2023-24க்குள்ளேயே 3 விழுக்காடாக குறைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது நியாயமற்றது.

பதினைந்தாம் நிதி ஆணையத்தின் பரிந்துரையின் படி, மத்திய அரசு நிதியளிக்கக் கூடிய திட்டங்களின் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளது. பதினைந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி மத்திய அரசு வரி வருவாயில் 41 விழுக்காட்டை மாநிலங்களுக்கு அளிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. இது வரை 14ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி 42 விழுக்காடு வரி வருவாய் மாநிலங்களுக்கு அளிக்கப்படவில்லை என்பதே உண்மை. 15ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரைப் படி, 2021-2022இல் மாநிலங்கள் மொத்தப் பொருளாக்க மதிப்பில் 4 விழுக்காடு நிகரக் கடன் பெற அனுமதிக்கப்படும் என்றும் 0.5 விழுக்காடு கூடுதல் கடன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

.வரிவிதிப்பு:

பொருளாதார மந்த நிலையிலும் பெருநிறுவனங்களின் லாபம் அதிகரித்துள்ளது. வருமான ஏற்றத்தாழ்வு, பொருளாதார ஏற்றத்தாழ்வு மிகவும் அதிகரித்துள்ள நிலையில், பெருஞ்செல்வந்தர்களின் நேரடி வரியை அதிகரிப்பதன் மூலமும், சொத்து வரி விதிப்பதன் மூலமும், நேரடி வரி வருவாயை அதிகரித்து மக்களுக்குப் பயனுள்ள முறையில் ஒதுக்கீடு செய்ய முடியும். அதை பாஜக அரசு எப்படிச் செய்யும்? பாஜக அரசு பெருநிறுவன வரியைக் குறைப்பதன் மூலம் பெருமுதலாளிகளுக்கு 1,45,000 கோடி ரூபாய் சலுகை அளித்தது. நேரடி வரிவருவாயைக் குறைத்ததன் மூலம் 23,200 கோடி சலுகை அளித்தது. ரியல் எஸ்டேட் துறைக்கு 20,000 கோடியும், ஏற்றுமதித் துறைக்கு 50,000 கோடியும் நிதிச் சலுகை அளித்தது.

இவ்வாறு 2.5 லட்சம் கோடி அரசு வருவாய் குறையக் காரணமான பாஜக அரசால் எவ்வாறு செல்வந்தர்களின் மீதான வரியை அதிகப்படுத்த முடியும்? நேரடி வரியில் எந்தப் புதிய மாற்றமும் அறிவிக்கப்படவில்லை. வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள் இரட்டை வரிவிதிப்புக்கு ஆளாகமல் இருக்க புதிய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**ஊக்குவிக்கப்படும் நிதிமயமாக்கம்:**

உண்மையான பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்காத பாஜக அரசு ஏற்கெனவே ஊதிப் பெருத்திருக்கும் நிதித் துறையையும், பங்குச் சந்தையையும் மேலும் பெருக்க வைக்கவே மேலும் மேலும் சலுகைகளை வழங்கி வருகிறது. குஜராத் காந்திநகர் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரம், (கிஃப்ட்) எனப்படும் சர்வதேச நிதிச் சேவை மையத்தில் புதிய நிதித் தொழில்நுட்ப மையத்தை ('ஃபின்-டெக் மையம்') ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பெருமுதலாளிகள் கடன் பத்திரங்களின் மூலம் நிதிபெறுவதை எளிமைப்படுத்தும் விதமாகக் கடன்பத்திரச் சந்தையும், நிதித் தொடக்க நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படும். குஜராத்தின் சர்வதேச நிதிச் சேவை மையத்தில் முதலீடு செய்யப்படும் வெளிநாட்டு நிதிகளுக்கு வரிச் சலுகையும்; அதில் அமைந்துள்ள வெளிநாட்டு வங்கிகளின் முதலீட்டுப் பிரிவுக்கு வரிவிலக்கும் அளிக்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

இந்தியப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு எளிதில் நிதிச் சேவை பெறுவதற்கான எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை.

காப்பீட்டு நிறுவனங்களில் அந்நிய நேரடி முதலீட்டு (எஃப்.டி.ஐ) வரம்பு 49 சதவீதத்திலிருந்து 74 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. உள்கட்டமைப்புக்கான முதலீட்டு நிதி நிறுவனம், ரியல் எஸ்டேட்டு முதலீட்டுக்கான நிதி நிறுவனம் ஆகியவற்றுக்குக் கடன் அளிக்க வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்களை ஈர்க்கும் விதமாக சட்ட மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செபி சட்டம், 1992, வைப்புத் தொகைச் சட்டம், 1996, பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956 மற்றும் அரசாங்கப் பத்திரங்கள் சட்டம், 2007 ஆகியவற்றின் நெறிகளை ஒருங்கிணைத்து ஒற்றை நெறியாக மாற்றி நிதிமூலதனச் சந்தையை ஊக்கப்படுத்தவும், நிதி வர்த்தகத்தை மேலும் எளிமைப்படுத்தவும் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் பங்குச் சந்தை முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக ஈவுத் தொகை விநியோக வரி விலக்கப்பட்டது. இந்த ஆண்டில் உள்கட்டமைப்பு நிதி முதலீட்டுப் பங்குகள், ரியல்

எஸ்டேட் நிதி முதலீட்டுப் பங்குகளில் முதலீடுகளை ஊக்குவிக்க முதலீட்டாளர்களுக்கு நேரடிப் பிடித்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பங்குகளுக்கு அளிக்கப்படும் ஈவுத் தொகை வருவாயை வரி செலுத்துவதற்காக முன்கூட்டியே மதிப்பிட முடியாது என்பதால், ஈவுத் தொகை அறிவிக்கப்பட்ட பிறகே வரி செலுத்துவதற்கான கடப்பாடு, ஏற்படும் என நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஈவுத் தொகை வருவாய் மீது மிகக் குறைந்த வரியே விதிக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். உள்கட்டமைப்புத் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்காக வெளிநாட்டு இறையாண்மைக் கருவூல நிதிகள், ஓய்வூதிய நிதிகளுக்கு முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருவாயில் 100% வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்நிய முதலீடுகளை மேலும் ஊக்கப்படுத்தும் விதமாக முதலீடுகளுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் - தனியார் நிதி மீதான தடை, வணிக நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடு, உள்கட்டமைப்பில் நேரடி முதலீடு தொடர்பான நிபந்தனைகள் - முதலீட்டாளர்களுக்கு சிரமம் அளிப்பதால் அவை தளர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார். அந்நிய முதலீடுகளுக்கு பூஜ்ஜிய வரிக் கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான நிதிக் கடனைத் திரட்ட அனுமதித்துள்ளார்.

வீட்டுக் கடன் பெறுவதில் 1.5 லட்சம் ரூபாய்க்கு வருமான வரிச் சலுகை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. சந்தை விலையை விட 10 விழுக்காடு குறைந்த விலைக்கு வீடுகளை வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் வரிச் சலுகை அளிக்கப்பட்டது, இப்பொழுது இச்சலுகை 10-20 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது. மலிவு வீடுகள் கட்டமைப்புத் திட்டங்களை ஊக்குவிக்க ஒரு வருடம் வரிவிலக்கு அளித்துள்ளார். இதன் மூலம் லாபமடையப் போவது ரியல் எஸ்டேட் நிறுவனங்களே தவிர எளிய மக்களுக்கு இதனால் மலிவு விலையில் வீடுகள் கிடைக்கப் போவதில்லை.

விமானங்களை வாடகைக்கு விடும் நிறுவனங்களுக்கு மூலதன ஆதாயங்களுக்கான வரிவிலக்கும், வெளிநாட்டுக் குத்தகைதாரர்களுக்குச் செலுத்தப்படும் விமானக் குத்தகை வாடகைகளுக்கான வரிவிலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உற்பத்தியாளர்கள் கார்டெல் போல் செயல்பட்டு உலோக மூலப் பொருட்களின் விலையைக் கடுமையாக உயர்த்தியுள்ளதால் அதை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும் என சிறு குறு நிறுவனங்கள் போராடி வருகின்றன. பாஜக ஆரசு உரிய முறையில் அதை ஒழுங்குமுறைக்கு உட்படுத்தாமல் இறக்குமதியை ஊக்குவிக்கும் வகையில் உலோக

மூலப்பொருட்களுக்கான இறக்குமதி வரியை இப்போது குறைத்துள்ளது. இது ஒரு நீடித்த தீர்வாக அமையாது. இரும்பு, எஃகு, தாமிரக் கழிவுகள் ஆகியவற்றின் இறக்குமதி வரியைக் குறைத்துள்ளது. தங்கம், வெள்ளி, பிளாட்டினம் மீதான சுங்க வரியையும் குறைத்துள்ளது இதன் மூலம் இறக்குமதிக் கட்டணத்தின் மதிப்பு கடுமையாக அதிகரிக்கவுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க மின்னணு உபகரணங்கள், உதிரிப் பாகங்கள், சூரிய ஒளி மின்தகடுகள் போன்ற பொருட்களின் மீதான இறக்குமதி வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாய உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நிதி திரட்ட புதிய கூடுதல் வரி (செஸ்) விதிக்கப்பட்டுள்ளது. தங்கம், வெள்ளி இறக்குமதி மீது 2.5% வரியும், பெட்ரோல், டீசல் மீதான கூடுதல் உற்பத்தி வரி குறைக்கப்பட்டு அதற்குப் பதில் ஒரு லிட்டர் பெட்ரோல் மீது 2.5 ரூபாயும், ஒரு லிட்டர் டீசல் மீது 4 ரூபாயும் விவசாய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வரியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

மதுபானங்கள் (100%), பாமாயில் (17.5%), சோயாபீன், சூரியகாந்தி எண்ணெய் (20%), ஆப்பிள் (35%) நிலக்கரி, லிக்னைட் மற்றும் கரி (1.5%), உரம் (யூரியா) (5%), பட்டாணி (40%) போன்ற பல பொருட்களின் மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டு, குறைக்கப்பட்ட அளவிற்கு விவசாய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வரியும் சேர்க்கப்பட்டுள்ளதால் இறக்குமதி விலையில் மாற்றம் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த விவசாய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வரி மூலம் திரட்டப்படும் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. விவசாயத் துறையை பெருநிறுவனங்களின் ஏகபோகமாக்கவே அரசு மூன்று விவசாயச் சட்டங்களைக் கொண்டுவந்துள்ளது. டெல்லியிலும், இந்தியா முழுவதும் போராடும் விவசாயிகளின் கோரிக்கைகளை புறக்கணித்து விட்டு விவசாயத் துறையை மேம்படுத்தப் போவது போல் ஒரு கண்துடைப்பு நாடகத்தை நடத்தவே இந்த விவசாய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வரியைக் கொண்டுவந்துள்ளது.

மொத்தத்தில் பொருளாதார மந்தநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. நூறு நாள் வேலை திட்டத்திற்கே குறைவாகத்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்கள், விவசாயிகளின் துயர் துடைக்க எந்த திட்டமும் இல்லை. மக்களின் நுகர்வை ஊக்குவிக்கவும் எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை.

பெருமுதலாளிகளுக்குச் சாதகமான பங்குச் சந்தைகளை மையப்படுத்திய நிதிமயமாக்க அறிக்கையால் நாம் மீண்டும் வஞ்சிக்கப்பட்டுள்ளோம்.

**நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சொல்கிறது: சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த ஐநா பாதுகாப்பு அவையில் ஆதரவு இல்லை என்று கூறியிருப்பதை பிரித்தானியா தெளிவுபடுத்த வேண்டும்.**

உருசியமும் சீனமும் சிரியா நாட்டு அரசாங்கத்தின் மீதான நடவடிக்கைகளைத் தடுக்கப் பதினான்கு முறை தங்கள் தங்கள் தடுப்பதிகாரத்தைப் பயன்படுத்தி விட்டன."
-- நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் (நாகதஅ)

புது யார்க், அமெரிக்க ஐக்கிய நாடுகள், 2021 மார்ச் 10 -

சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க மறுத்துள்ள பிரித்தானியா "ஐநா பாதுகாப்பு அவையில் போதிய ஆதரவு இல்லை" என்று அதற்குக் காரணஞ்சொல்லியிருப்பதை விளக்கப்படுத்த வேண்டும் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

சிறிலங்கா உரோமாபுரிச் சட்டத்தில் ஒப்பமிட்டுச் சேரவில்லை என்பதால் அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் மேலுரிமைக்கு உட்படாது என்றும், சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் கருத்துக்குத் தேவையான ஐநா பாதுகாப்பு அவை உறுப்பரசுகளின் ஆதரவு கிடைக்காது என்றும் பிரித்தானியா விடாப்பிடியாக நிலையெடுத்துள்ளது.

"சிறிலங்கா உரோமாபுரிச் சட்டத்தில் ஒப்பமிட்டுச் சேர்ந்த ஒரு தரப்பாக இருந்திருக்குமானல் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நேராகவே அனைத்துலகக் குற்ற்றவியல் நீதிமன்றத்தின் வழக்குத் தொடுப்பரிடம் சான்றியத்தை அளித்திருக்குமே தவிர, மனிதவுரிமைப் பேரவையோ பிரித்தானிய அரசாங்கமோ இதில் தலையிட வேண்டி ஏற்பட்டிருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்."

சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் யோசனைக்கு ஐநா பாதுகாப்பு அவையில் போதிய ஆதரவு இல்லை என்று பிரித்தானிய அரசாங்கம் சொல்லிக் கொள்வது எப்படி என்றும் எமக்கு விளங்க வில்லை. இந்தச் சிக்கலை அந்த அவையில்

விவாதிப்பது இருக்கட்டும், கிளப்பவே கூட இல்லை என்பதால் இப்படிச் சொல்கிறோம்.

உண்மையில், சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் முயற்சியைத் தடுக்கத் தமது தடுப்பதிகாரத்தைப் பயன்படுத்துவோம் என்று ஐந்து நிரந்தர உறுப்பரசுகளில் எதுவும் சுட்டியதாகப் பதிவேதும் இல்லை.

ஆகவே, "ஐநா பாதுகாப்பு அவையில் போதிய ஆதரவு இல்லை" என்று பிரித்தானிய அரசு கூறியிருப்பது அப்பட்டமான தீச்செயல் என்று சொல்ல முடியா விட்டாலும், உயர்ந்தபட்சமாக அவசரப் போக்கு, குறைந்தபட்சமாக ஆதாரமற்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

"சிறிலங்காவை அனைத்திந்தியக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு ஐநா பாதுகாப்பு அவைக்குள் எதிர்ப்பேதும் இருப்பதாக பிரித்தானியாவுக்குத் தகவல் கிடைத்திருந்தால் அது விவரங்களைப் பொதுவில் வைக்க வேண்டும். ஐநா பாதுகாப்பு அவையில் தடுப்பதிகாரம் படைத்த நிரந்தர உறுப்பு நாடு என்ற முறையில் பிரித்தனியாவுக்குள்ள நம்பகத்தன்மையைக் காக்க இது பெரிதும் பயன்படும்."

பாதுகாப்பு அவையில் எதிர்ப்பு இருக்கும் என்று பிரித்தானிய அரசாங்கம் ஊகித்துக் கொண்டிருப்பது தொடர்பாக, ஆசியாவுக்கும் பசிபிக்குக்குமான நிழல் அமைச்சர் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் கின்னாக் ஆசியாவுக்கான அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் நைஜல் ஆதாம்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இப்படிக் கூறியிருப்பது நோக்கற்பாலது: "பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்பரசுகளில் இரண்டு சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் முன்மொழிவு வந்தால் அதனைத் தடுப்பதிகாரம் கொண்டு தடுக்க வாய்ப்புண்டு என்றாலும், இதனை முயற்சி செய்வதற்கு எதிரான வாதுரையாக ஏற்க முடியாது."

ஐநா பாதுகாப்பு அவையில் பிரித்தானிய அரசின் அணுகுமுறையை அந்த அவையின் நிரந்தர உறுப்பரசுகளில் இரண்டின் தடுப்பதிகார நோக்கங்களே தீர்மானிக்க விடலாகாது.

"அமெரிக்க அயலுறவு அமைச்சர் அந்தோணி பிளிங்கன் 'ஃபாரின் பாலிசி'யில் எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருப்பது போல், பாதுகாப்பு அவையின் இரு உறுப்பரசுகள் தடுப்பதிகாரத்தைப்

பயன்படுத்துவது குடியாட்சிய ஆற்றல்கள் அனைத்தும் ஐநாவைச் சாராமல் நடவடிக்கை எடுக்க ஊக்கமூட்டும் என்பதே நாம் சுட்டிக்காட்ட விழைந்திடும் உண்மை."

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஈண்டு சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கும் மனிதவுரிமைப் பேரவையின் வேண்டுகோள் பாதுகாப்புப் பேரவையில் தடுப்பதிகாரம் கொண்டு தடுக்கப்பட்டு விட்டாலும் கூட, அது சிறிலங்காவின் வடக்கு-கிழக்குப் பகுதியில் மனிதவுரிமை உயராணையர் அலுவலகம் ஒன்றைத் திறப்பது போன்ற பிற தீர்மானப் பொருட்பாடுகள் மீதான உயராணையர் அலுவலகத்தின் மேலுரிமையை இல்லாமற்செய்து விடாது.

இப்போது ஐநா மனிதவுரிமை உயராணையராக இருந்து வரும் மிசேல் பசலே அம்மையார் 2021 சனவரி 27 நாளிட்ட தமது அறிக்கையில் ஐநா மனிதவுரிமைப் பேரவையின் உறுப்பரசுகள் செய்ய வேண்டியது என்ன என்பதை வலியுறுத்தியுள்ளார். நாட்டில் மோசமான மனிதவுரிமை மீறல்கள் நடந்திருப்பதைக் கருத்தில் கொண்டு சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு ஆவன செய்யக் கோரினார். மூத்த முன்னாள் ஐநா அதிகாரிகள் இருபது பேர் இதேபோல் கோரிக்கை வைத்துள்ளனர். இவர்களில் நான்கு முன்னாள் மனிதவுரிமை உயராணையர்களும், ஒன்பது தற்சார்பான ஐநா வல்லுநர்களும், ஐநா பொதுச் செயலர் அமைத்த சிறிலங்கா தொடர்பான வல்லுநர் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் அடங்குவர், "பிணக்கின் விதைகளை விதைத்தல்" என்ற தலைப்பில் 2021 பிப்ரவரி 18ஆம் நாள் வெளியிட்ட கூட்டறிக்கையில் அவர்கள் கூறினார்கள்: "...சிறிலங்கா தன் நீதிநிறுவனங்களைத் தன்னாட்டின் பாதிப்புற்றோர்க்கே கிடைக்காமல் செய்து விட்டது என்பதே உண்மை".

சிறிலங்கா தீவு நாட்டில் உள்ள தமிழ்த் தலைவர்களும் 2021 சனவரி 15ஆம் நாள் ஐநா மனிதவுரிமைப் பேரவை உறுப்பரசுகளுக்குக் கூட்டாக எழுதிய மடலில் அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் சிறிலங்காவை நிறுத்த ஒப்புக் கொள்ளுமாறு கோரினார்கள். வடக்கு-கிழக்கு குடியியல் சமூகம் அண்மையில் ஒழுங்கு செய்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் பத்தாயிரக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டு இந்தக் கோரிக்கைகளுக்கு உரம் சேர்த்தார்கள்.

"சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தாமல் விடுவது

வன்கொடுமைக் குற்றம்புரிவோர் நீதியின் பிடியிலிருந்து நழுவுவதற்கு வழி திறப்பதோடு, சிறிலங்காவின் அரசியல் தலைவர்களும் பாதுகாப்புப் படைத் தலைவர்களும் நீதிக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவையே இருக்காது என்று நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டு தயக்கமே இல்லாமல் தமிழ் மக்களுக்கு எதிராக மேலும் பன்னாட்டுக் குற்றங்கள் புந்திடத் துணிவூட்டுவதாகவும் அமைந்து விடும்" என்று பொத்துவில்-பொலிகண்டி அறைகூவல் வேண்டுகோள் எச்சரித்தது.

வரைவுத் தீர்மானத்தில் இப்போதுள்ள கூறு சிறிலங்கா அரசாங்கம் உள்ளகச் செயல்வழியைக் கடைப்பிடிக்கும் படி கோருவதைக் காட்டிலும், சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவது ஒருவேளை தடுப்பதிகாரத்தினால் தடுக்கப்படுவதும் கூட மேலாகவே இருக்கும் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நம்புகிறது. இவ்வாறான கடுங்குற்றங்களைப் புலனாய்வு செய்து வழக்குத் தொடரும் பொறுப்பை அதே சிறிலங்க அரசின் கையில் ஒப்படைப்பது என்பது குற்றஞ்சாட்டப்பட்டவரே ஒருபோதும் நீதிபதியாக முடியாது என்ற அடிப்படையான நீதிக் கொள்கையோடு அப்பட்டமாக முரண்படுவதாகும்.

இன்று கசப்பான உண்மை என்னவென்றால், சிறிலங்கா அரசும் அரசாங்கமும் அதன் நிறுவனங்களும் - அதன் அரசியல் சமூகமே - பரந்து புரையோடிய இனவாதத்தில் களையவொண்ணாத படி வேர்கொண்டு இயங்குகின்றன. சிறிலங்கத் தீவுநாட்டில் தமிழர்கள் நீதி பெற எவ்வித வெளியும் இல்லை எனபது வியப்புக்குரியதன்று.
அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவுவதில் முன்னுக்கு நின்ற நாடாகிய பிரித்தானியா இன்று தனக்குத் தானே ஐயுற்று, தன் அற வலிமையைத் துறந்து, இனழிப்புக்கும் மானிடப் பகைக் குற்றங்களுக்கும் போர்க் குற்றங்களுக்கும் இரையானவர்களுக்கு நீதி தேடும் இந்த முக்கிய மேடையைப் பயன்படுத்த இறுதித் தருணத்தில் தயங்குவது பெரிதும் வருத்ததிற்குரியது,

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் (நாகதஅ)

# ஏற்றம் பெறுவது ஏற்றத்தாழ்வு மட்டுமே

சமந்தா

கோவிட்-19 தொற்றின் தாக்கம் உலகளவிலும் இந்தியாவிலும் பொருளாதாரத்தை மேலும் முடக்கிப் போட்டதுடன் நாட்டின் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் கடுமையாக அதிகரித்துள்ளது. இந்தியப் பொருளாதாரம், 'கே' வடிவப் பொருளாதார மீட்சியை நோக்கிச் செல்வதாகச் சிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இது உண்மையான பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியைக் குறிப்பிடவில்லை. வருவாய் அடிப்படையிலான வளர்ச்சி மாற்றத்தையே 'கே' வடிவக் குறியீடு குறிப்பிடுகிறது. ஒரு பக்கம் பெரும்பாலான உழைக்கும் மக்கள் வேலையிழந்து, கூலியிழந்ததால் அவர்களின் வருவாய் குறைந்துள்ளது. இன்னொரு பக்கம் பெருஞ்செல்வந்தர்களின் செல்வ மதிப்பு அதிகரித்துள்ளது. 'கே' (K) வடிவத்தில், ஒரு அம்பு மேற்புறம் அதிகரித்துச் செல்கிறது, மற்றொன்று கீழ்ப்புறமாகத் தாழ்ந்து செல்கிறது. அது போலவே, நாட்டின் ஒரு தரப்பு மக்களின் செல்வ வளம் மேல்நோக்கி உயர்ந்தும், மற்றொரு தரப்பு மக்களின் பொருளாதார நிலை கீழ்நோக்கிச் செல்வதையும் குறிக்கிறது. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாவதையும், ஏழை, நடுத்தர மக்கள் மேலும் ஏழைகளாவதையுமே குறிக்கிறது. பொருளாதார நெருக்கடிகளும் கூட செல்வந்தர்களின் சொத்துகளை அதிகரிப்பதற்கான வாய்ப்பாகவே மாற்றப்படுகின்றன.

2019-20ஆம் ஆண்டில் இந்தியாவில் சேவைத் துறை, உற்பத்தித் துறை, வர்த்தகம், சுற்றுலாத் துறை, கல்வித் துறை ஆகியவற்றில் அதிக வேலையிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உற்பத்தித் துறையில் மட்டும் 1.14 கோடி வேலை இழப்புகள் ஏற்பட்டுள்ளன. 2020 டிசம்பர் வரை வேலைவாய்ப்பு வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட 40 வயதிற்குட்பட்டவர்களில் 80% 20 வயதுகளில் உள்ளவர்கள். 2009 பொருளாதார மந்தநிலையின் போது ஏற்பட்ட இழப்புகளைப் போல் கோவிட் தொற்றுநோயினால் நான்கு மடங்கு அதிக இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று ஐ.நா. அறிக்கை தெரிவித்துள்ளது.

பங்குச் சந்தைகள் 2020ஆம் ஆண்டில் புதிய உச்சம் தொட்டுள்ளன. இந்தியாவில் பட்டியலிடப்பட்ட அனைத்து நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சந்தை மூலதனம் 2010க்கு பிறகு முதல் முறையாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. இந்தியாவின் பங்குச் சந்தை மூலதனத்திற்கும் உள்நாட்டுப் பொருளாக்க மதிப்புக்கும் இடையிலான விகிதம் 100 விழுக்காட்டைத் தாண்டியுள்ளது. பங்குச் சந்தை

நிலவரம், உண்மையான பொருளாதார நிலையை வெளிப்படுத்துவதில்லை. பங்குச் சந்தையில் ஏற்படும் ஏற்றங்கள் உண்மையான பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சியைக் குறிப்பதில்லை, பங்குகளின் விலையேற்றத்தையே குறிக்கிறது. உண்மையான பொருளாதாரத்துக்குச் சற்றும் பொருந்தாத வகையில் பங்குச் சந்தைகள் ஏற்றம் கண்டுள்ளன. உலகெங்கும் மத்திய வங்கிகள் பொருளாதார மீட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மலிவுப் பணக் கொள்கையைக் கடைபிடிப்பதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. வளர்ந்த நாடுகளின் வங்கிகள் 0% வட்டிக்குக் கடன் அளிக்கின்றன. வளரும் நாடுகளில் அதை விட அதிக வட்டியில் கடன் அளிக்கப்படுவதால் இந்த வட்டி வேறுபாடுகளின் மூலம் லாபம் ஈட்டவே பெருமளவில் அந்நிய முதலீடுகள் வளரும் நாடுகளின் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்யப்படுகின்றன. பங்குகளின் விலைக்கும் வருவாய்க்கும் இடையிலான விகிதம் (P/E Ratio) தற்போது கணிசமாக உயர்ந்துள்ளது. பங்குச் சந்தையில் பங்குகளின் மூலம் பெறும் வருவாயின் அளவும் குறைந்துள்ளது. லாபமும் வீழ்ந்துள்ளது. ஆனால் பங்குகளின் விலை மட்டும் எகிறிக் கொண்டே போகிறது. நடுத்தர வர்க்கத்திலிருந்து, பணக்காரர்கள் என அனைத்துத் தரப்பு நிதி முதலீட்டாளர்களும், பொருளாதாரம் நெருக்கடியில் உள்ள காலக்கட்டத்தை பங்குகளைக் குறைந்த விலையில் வாங்குவதற்கான வாய்ப்பாகக் கருதி அதிக அளவில் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்யும் போக்கு உள்ளது. இந்தியப் பங்குச் சந்தைகளில் மட்டும் புதிதாக 1 கோடிப் பேர் பங்குகளில் முதலீடு செய்யக் கணக்குகள் திறந்துள்ளனர். இவ்வாறுதான் பங்குச் சந்தைக் குமிழி தூண்டப்படுகிறது. வட்டிவீதம் குறைந்திருக்கும் வரை பங்குச் சந்தைப் பங்குகளின் விலை உள்ளார்ந்த மதிப்புக்குப் பொருத்தமில்லாத அளவிற்குக் குமிழி போல் பெருக்கமடைகிறது. வளர்ந்த நாடுகளின் வங்கிகளில் வட்டிவீதம் அதிகரிக்கப்படுமானால், பங்குச் சந்தைகளில் பங்குகளின் விலை மட மடவென்று சரிந்து பங்குச் சந்தைக் குமிழி உடையும்; இந்தக் கடைசி நேரத்தில் அதிக விலை கொடுத்துப் பங்குகளை வாங்குவோருக்குப் பெரும் இழப்பு ஏற்படும்.

கோவிட்-19 நெருக்கடியில் மருத்துவ நிறுவனங்கள்தான் அதிக லாபம் ஈட்டியுள்ளன. 2020இல் இந்தியாவின் மருந்து / சுகாதாரப் பராமரிப்புத் துறையில் 7 புதிய பெரும் பணக்காரர்கள் உருவாகியுள்ளனர். கடந்த ஆண்டு 10ஆக இருந்த இவர்களின் எண்ணிக்கை இப்போது 17ஆக உயர்ந்துள்ளது. இவர்கள் ரூ. 4.35 லட்சம் கோடி சொத்துச் சேர்த்துள்ளனர்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இரண்டு வகையான மூலதனத் திரட்டல் காணப்படுகிறது. பங்குச் சந்தையின் மூலம் மூலதனம் திரட்டப்படுவதை நிதி மூலதனத் திரட்டல் எனலாம், இது

இரண்டாம் வகையான மூலதனத் திரட்டல். இதன் மூலம் திரட்டப்படும் மூலதனம் அனைத்துமே உற்பத்தித் திறனுள்ள முறையில் முதலீடு செய்யப்படுவதில்லை. அதுவும் லாபம் பெறுவதற்கான வாய்ப்பு இல்லாத இது போன்ற பொருளாதார மந்த நிலையில் முதலீடு செய்யப்படும் மூலதனத்தின் அளவு மிகவும் குறைவாகவே காணப்படும். அப்படி என்றால் முதலாளித்துவச் சமூகத்தில் உண்மையான / முதன்மையான மூலதனத் திரட்டல் எங்கு நடைபெறுகிறது? நிச்சயமாக நிதித் துறைகளில் அல்ல. உற்பத்தித் துறைகளில் உழைப்பாளரின் ஊதியமற்ற உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் திரட்டப்படும் உபரிமதிப்பின் திரட்டலே உண்மையான / முதன்மையான மூலதனத் திரட்டல் ஆகும். உபரி மதிப்பிலிருந்தே லாபம் பெறப்படுகிறது.

பங்குச் சந்தையின் சந்தை மூலதனத்தின் மொத்த மதிப்புமே உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்படுவதில்லை. சந்தை மூலதன மதிப்பிற்கும், உற்பத்தித் துறையில் செய்யப்படும் மூலதன மதிப்பிற்கும் இடையிலான வேறுபாடே நிதிமுதலீட்டாளர் லாபம் என்று பொருளாதார அறிஞர் ஹில்ஃபெர்டிங்க் வரையறுத்துள்ளார். இதிலிருந்தே, நிறுவனங்களின் முதன்மைப் பங்குதாரர்களும், நிதி நிறுவனங்களும், இடைத்தரகர்களும் பெரும் லாபம் அடைகிறார்கள். நீண்ட கால அளவில் மட்டும்தான் பங்குச் சந்தை நிலைகள், மூலதனத் திரட்டலுக்கான சுழற்சியுடன் ஒத்துப் போகின்றன. குறுகிய கால அளவில் செய்யப்படும் ஊக முதலீடுகளே இந்த வேறுபாடு ஏற்படக் காரணமாகின்றன. இந்த ஊக முதலீடுகளைக் கட்டுப்படுத்தவும், நிதிச் செயல்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தவும் வரிகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக டோபின் என்ற பொருளாதார அறிஞர் நாணயப் பரிவர்த்தனைகளில் செய்யபடும் ஊக முதலீடுகளைத் தடுக்க ஒரு வரிமுறையை முன்மொழிந்தார் இது டோபின் வரி என அழைக்கப்படுகிறது. ஆனால் இந்த வரிவிதிப்பினால் நிதித் துறையின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்று சொல்லி அது நடைமுறைபடுத்தப்படாமல் தடுக்கப்படுகிறது.

மொத்தத்தில் வங்கிகளின் மலிவுப் பணக் கொள்கையின் மூலம் ஊக நிதி முதலீடுகளே அதிகரித்துள்ளன. யாருக்குப் பண உதவி தேவையோ, யாரைக் கடன் நிதி சென்றடைய வேண்டுமோ அவர்களை அது சென்றடையவில்லை. சிறு குறு நிறுவனங்கள் கடன் கிடைக்காமல் தவித்து வருகின்றன. வங்கிகளில் வைப்புத் தொகை அதிகரித்துள்ள போதும் வங்கிகள் கடனளிப்பதில் மிகவும் எச்சரிக்கையாகச் செயல்படுவதால் தேவைப்படுபவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லை. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இது ஒன்றும் புதிதல்ல. முதல்

முறை இத்தகைய விளைவுகள் ஏற்பட்டிருந்தால் ஏதோ தெரியாமல் செய்து விட்டார்கள் என்று கருத முடியும். ஆனால் இவர்களின் வங்கிக் கொள்கையால் இப்படிப்பட்ட விளைவுகள்தான் ஏற்படும் என அறிந்திருந்தும் மீண்டும் மீண்டும் செக்கு சுற்றுவது போல் அதே கொள்கையையும், நடைமுறையையும் கடைபிடிப்பதால், பொருளாதார மீட்சி ஏற்படுவதுதான் தாமதப்படுத்தப்படுகிறது. .முதலாளித்துவம் என்ற பாழுங்கிணற்றின் பணக் கொள்கைகள் மக்களைப் பாதாளத்தில்தான் தள்ளுகின்றன. இதை அறிந்தும் அறியாதது போல் ஆளும் வர்க்கம் தன் சொத்துக்களைக் காத்தும் வளர்த்தும் வருகிறது.

உலகப் பொருளாதார மாநாட்டில் ஆக்ஸ்ஃபாம் நிறுவனம் சமநிலையற்ற சமூகத்தை உருவாக்கிய வைரஸ் என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டது. இந்த கரோனா வைரஸ் உருவாக்கிய பொருளாதாரச் சிக்கலைக் கடந்த 1930ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப் பெருமந்தத்தோடு ஒப்பிடலாம் எனவும் சுகாதாரம், மருத்துவ வசதிக்குக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கும் நாடுகளில் உலக அளவில் இந்தியா 4ஆவது இடத்தில் இருக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளது. கரோனா வைரஸ் பரவலைத் தடுக்க கொண்டுவரப்பட்ட பொது முடக்கக் காலத்தில் இந்திய கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு 35 சதவீதம் உயர்ந்து ரூ.12.97 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது என ஆக்ஸ்ஃபாம் ஆய்வு தெரிவிக்கிறது.

பொது முடக்கக் காலத்தில் முகேஷ் அம்பானி ஒரு மணி நேரத்தில் ஈட்டியதைத் தேர்ச்சிபெறாத ஒரு தொழிலாளி ஈட்ட வேண்டுமானால் 10 ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படுமாம். முகேஷ் அம்பானி ஒரு வினாடியில் ஈட்டுவதை எளிய மக்கள் ஈட்ட 3 ஆண்டுகள் தேவைப்படும். 2020 ஏப்ரல் மாதத்திலிருந்து ஒரு மணி நேரத்துக்கு 1.70 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். அம்பானி கரோனா 'லாக்டவுன்' காலத்தில் ஈட்டிய தொகை அமைப்புசாராத் துறையில் உள்ள 40 கோடிப் பணியாளர்களை வறுமையில் தள்ளும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமைப்புசாராத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக 12.20 கோடி மக்கள் வேலையிழந்துள்ளார்கள். இதில் 75 சதவீதத்தினர், அதாவது 9.20 கோடிப் பேர் அமைப்புசாராத் துறையைச் சேர்ந்தவர்கள். 2020 ஏப்ரல் மாதத்தில் மட்டும் 17 கோடிப் பெண்கள் வேலையிழந்துள்ளார்கள்.

இந்தியாவின் முதல் 11 கோடீஸ்வரர்கள் கரோனா காலத்தில் பெருக்கிக் கொண்ட சொத்தில் குறைந்தபட்சமாக ஒரு சதவீதம் வரி விதித்தாலே விளிம்புநிலை மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் மருந்து மாத்திரைகள் வழங்கும் மத்திய அரசின் 'ஜன் அவுஷதி' திட்டத்துக்கு 140

மடங்கு நிதி ஒதுக்க முடியும். இந்த வரியைக் கொண்டு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு அடுத்த 10 ஆண்டுகளுக்கு வேண்டிய நிதி ஒதுக்கலாம், அல்லது சுகாதாரத் துறைக்கு 10 ஆண்டுகளுக்கு வேண்டிய நிதி ஒதுக்கலாம் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் நேரடி வரியை அதிகப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையே ஆக்ஸ்ஃபாம் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால் அரசு நேரடி வரியில் சலுகைகள் அளித்த பிறகும் கூட 2020இல் நேரடி வரி வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒட்டுமொத்த வரி வருவாயில் மறைமுக வரிகளின் பங்கு சுமார் 56 சதவீதம் அதிகரித்துள்ளது, நேரடி வரி வருவாய் 26-27 சதவீதம் சரிவடைந்துள்ளது.

பங்குச் சந்தைகள் உச்சத்தைத் தொட்ட போதும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மதிப்பு குறைந்துள்ளது. மத்திய அரசு பொதுத் துறை நிறுவனங்களிடம் அதிக ஈவுத் தொகை அளிக்குமாறு வலியுறுத்தி வருகிறது. பிற பங்குகளின் சந்தை மூலதனம் 18 சதவீத உயர்வடைந்த போதும் 2020ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து பொதுத் துறை நிறுவனங்களின் சந்தை மூலதனம் 16.6 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

முதலீட்டு மற்றும் பொது சொத்து மேலாண்மைத் துறை (DIPAM) உலக வங்கியுடன் இணைந்து சொத்து பணமாக்குதல் குறித்த திட்டங்களை விவாதிப்பதற்கும் பொதுத் துறை நிறுவனங்களின் முக்கியமற்ற சொத்துகளின் விற்பனையை விரைவுபடுத்துவதற்கும் முதல் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியுள்ளது. முக்கியமற்ற சொத்துகளை ஏலம் விட ஒரு மின்-ஏலத் தளம் தொடங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்தச் சொத்துகளில் ரூ. 100 பில்லியன் மதிப்புள்ள உபரி நிலம், பொதுத் துறைப் பயன்பாட்டு (பி.எஸ்.யூ) சொத்துகள் அடங்கும்.

வேதாந்தா குழுமத்தின் தலைவர் அனில் அகர்வால் லண்டனில் உள்ள சென்ட்ரிகஸ் சொத்து மேலாண்மை நிறுவனத்துடன் இணைந்து பொதுத் துறை நிறுவனங்களில் 10 பில்லியன் டாலர் நிதியை முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளார்.

இந்தியாவில் 2020 ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலானா 8 மாதத்தில் அன்னிய நேரடி முதலீடுகள் 22 விழுக்காடு உயர்ந்து 58.37 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. ஆனால் உண்மையில் நேரடி அந்நிய முதலீடுகளும், நிதி முதலீடுகளும் மற்ற நாடுகளின் நிதி வளங்களைச் சுரண்டுவதற்கான கருவிகளாகவே பயன்படுத்தப்படுகின்றன.

கூடுதல் வரி வருவாயின் (CESS, SURCHARGE) மூலம் பெறப்படும் வருவாயை மாநிலங்களுடன் பகிர

வேண்டும் என்ற அவசியம் இல்லாததால் மத்திய அரசு கூடுதல் வரிகளின் பங்கையே அதிகரித்து வருகிறது. 14ஆவது நிதி மையத்தின் பரிந்துரைப்படி மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வரி வருவாயின் பங்கு 42 விழுக்காடாக உயர்த்தப்படவில்லை. 2020 ஏப்ரல் முதல் நவம்பர் வரை மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் வரிவருவாய்ப் பகிர்வை 21% குறைந்துள்ளது. 2020 ஏப்ரல்-நவம்பர் மாதங்களில் தமிழ் நாடு உட்பட 12 மாநிலங்களில் மாநிலங்களின் மொத்த மூலதனச் செலவு 26 சதவீதம் வீழ்ந்து ரூ. 1.1 லட்சம் கோடியாகக் குறைந்துள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் மாநில அரசுகளின் மூலதனச் செலவை ஊக்குவிக்கும் வகையில் 2020 அக்டோபர் 12ஆம் தேதி மத்திய நிதியமைச்சர் தற்சார்பு இந்தியா தொகுப்பின் ஒரு பகுதியாக மூலதனச் செலவிற்காக மாநிலங்களுக்கான சிறப்பு நிதித் திட்டத்தை அறிவித்தார். இந்தத் திட்டத்தின் கீழ் இது வரை 27 மாநிலங்களில் ரூ. 10,657 கோடி மதிப்பிலான மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய நிதி அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. முதல் தவணையாக மாநிலங்களுக்கு ரூ. 5,378 கோடி ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டிற்கு நிதி அளிக்கப்படவில்லை.

நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கை வெளியிடுவதற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தில், மாநிலங்கள் தங்கள் நிதி வரம்பை அதிகரிக்குமாறும், சரக்கு, சேவை வரி இழப்பீட்டுக்கு உதவுமாறும், கோவிட்-19 தடுப்பு மருந்துகள் பெறுவதற்கு உதவுமாறும் மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளன.

முன்-பள்ளி முதல் உயர் இடைநிலைக் கல்விக்கான நிதியுதவி அளிக்கப்படும் சமக்ரா சிக்ஷா எனப்படும் ஒருங்கிணைந்த மத்திய நிதியுதவித் திட்டத்திற்கு (சிஎஸ்எஸ்) 2020இல் மத்திய அரசு ஒதுக்கிய நிதியில் 29 விழுக்காடு மட்டுமே கொடுத்துள்ளது. மாநிலங்கள் இதற்கான ஒதுக்கீட்டுத் தொகையில் 26 விழுக்காடு மட்டுமே அளித்துள்ளன.

பிரதமர்-விவசாய உதவித் திட்டத்தில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய ரூ.6 ஆயிரம் உரிய விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. 2019ஆம் ஆண்டிலிலிருந்து, 2020 ஜூலை 31ஆம் தேதி வரை வருமான வரி செலுத்தும் விவசாயிகளுக்கும், தகுதியற்ற விவசாயிகளுக்கும் என மொத்தம் 20.48 லட்சம் தகுதியற்ற பயனாளிகளுக்கு மத்திய அரசு ரூ. 1,364 கோடி வழங்கியுள்ளது என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ளது. இதில் 55.58 விழுக்காட்டினர் வருமான வரி செலுத்துவோர். மீதமுள்ள 44.41 சதவீதம் பேர் தகுதியற்ற

பிரிவில் வருகின்ற விவசாயிகள்.

டிசம்பரில் ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரித்துள்ளதால் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 26% அதிகரித்துள்ளது. இந்தியாவின் 7ஆவது வர்த்தகக் கொள்கை உலக வர்த்தக நிறுவனத்தில் மீளாய்வு செய்யப்பட்டது. இந்தியாவின் புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை 2021 ஏப்ரல் 1 முதல் ஐந்து வருட காலத்திற்கு நடைமுறைக்கு வருகிறது. இந்தியாவை 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றுவது இதன் குறிக்கோள் எனக் கூறப்படுகிறது. உலக வர்த்தக மையம் 'ஆத்மநிர்பர் பாரத்' போன்ற பாதுகாப்புவாதத் திட்டங்களால் வர்த்தக கட்டுப்பாடுகள் ஏற்படும் என இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனவரி 1இலிருந்து ஏற்றுமதியை ஊக்குவிக்கும் விதமாக உற்பத்தி சார்ந்த உதவித் தொகை வழங்கும் திட்டம் மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் சலுகை அடைய இருப்பவர்கள் இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பை அடிமட்ட விலைக்கு வாங்கிச் சுரண்டும் பன்னாட்டு நிறுவனங்கள்தானே தவிர இது உள்நாட்டு உற்பத்தித் துறையை எந்த விதத்திலும் மேம்படுத்தப் போவதில்லை.

இந்தியாவின் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரக் கொள்கைகள் உள்நாட்டுச் சிறு நிறுவனங்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன. இந்தியாவில் உற்பத்திப் பொருட்களாக ஏற்றுமதி செய்யப்படாமல், மூலப் பொருட்களாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், மூலப் பொருட்கள் தட்டுப்பாடு, விலையுயர்வால் சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மூலப்பொருள் இறக்குமதி செய்யவும் சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு 20 விழுக்காடு இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது. இந்தியாவின் பெரிய எஃகு, சிமெண்ட் நிறுவனங்கள் ஒரு கூட்டமைப்பாக செயல்பட்டு விலையை அதிகப்படுத்தி வருகின்றன. சிமெண்ட், எஃகுக்கு மாற்றுப் பொருட்களை ஆராயுமாறு குறிப்பிட்ட நிதின் கட்காரி, இதை ஒழுங்குமுறை செய்யும் அதிகாரம் தனக்கு இல்லை என்றும், நிதி அமைச்சகத்துடனும், பிரதமருடனும் இது குறித்துப் பேசுவதாகவும் கூறியுள்ளார்!

பணவீக்கம்:

டிசம்பர் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைப் பணவீக்கத்தின் அளவு 4.59 விழுக்காடு அதிகரித்துள்ளது. உணவுப் பொருட்களின் விலைவாசி 3.41 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 10.41 விழுக்காடு குறைந்துள்ளது. தானியங்களின் விலைவாசி 0.98 விழுக்காடு அதிகரித்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 15.98 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை 16.08 விழுக்காடு உயர்ந்துள்ளது. மீன், இறைச்சியின்

விலை 15.21 விழுக்காடு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் பணவீக்கம் 4.74 விழுக்காடு உயர்ந்துள்ளது.

**நவம்பரில் தொழில்துறை வளர்ச்சி:**

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி நவம்பரில் மொத்த உற்பத்திக் குறியீடு 1.9 விழுக்காடு சரிவடைந்துள்ளது. முதன்மைத் துறைகளின் உற்பத்தி 0.3 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதில் சுரங்கத் துறையில் உற்பத்தி 0.1 விழுக்காடு சரிவடைந்துள்ளது. செய்பொருளாக்கத் துறையில் உற்பத்தி 0.4 விழுக்காடும், மின்சார உற்பத்தி 0.8 விழுக்காடும் அதிகரித்துள்ளன.

பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் முதன்மைப் பொருட்களின் உற்பத்தி 0.2 விழுக்காடும், மூலதனப் பொருட்களின் உற்பத்தி 8.9 விழுக்காடும் சரிவடைந்துள்ளன. கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி 0.7 விழுக்காடும், நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 1.4 விழுக்காடும் சரிவடைந்துள்ளது. உடனடி நுகர்வுப் பொருட்கள் (1.1%), இடைநிலைப் பொருட்கள் (17.2%) ஆகியவற்றின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

**டிசம்பரில் தொழில்துறை வளர்ச்சி:**

தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கியத் தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக் குறியீடு டிசம்பரில் 1.3 விழுக்காடு அதிகரித்துள்ளது. நிலக்கரி உற்பத்தி 2.2 விழுக்காடும், மின்சார உற்பத்தி 4.2 விழுக்காடும் அதிகரித்துள்ளன. உரத் துறையில் உற்பத்தி 2.9 விழுக்காடும், கச்சா எண்ணெய் உற்பத்தி 2.8 விழுக்காடும், இயற்கை எரிவாயு உற்பத்தி 7.2 விழுக்காடும், பெட்ரோலியச் சுத்திகரிப்புத் துறையில் உற்பத்தி 2.8 விழுக்காடும் குறைந்துள்ளன. எஃகு உற்பத்தி 2.7 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 9.7 விழுக்காடும் குறைந்துள்ளன.

**தேசிய வருமானத்தின் முதல் கணக்கீடு (2020-21):**

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 2020-21ஆம் ஆண்டின் தேசிய வருமானத்தின் முதல் கணக்கீட்டின் படி இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 2020-21இல் 134.40 லட்சம் கோடியை எட்டக் கூடும் என்றும், 2019 மே மாதத்தில் 4.2 விழுக்காட்டு வளர்ச்சி பெற்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020-21இல் 7.7 விழுக்காடு வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த மதிப்புக் கூட்டல் நிலையான விலையில் 2020-21இல் 123.39 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2019-20ஐக் காட்டிலும் 7.2 சதவீதம் குறுக்கமடைந்துள்ளது. 2020-21இல் விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி 3.4

விழுக்காடும், மின்சாரத் துறை 2.7 விழுக்காடும் உயர்ந்துள்ளன. சுரங்கத் துறை (12.4%), உற்பத்தித் துறை (9.4%), கட்டுமானத் துறை (12.6%), வர்த்தகம், ஹோட்டல் சார்ந்த துறைகள் (21.4%), நிதித் துறை (0.8%), பொது நிர்வாகம், பாதுகாப்புத் துறை (3.7%) என மற்ற அனைத்துத் துறைகளுமே வீழ்ச்சி கண்டுள்ளன.

சரக்குகளின் மீதான நிகர வரி 13.0 விழுக்காடு சரிந்துள்ளது. நிகர தேசிய வருமானம் 8 விழுக்காடு குறைந்துள்ளது. தனிநபருக்கான மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு 8.7 விழுக்காடு சரிவடைந்துள்ளது. நிகர தனிநபர் தேசிய வருமானம் 8.9 விழுக்காடு குறைந்துள்ளது. தனிநபருக்கான தனியார் நுகர்வுச் செலவினம் 10.4 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதில் ‘வி’ (V) வடிவப் பொருளாதார மீட்சி பெறுவதற்கான எந்த அறிகுறியும் காணக் கிடைக்கவில்லை என்பதே உண்மை. அரசு நிதிச் சிக்கனத்தைக் கடைபிடிப்பது பொருளாதார மீட்சியைப் பாதிக்கும் என சர்வதேசப் பண நிதியத்தின் முதன்மைப் பொருளியலாளர் கீதா கோபிநாத் ஆலோசனை தெரிவித்துள்ளார். அரசு முக்கியமான செலவினங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், ஏழ்மையான குடும்பங்களுக்கும், சிறு குறு, நடுத்தர நிறுவனங்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும் என ரகுராம் ராஜன் ஆலோசனை அளித்துள்ளார். மத்திய அரசு இவற்றைக் காது கொடுத்து கேட்டதாகத் தெரியவில்லை.

டெல்லியில் விவசாயச் சட்டங்களைத் திரும்பப் பெறுமாறு தொடர்ந்து 70 நாட்களுக்கு மேல் போராடி வரும் லட்சக் கணக்கான விவசாயிகளில் 155க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். குடியரசு தினத்தன்று அவர்கள் அமைதியான முறையில் மேற்கொண்ட டிராக்டர் பேரணியிலும் போராட்டத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் விதமாக வன்முறையைத் தூண்டியுள்ளதுடன் அவகேடான முறையில் 37 தலைவர்கள் மீது பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 11 முறை நடந்துள்ள மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையிலும் மத்திய அரசு விவசாயிகளின் நிலைப்பாட்டை ஏற்க மறுத்து வருகிறது. பிரதமரோ, நிதியமைச்சரோ பெயருக்குக் கூட ஒரு முறை விவசாயிகளை நேரில் சந்திக்காது அலட்சியப்படுத்தியுள்ளனர்.

ஒரு தசாப்தம் காணாத, அதாவது நூறாண்டிற்கு ஒரு முறையே பார்க்க முடிந்த நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் அளிக்கப் போகிறாராம். விவசாயிகள் மீது துளியும் அக்கறை காட்டாமல் அவர்களைக் கொலையும், சித்திரவதையும் செய்யும் இவர்களிடம் என்ன எதிர்பார்க்க முடியும்? மக்களின் உழைப்பையும், மாநிலங்களின் நிதியையும் ஒரு தசாப்தம் காணா அளவிற்குச் சுரண்டுவதற்கான கருவியாகவே நிதிநிலை அறிக்கையை பயன்படுத்தப் போகின்றனர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

## இந்திய அரசுக்கு வேண்டுகோள்

# நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
# பிரதம அமைச்சர் அலுவலகம்

875 Avenue of the Americas, Suite 906 www.tgte.org New York, NY 10001, USA pmo@tgte.org

20-03-2021

## ஐநா மனிதவுரிமைப் பேரவையில் சிறிலங்கா தொடர்பாக இந்தியா தலைமை கொடுக்க வேண்டும்:

ஈழத் தமிழர்கள் தொடர்பாக இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்க வேண்டும்.

இப்போது நடைபெற்று வரும் ஐநா மனிதவுரிமைப் பேரவை அமர்வில் இந்தியா தலைமை கொடுக்க வேண்டும் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. சிறிலங்காவில் பொறுப்புக் கூறல் தொடர்பாக மேலையரசுகள் எடுத்துள்ள முன்முயற்சியில் இந்தியா கைகட்டி வேடிக்கை பார்க்கும் நோக்கராகவே இருந்து விடக் கூடாது என வலியுறுத்தி வேண்டுகிறோம். ஒரு தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது - சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தும் வகையில் இந்தியா அத்தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தும் படி மனிதவுரிமைகளுக்கான ஐநா உயராணையர் மிசேல் பசலே முன்மொழிந்துள்ளார். நான்கு முன்னாள் உயராணையர்கள், சிறிலங்காவுக்குச் சென்றுவந்த பதின்மூன்று முன்னாள் ஐநா சிறப்பு அறிக்கையாளர்கள், தாயகத் தமிழ் அரசியல் தலைவர்கள், தமிழ் சிவில் சமூகத்தார், வல்லுநர் குழு உறுப்பினர்கள், தமிழ் சமயத் தலைவர்கள், புலம்பெயர் தமிழர் அமைப்பினர், பன்னாட்டு அரசுசாரா அமைப்பினர் ஆகியோரும் கூட இவ்வாறே அழைப்பு விடுத்துள்ளனர். நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 2015ஆம் ஆண்டு இதே பொருள் குறித்து முன்னெடுத்த கையொப்ப இயக்கத்தில் 16 இலட்சத்துக்குக் குறையாத மக்கள் கலந்து கொண்டு ஆதரவு

தெரிவித்தனர் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

13ஆம் திருத்தத்தைச் செயலாக்க வேண்டுமென முன்னதாக இந்தியா ஐநா மனிதவுரிமைப் பேரவையில் கூறியதை நாம் கருத்தில் கொண்டோம். சிறிலங்காவின் மனப்போக்கில் ஓங்கி நிற்கும் சிங்கள பௌத்தப் பேரினவாதம் 13ஆம் திருத்தம் செயலாக்கப்படுவதற்கு இடமளிக்காது என்பதையே வரலாறும் நிகழ்கால நடப்புகளும் போதிய அளவில் மெய்ப்பிக்கின்றன.

உண்மை என்னவென்றால், இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஏற்கெனவே பிரிக்கப்பட்டு விட்டன. இன்றைய சிறிலங்கா அரசு குறித்து எங்களுக்குள்ள அச்சமெல்லாம், தமிழ்த் தேசத்தின் தனியியல்புகளை அழிக்கும் முயற்சிகளிலும். இந்திய இலங்கை ஒப்பந்த்த்தில் அங்கீகரிக்கப்பட்ட தமிழர்களின் மரபுவழித் தாயகத்தில் நிலப்பறிப்புச் செய்வதிலும் அது ஈடுபட்டுள்ளது என்பதே.

தமிழர்கள் மீது தொடரும் கட்டமைப்பியல் இனவழிப்பைத் தடுத்து நிறுத்தும் அறக்கடன் இந்தியாவுக்கு உள்ளது. டெல்ஃபித்தீவிலும் அனலைத்தீவிலும் நைனாத்தீவிலும் புதுப்பிக்கத்தக்க மின்விசைத் திட்டங்கள் அமைக்க ஒரு சீனக் குழுமத்துக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருப்பது தமிழர் இறைமை மீதான வன்தாக்கு மட்டுமல்ல, இந்தியாவின் தேசிய இறைமைக்கே அச்சுறுத்தலும் ஆகும்.

எந்தவொரு நாட்டிலும் அயலுறவுக் கொள்கைகளை வகுப்பதில் உள்நாட்டு மக்கள் தொகுதி ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆகவே ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் தமிழ்நாடு ஒரு முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம். தமிழ்நாட்டில் வரவிருக்கும் மாநிலத் தேர்தல் அதற்கு ஒரு மேடையமைத்துக் கொடுக்கும் எனப் பெரிதும் நம்புகிறோம்.

இறுதியாக, தமிழ்த் தேசிய இனச் சிக்கலுக்கு நிலையான தீர்வு காணப் பன்னாட்டுச் சமுதாயத்தின் சார்பில் ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுமாறு செய்வதில் இந்தியா தலைமைப் பாத்திரம் வகிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

## நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (16)

ஆசிரியர்: **சத்யகி ராய்**

தலைப்பு:

### ஏகாதிபத்தியம் குறித்த மார்க்சியக் கோட்பாடு (2)



ஹாப்சன் ஏகபோக அமைப்புகள் எவ்வாறு உள்நாட்டு முதலீடுகளைக் குறைத்து, வெளிநாட்டிற்கு மூலதன ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக லாபம் பெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹில்ஃபெர்டிங் கூட்டுப் பங்குதாரர் நிறுவனத்தின் தோற்றம் குறித்து விவரித்துள்ளார். வங்கி மூலதனமும் தொழில் மூலதனமும் ஒன்றுசேர்ந்து நிதி மூலதனம் உருவாவதையும், அவற்றின் நலன்கள் கூட்டுச் சேர்வதையும் குறிப்பிட்டுள்ளார்.

பரனும், ஸ்வீஸியும் ஏகபோக முதலாளித்துவம் எவ்வாறு பொருளாதாரத் தேக்கம் ஏற்படச் செய்கிறது என்பதையும், முதலாளித்துவத்தில் செய்யப்படும் முதலீடுகளுக்கும், செய்ய வேண்டிய முதலீடுகளுக்குமான இடைவெளி வேண்டல் பற்றாக்குறை ஏற்படச் செய்வதையும் குறிப்பிடுகிறார். வேண்டல் பற்றாக்குறையால் புதிய முதலீடு செய்வதற்கு தேவையான தூண்டல் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. முதலாளித்துவம் மற்றப் பகுதிகளுக்குப் பரவுவதற்கான தூண்டல் இல்லாத போது, பரவ இயலா நிலையால் தேவையற்ற வீண் உற்பத்தி ஏற்படுகிறது.

அமெரிக்கா தன் எதேச்சதிகாரத்தாலும் ராணுவத் தொழிலகக் கூட்டமைப்பாலும் நடப்பு நிலைமையைப் பாதுகாத்துக் கொள்கிறது.

வளங்கள், தொழில்நுட்பம், சந்தைகள், மீது ஏகபோக ஆற்றல்கள் ஆளுகை பெறுகின்றன. போட்டி இல்லாமலே அதிக லாபங்களை பெறுவதால்

புத்தாக்கத்தின் மூலம் புதிய கண்டுபிடிப்புகள் உருவாவதற்கான தூண்டு விசை இல்லாது

போகிறது. இதனால் தொழில்நுட்ப முன்னேற்றம் தடைபடுகிறது. எதிர்பார்த்ததைக் காட்டிலும் வேண்டல் பற்றாக்குறை அதிகம் உள்ள நிலை ஏற்படும் போது அரசின் தலையீடுகள் தேவைப்படுகின்றன. நுகர்வியம் ஊக்குவிக்கப்படுகிறது.

ஏகாதிபத்தியம் குறித்து லெனின்:
முதலாளித்துவம் போட்டி நிலையிலிருந்து ஏகபோக நிலையை அடைகிறது. ஏகபோக ஆற்றல்களுக்கிடையே மோதல் ஏற்படுகிறது. போட்டி சந்தைகளுக்காக மட்டுமல்ல, ஏகபோகங்கள் வளரப் புதிய வெளி தேவைப்படுகிறது. தங்கள் புவியியல் எல்லைகளைத் தாண்டிப் புதிய எல்லைகள் ஏகபோக ஆற்றல்களுக்குத் தேவைப்படுகின்றன. உலகைப் பங்கீடு செய்யவும், தங்களது ஆளுகைக்குட்படுத்தவும், பிரித்து மறுபங்கீடு செய்வதற்கான வல்லாதிக்கப் போர்கள் ஏற்படுகின்றன. ஆனால் காட்ஸ்கி அதீத ஏகாதிபத்தியம் என்ற தனது கோட்பாட்டில் பெரிய ஏகபோகங்களுக்கிடையே மோதல்கள் தற்பொழுது இல்லை எனவும், போட்டியிடும் ஆற்றல்கள் கார்டெலைப் போல் தங்களுக்குள் ஒப்பந்தம் ஏற்படுத்தலாம், அதன் மூலம் அமைதியான முதலாளித்துவம் ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஏகாதிபத்தியப் போட்டியாளர்களுக்கிடையிலான ஆற்றல் சமநிலையில் அமைதி என்பது தற்காலிகமான ஒன்றே. முரண்பாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் உருவாக்குவதே ஏகாதிபத்தியத்தின் உள்ளார்ந்த பண்பாக உள்ளது. அமைதியான முறையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

இரண்டாவது அகிலம் எனப்படும் ‘கம்யூனிஸ்ட் இன்டர்னேசனல்’, முதல் உலகப் போர்க் காலக்கட்டத்தில் பொருளாதாரவாதத்தில் மூழ்கியிருந்த போது லெனின் புரட்சிகர அரசியலை முன்வைத்தார்.
சமூகம் என்பது உயிரற்ற பொருட்களை மட்டும் கொண்டிருக்கவில்லை, சிந்திக்கும் மனிதர்களையும் கொண்டுள்ளது. இயற்கை அறிவியலின் விதிகள் சமூக அறிவியலுக்குப் பொருந்த மாட்டா.

மூளைக்கும் பொருளுக்கும் இடையிலான தொடர் உறவை இயக்கவியல் விளக்குகிறது. இரண்டு வகையான சிந்தனைமுறைகள் உள்ளன. அனுபவவாதத்தில் உண்மை உள்ளது. உண்மை உங்களைச் சாராமல் உங்களுக்கு வெளியே உள்ளது. புறவயத்தை எதிரொளிக்கும் செயல்பாடாக

மனிதமூளை உள்ளது. ஆனால் மனித மூளை ஒரு புகைப்படக் கருவி அல்ல.

ஒன்று: முன்-நிர்ணயிக்கப்பட்ட கோட்பாடுகளே ஒன்றன் பின் ஒன்றாக பல அடுக்குகளாக மெய்யாகின்றன, அறிவுத் திரட்டல் நிகழ்வால் பகுத்தறியப்படுகிறது எனும் ஹெகலிய வாதம்.

மற்றொன்று: ஒவ்வொரு உண்மையும் பகுதியளவானதே என்பதையும். உண்மை முன்னரே தீர்மானிக்கப்படுவதில்லை என்பதையும் முன்வைக்கும் மார்க்சிய முறை. மார்க்சியக் கோட்பாடு நடைமுறையில் நிரூபிக்கப்பட வேண்டும் .கோட்பாட்டில் உள்ள படி உண்மையில் இல்லையென்றால், கோட்பாட்டிலே பிரச்சினை உள்ளதையே குறிக்கும். அது மார்க்ஸினால் ஏற்பட்ட பிரச்சனையல்ல.

முதலாளித்துவம் சரியான முறையில் சவாலிடப்படாத வரை முடிவிலாக் காலம் வரை தொடரும். சரியான வர்க்கச் சவாலை முன்வைக்க வேண்டும்.

முதலாளித்துவத்திற்கு எதிரான புரட்சியில் லெனின் எந்தளவுக்கு புத்தாக்கம் மிக்கவராக இருந்தார் என்பது குறித்து கிராம்சி வர்ணிக்கிறார். மூலதனத்துக்கு எதிரான புரட்சியில் லெனின் அரசியலுக்கே முதன்மை பங்கு அளித்தார் முனைப்பற்ற அறிவியல்வாதத்தை எதிர்த்தார்.

ஏகாதிபத்தியம் குறித்த லெனினின் வரையறை ஏகபோகங்களின் தோற்றத்தையும், மூலதன ஏற்றுமதி, நிதி மேலாதிக்கம். உலகப் பங்கீடு நிறைவேற்றம் பெறுதல் ஆகியவற்றின் அடிப்படையையுமே குறிப்பிடுகிறது.

லெனின் குறிப்பிடும் இறக்கும் தறுவாயிலுள்ள முதலாளித்துவம் பால் பரன் குறிப்பிடும் தேக்கத்திலிருந்து வேறுபட்டது.

புதிதாக உற்பத்தி செய்ய வேண்டிய அவசியமில்லாமல் நிதி மீதான சொத்துரிமைகளே லாபத்தைத் தருகின்றன. எந்த வேலையும் செய்யாமல் கூப்பன்களைச் சேர்ப்பதன் மூலம் செல்வம் சேர்ப்பவர்களின் அதீத வளர்ச்சி நிலையை குறிக்கிறது. பொருளாதா வளர்ச்சி சமமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. உலகைப் பணக்கார நாடுகள், ஏழை நாடுகள் என இரு துருவங்களாகப் பிரித்துள்ளது. இரு துருவங்களின் உழைக்கும் மக்களை ஒன்றிணைத்தும் உள்ளது.

அப்பொழுது இரண்டாம் அகிலத்தில் வளரும் நாடுகளில் உழைக்கும் வர்க்கத்தை பற்றி எந்த

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

உரையாடலும் இடம்பெறவில்லை. லெனினே காலனியாதிக்கத்தை எதிர்க்கும் போராட்டம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போராட்டமே என்பதை வலியுறுத்தினார். ஆளும் வர்க்கம் காலனிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட கூடுதல் லாபங்களிலிருந்து வளர்ந்த நாடுகளிலுள்ள மேல்தட்டு உழைக்கும் வர்க்கத்திற்கு சலுகைகள் அளித்து எழுச்சியை அணைத்தது.

முதலாளித்துவத்தை அதன் பலவீனமான கண்ணியில் தாக்கிப் புரட்சியை ஏற்படுத்துவது லெனினின் முன்னெடுப்பு. உலகளாவிய முதலாளித்துவம் என்பது ஒருங்கமைந்த அமைப்பாக உள்ளது. அதன் பலவீனமான பகுதியில் தாக்குவதன் மூலமே புரட்சியை உண்மையாக்க முடியும். ஏகாதிபத்தியத்தின் பலவீனமான கண்ணி ருஷ்யாவில் இருந்தது. லெனின் புரட்சியில் மட்டும் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. காலனிய நாடுகளின் விடுதலைப் போராட்டத்தையும் வரவேற்றார்.

உலகப் போரின் போது ஏகாதிபத்தியம் குறித்த மூன்று நிலைப்பாடுகளை லெனின் விவரிக்கிறார். ஒன்று: உலகப் போரைத் தந்தை நாட்டைக் காப்பதற்கான போராட்டமாக ஆதரிக்கும் சமூக-தேசியவாதம், காவுட்ஸ்கி இப்பிரிவைச் சார்ந்தவர்.
இரண்டு: புரட்சிகரச் செயல்பாட்டை முன்னிறுத்தத் தவறும் சீர்திருத்தவாத சமூக-ஜனநாயகவாதம்,

மூன்று: இடதுசாரிப் புரட்சியவாதம்: உலகப் போரை ஆளும் வர்க்கத்திற்கு எதிரான உள்நாட்டுப் புரட்சியாக முன்னெடுத்தல். காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதை முன்னிறுத்துதல். தொழிலாளர்-விவசாயி கூட்டணியை வலுப்படுத்துதல். காலனிய நாடுகளின் உழைக்கும் வர்க்கத்திற்கு ஒரு மாற்றுவழியை ஏற்படுத்துதல். ஒடுக்கும், ஒடுக்கப்பட்ட நாடுகளின் உழைக்கும் மக்களின் ஒற்றுமை பெறுதல். தொழிலாளர்-விவசாயிக் கூட்டணி என்பதும் லெனினின் மிக முக்கியமான முன்னெடுப்பு. ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு இடையிலான மோதல்களிலிருந்து தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பொது இலக்கை ஏற்படுத்துவதும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களிலிருந்து உலகப் புரட்சியை அடைவதும் புரட்சிகரச் செயல்பாட்டின் நோக்கமாக. இருந்தது. விடுதலையின் பலபடித்தான நிலைகள் ஒருங்கிணைக்கப்பட்டு உலகப் புரட்சியை ஏற்படுத்துவது இலக்காகக் கொள்ளப்பட்டது.
உழைப்பாளரால் சுரண்டலை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அதுவே அவருக்கு

வர்க்க நிலைப்பாட்டை அளிப்பதில்லை. தன்னிச்சையாகவே வர்க்க உணர்வு நிலை ஏற்படாது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அர்ரிகி ஏகாதிபத்தியம், உலக மேலாதிக்கம் பற்றிய தன் கோட்பாட்டில் மூலதனத் திரட்டலின் அமைப்புசார் சுழற்சிகள் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்தார். உலகளாவிய முதலாளித்துவ அமைப்பில் அரசியல் பொருளாதார மேலாதிக்கம், புவியியல்-கால அடிப்படையிலும், மூலதனத் திரட்டலின் நான்கு அமைப்புசார் சுழற்சிகளை அடையாளம் காண்கிறார். முதல் சுழற்சி பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலியை மையமாகக் கொண்டது, அதன் பின்னர் பதினேழாம் நூற்றாண்டில் நெதர்லாந்தையும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டனையும், 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவையும் மையமாகக் கொண்டும், அதைத் தொடர்ந்து சீனாவை மையமாகக் கொண்டும் மூலதனத் திரட்டல் ஏற்படும் என்று குறிப்பிடுகிறார்.

உடைமை பறித்தலின் மூலமே மூலதனம் திரட்டப்படுகிறது. இயற்கை வளங்களிலிருந்து ஓய்வூதியம் வரை அனைத்திலுமே உடைமை பறிப்பும், அபகரித்தலும் சுரண்டலும் நடைபெறுகின்றன. உடைமை பறிப்பினால் மட்டுமே மூலதனம் திரட்டப்படுவதில்லை. உற்பத்தியை விரிவாக்கம் செய்வதன் மூலமும் மூலதனம் திரட்டப்படுகிறது. உடைமை பறிப்புக்குக் குறைந்த கவனமே அளிக்கப்பட்டுள்ளதாக ஹார்வி குறிப்பிடுகிறார்.

விவசாயி அபகரிக்கப்படுவது வெளிப்படையாகத் தெரிகிறது. தொழிலாளி ஒவ்வொரு நாளும் உற்பத்திச் சாதனங்களிடமிருந்து அபகரிக்கப்படுகிறார் அது கண்ணுக்கு தெரியாததாக உள்ளது. அபகரிப்பு என்பது சுரண்டல் நிகழ்முறையில் உள்ளார்ந்த ஒன்றாக இருக்கிறது.
மைக்கேல் ஹர்ட், அந்தோனியோ நெக்ரி ஆகியோர் பேரரசியத்தில் ஏகாதிபத்தியம் தேச எல்லைகளோ முரண்பாடுகளோ அற்ற ஒற்றை உலகப் பேரரசாக மாறியுள்ளதென்று குறிப்பிடுகிறார்கள். ஐரோப்பிய இறையாண்மையை நீட்சிப்படுத்தியுள்ளார்கள். எங்கும் பரவிய, ஃபௌகடிய அதிகாரத்தாலும், பேரரசாலும், ஏகாதிபத்தியம் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. மூலதனத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகளும், அது ஏற்படுத்தும் ஏற்றத்தாழ்வுகளும் இவர்களது கோட்பாட்டில் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

முதலாளித்துவம் தேசியத்திற்கான வாதங்களை நோக்கியோ, தேசநலன்களின் அடிப்படையிலோ பயணிக்காது. மூலதனத்திற்கென்று தேசியப் பாதை கிடையாது. அமெரிக்காவைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களை டிரம்பால் கட்டுப்படுத்த முடியாது.

சுரண்டலுக்கான நெறிகள் அதற்கான அதிகார உறவுகளை உட்கொண்டுள்ளது. ஒற்றைமயப் பேரரசுக்குச் சவாலாக பன்மைத்துவம் உள்ளது. இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்கள், சர்வதேச நிதி மூலதனத்துடன் ஒத்திருப்பதில்லை.

ராபின்சன் தேசம் கடந்த முதலாளி வர்க்கம் தோன்றியிருப்பதையும், உலகளாவிய தன்மை முன்னிடம் பெற்றிருப்பதையும், .அரசியல், பொருளாதார ஆற்றல் பிரிவுபட்டிருப்பதையும், அமெரிக்க அரசின் முடிவில்லாத போர் குறித்தும், அதிகாரப் படிநிலைகள் குறித்தும் விளக்குகிறார். அமெரிக்கா ஓர் உலக அரசு போல் ஆதிக்கம் செலுத்துகிறது.

முதலாளித்துவ வர்க்கத்தில் பல அடுக்குகள் உள்ளன. எந்த முதலாளி வர்க்கம் தேசத்தின் அரசாட்சியைக் கைப்பற்றுகிறது என்பதே முக்கியமானது. தேச அரசு ஏகாதிபத்தியக் கருவியாகச் செயல்படுகிறது. ஆனால் அது மட்டுமே அல்ல.

லெனினிய அனுமானப் பார்வையிலிருந்து இன்றைய உலகம் வேறுபட்டுள்ளது. வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் குறையவில்லை, சர்வதேச மூலதனத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இந்தியாவின் உள்நாட்டு மூலதனமும் உலக மூலதனத்தின் நலனாகச் செயல்படுகிறது. நம்மிடத்திலே உலகளாவிய முதலாளித்துவம் உள்ளது. உலக முதலாளித்துவத்தின் கருவிகளாக உள்ள உள்நாட்டு முதலாளித்துவத்தை எதிர்க்க வேண்டும்.

தனிநபர்கள் சமூக நிகழ்வைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இதை நிகழ்வாகப் புரிந்து கொள்ள வேண்டும். லுகாக்ஸ் பொய்யான உணர்வுநிலை பற்றி விவரிக்கிறார். பிழை அடையாள நிகழ்வால் உருவாக்கப்படும் புறவயத் தன்மையை அடையாளம் கண்டு உண்மை அறியும் மார்க்சிய முறையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார். சரக்கு என்பது தோற்றத்தில் மூலதனத்தின் அடிப்படை அலகாக தெரிகிறது. ஆனால் உண்மை என்பது வெளித் தோற்றத்தை விட மேம்பட்டதாகவும் சிக்கலாகவும் உள்ளது. முதலாளித்துவத்தின் வெளித் தோற்றத்திலிருந்து உண்மையான முதலாளித்துவம் முற்றிலும் வேறுபட்டுள்ளது. நிதிமயமாக்கத்தைக் கேள்விக்குட்படுத்தாமல், இயல்பாகவும், இயற்கையாகவும் பார்ப்பதும் பிழை அடையாளமே.

(தொடரும்)

# டாலருக்கு வந்த வாழ்வு (11)

**சமந்தா**

## வீழ்வது டாலர் மட்டும்தானா?

2008 பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு இரண்டாவது முறையாக 2020இல் டாலர் குறியீட்டின் மதிப்பு 90க்கும் கீழ் வீழ்ந்து 89.21ஆகக் குறைந்துள்ளது. இதையும் அமெரிக்கா தன் ராணுவ எதேச்சதிகாரத்தாலும், அரசியல் அதிகாரத்தாலும், அமெரிக்காவைப் பற்றி கட்டமைக்கப்படும் பொய்யான பிம்பங்கள், மூடநம்பிக்கைகள், ஊடகப் பரப்புரைகள், இன்றுள்ள அமைப்பு முறையின் கலாச்சார, பண்பாட்டுக் கூறுகள், பழக்கவழக்கங்கள் இவற்றால்தான் மேலும் வீழாமல் பாதுகாத்து வருகிறதே தவிர, முழுக்கமுழுக்கப் பொருளாதார அடிப்படையில் அல்ல. பொருளாதார அடிப்படையில் அது 1970களிலே வீழ்ந்து போனது. ஆகையால் டாலரின் வீழ்ச்சிக்கு கோவிட்-19 என்ற கொள்ளை நோய்தான் காரணம் என்று சமாதானம் அடைய முடியாது. ஏனென்றால் கோவிட்-19 நோய் தோன்றி பரவுவதற்கான அடிப்படையை ஏற்படுத்தித் தந்ததே இந்த முதலாளித்துவ அமைப்புதான். நவீன தாராளமய கொள்கைகளால் பெரும்பாலான உலக நாடுகளில் பொதுச் சுகாதாரத்திற்கான அரசு முதலீடுகள் குறைக்கப்பட்டுத் தனியார்வசம் சென்றதாலே உலகெங்கும் கோடிக் கணக்கான மக்கள் உரிய சிகிச்சை பெற இயலாமல் இறந்துள்ளனர். ஏழை மக்களுக்கும், ஏழை நாடுகளுக்கும் கோவிட்-19 தடுப்பு மருந்தை கிடைக்கப் பெறச் செய்வதற்காக உலக வர்த்தக அமைப்பில் கொண்டுவரப்பட்ட முன்னெடுப்பை வளர்ந்த நாடுகள் தடுத்துள்ளன. கோவிட்-19 தொற்று நோயால் ஏற்பட்ட பேரிழப்புகளுக்கு முதலாளித்துவ அமைப்பு முறையும் லாப நோக்குடன் இயங்கும் அதன் தனியார் மருத்துவமனைகளும், மருந்து நிறுவனங்களுமே காரணமாய் இருந்துள்ளன.

முன்னாள் அமெரிக்க அதிபர் நிக்சன் டாலருக்கான தங்கத் தரத்தைக் கைவிட முடிவெடுத்த போது அமெரிக்க மத்திய வங்கியின் அப்போதைய தலைவர் ஆர்தர் பர்ன்ஸ் என்ன சொன்னார் தெரியுமா? பனிப் போரின் உச்சத்தில் தங்கத் தரத்தை விட்டு வெளியேறுவது அமெரிக்காவின் மோசமான அடையாளமாக மாஸ்கோவிலும் ரஷ்ய ஊடகங்களிலும் பார்க்கப்படும். இதை முதலாளித்துவத்தின் சரிவின் அடையாளமாக 'பிராவ்தா'வில் எழுதுவார்கள் என நிக்சனை எச்சரித்துள்ளார். அவர் குறிப்பிட்டதில் உண்மை உள்ளது, ஏனென்றால் டாலரின் வீழ்ச்சி என்பது வெறும் நாணயம் / பணம் சார்ந்த சிக்கல் மட்டுமல்ல. பணம் பொருளாதார அமைப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்ற போதிலும் இது அதைக் காட்டிலும் ஆழமான சிக்கல்,

இன்றுள்ள முதலாளித்துவ அரசியல் பொருளாதார அமைப்பின் சிக்கலே டாலர் சிக்கலாக வெளிப்படுகிறது.

டாலரின் சரிவை அமெரிக்கா என்ற நாட்டின் பொருளாதாரச் சரிவாக மட்டும் பார்க்க இயலாது. டாலர் அமெரிக்க தேசியப் பணமாக இருப்பதுடன் உலகப் பணமாகவும் இருப்பதால் இதை இன்றுள்ள அரசியல் பொருளாதார அமைப்பின் வீழ்ச்சியாகவும் பார்க்க முடியும். குறிப்பிட்டுச் சொன்னால் இன்றுள்ள முதலாளித்துவ அமைப்பின் வீழ்ச்சியாகவும் இருக்கிறது. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு இறுதியானதோ இயற்கையானதோ நிலைபேறுடையதோ அல்ல என்பதையும் நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

வரலாற்று வழியாக மனிதச் சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில் சமூக அமைப்புகள் தொடர்ந்து மாற்றத்திற்குட்பட்டு ஆதிப் பொதுவுடைமைச் சமூகம், அடிமைச் சமூகம், நிலக்கிழாரியச் சமூகம், முதலாளித்துவச் சமூகம், சோசலிச சமூகம் எனப் புதிய சமூக அமைப்புகள் தோன்றியுள்ளன. இவற்றில் எதுவுமே நிரந்திரமானதோ இறுதியானதோ அல்ல. அவை சமூக வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியையே குறிக்கும். ஆகவே முதலாளித்துவ சமூகமும் கடந்து செல்ல வேண்டிய ஒன்றுதான். காலமெல்லாம் அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பது சமூக இயங்கியல் நெறிகளுக்கு புறம்பானது.

ஆதிப் பொதுவுடைமைச் சமூகம் வர்க்கமற்ற சமூகமாக இருந்தது. அங்கே அனைத்துமே பொதுவுடைமையாக இருந்தன. சாதி, சமய, இன, பாலின அடிப்படையில் வேறுபாடுகளோ, சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளோ காணப்படவில்லை. ஆனால் அதற்குப் பின் தோன்றிய சமூக அமைப்புகளான அடிமைச் சமூகம், நிலக் கிழாரியச் சமூகம், முதலாளித்துவச் சமூகம் ஆகியவை உழைப்புச் சுரண்டலையும், தனியார் சொத்துடைமையையும் அடிப்படையாகக் கொண்ட வர்க்கச் சமூகங்களாகவும் இருந்துள்ளன.

முதலாளித்துவமும் என்றென்றும் ஒரேமாதிரியாக மாறிலி வடிவில் காணப்படவில்லை. அதுவும் தோற்றத்திலிருந்தே தொடர்ந்து மாற்றத்திற்கு உட்பட்டு வருகிறது. எப்படி ஒரு உயிரினத்தின் வாழ்க்கைச் சுழற்சியை பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி இறப்பு என வெவ்வேறு காலக்கட்டங்களாகப் பிரித்துப் பார்க்க முடியுமோ அதேபோல் ஒரு சமூக அமைப்பின் / உற்பத்திமுறையின் பரிணாம வளர்ச்சியையும் பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, இறப்பு என வெவ்வேறு காலகட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம். அப்படிப் பார்த்தோமானால் இன்று முதலாளித்துவம் முதிர்ந்து வயோதிக நிலையில் உள்ளது. ஆனால் அதை ஏற்க மறுத்து, தான் என்றும் இளமையாக இருப்பதாகக் காட்டிக்

கொள்ளப் பெரும்பாடு படுகிறது. அதனால் பிரச்சனைகள் தீவிரமடைந்துள்ளனவே தவிர குறைந்தபாடில்லை.

முதலாளித்துவத்திற்கு முன்பிருந்த சமூக அமைப்புகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அங்கிங்கே தன்னிச்சையாகத் தோன்றியிருந்தாலும், முதலாளித்துவம் தோன்றிய பிறகு உலகின் எந்தப் பகுதியும் அதன் ஆளுகைக்கு உட்படாமல் இல்லை. அனைத்தின் மீதும் அது தாக்குதலையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

முதலாளித்துவம் என்ற உலகளாவிய அமைப்பு ஏகாதிபத்தியத்தின் மூலமே தொடர்ந்து வளர்ச்சி பெற்றது, ஏகாதிபத்தியத்தின் மூலமே தன்னை அழிவிலிருந்து தொடர்ந்து பாதுகாத்து வருகிறது. 18-20ஆம் நூற்றாண்டுகளில் காலனியாதிக்கத்தால் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவம் 20-21ஆம் நூற்றாண்டில் நவீன தாராளமயம் என்ற ஏகாதிபத்தியத் தற்காப்புக் கருவியின் மூலம் புதிய காலனியாதிக்கத்தால் முதலாளித்துவ அமைப்பை அழிவிலிருந்து பாதுகாத்து வருகிறது.

ஏகாதிபத்தியத்தை மூன்று காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம் வரலாற்றுக் கட்டங்கள்: (1) ஆரம்பகாலக் காலனியாதிக்கம், (2) லெனின் குறிப்பிடும் ஏகபோக முதலாளித்துவம் - 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இரண்டாம் உலகப் போர் வரை, (3) உலகளாவிய அமெரிக்க மேலாதிக்க ஏகாதிபத்தியம்.

(1) ஆரம்பகாலக் காலனியாதிக்கம்:

இக்காலக்கட்டம் 16ஆம் நூற்றாண்டிலிருந்து 1870 வரையிலான காலப் பகுதியைக் குறிக்கும் இக்காலக்கட்டத்தில் பிரிட்டன் உலகளாவிய மேலாதிக்கம் பெற்றது. இதைப் போட்டிக்கால முதலாளித்துவம் என்றும் குறிப்பிடலாம். இங்கிலாந்தில் முதலில் முளைத்த முதலாளித்துவப் பெருங்கணவாயின் பெருங்கரங்கள் உலகெங்கும் நீட்சி பெற்றன. காலனியாதிக்கத்தின் மூலமே முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றது.

அமெரிக்காவில் தங்கம், வெள்ளி கண்டுபிடிப்பு, சுரங்கங்களைக் கைப்பற்றுதல், கொள்ளையடித்தல், அக்கண்டத்தின் பூர்வகுடியினரை அழித்தல், அடிமைப்படுத்துதல், ஆப்பிரிக்காவைக் கறுப்புத் தோல்களின் வணிக வேட்டைக் காடாக மாற்றுதல் இத்தகைய சிறப்பியல்புகளுடன்தான் முதலாளித்துவச் சகாப்தத்தின் விடியல் அமைந்ததாக மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

(2) ஏகபோக முதலாளித்துவம்:

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இரண்டாம் உலகப் போர் வரையிலான காலப்பகுதியை

ஏகாதிபத்தியத்தின் இரண்டாம் காலகட்டமாகக் குறிப்பிடலாம் இதையே லெனின் 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்' என்ற நூலில் விவரிக்கிறார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கனரகத் தொழிற்சாலைகளில் புதிய உற்பத்தி முறைகள் மேற்கொள்ளப்பட்டன. கூட்டுப்பங்கு நிறுவனங்களும், ஏகபோக அமைப்புகளும் உருவெடுத்தன. முதலாளித்துவம் ஏகபோக வடிவைப் பெற்றது. பிரிட்டனின் உற்பத்தித் திறன் குறைந்தது, ஜெர்மனியும், அமெரிக்காவும் தொழில் நுட்ப வளர்ச்சியால் அதிக உற்பத்தித் திறனுடன் புதிய போட்டியாளர்களாகப் பொருளாதார மேன்மை பெற்றன. உலகளவில் ஆற்றல் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டது. பிரிட்டானிய ஸ்டெர்லிங் வீழ்ச்சியடைந்து, தங்கத் தரத்தை விட்டு வெளியேறியது. உலகைப் பங்கிடுவதற்காகக் காலனியாதிக்க நாடுகளிடையே ஏற்பட்ட போட்டி உலகப் போராக வெடித்தது. ரஷ்யாவில் சோசலிசப் புரட்சி ஏற்பட்டு முதலாளித்துவ அமைப்பைக் காட்டிலும் மேம்பட்ட ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபித்தது. 1928இல் பொருளாதாரப் பெருமந்த நிலை ஏற்பட்டது. முதல் உலகப் போரில் ஜெர்மனியின் வீழ்ச்சி, பாசிசத்தின் வளர்ச்சி, என பிரிட்டனின் வீழ்ச்சியிலிருந்து உலகை மறு பங்கிடுவதற்கான இரண்டாம் உலகப் போர் வரையிலான காலத்தை ஏகாதிபத்தியத்தின் இரண்டாம் காலகட்டமாகக் குறிப்பிடலாம்.

(3) உலகளாவிய அமெரிக்க மேலாதிக்க ஏகாதிபத்தியம்:

இதைத் தங்கத் தரத்துடன் டாலர் இருந்த காலகட்டம் (1944-73) எனவும், தங்கத் தரத்திலிருந்து விலகிய டாலரின் மிதவைக் காலகட்டம் எனவும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். இரண்டு உலகப் போர்களின் மூலம் லாபமும், வளர்ச்சியும் பெற்று பொருளாதார மேன்மையடைந்திருந்தது அமெரிக்கா. பிரெட்டன்வுட்ஸ் அமைப்பின் மூலம் அமெரிக்க டாலர் உலகப் பணமாக அங்கீகரிக்கப்பட்டுத் தங்கத் தரத்துடன் இணைக்கப்பட்டது. காலனிய நாடுகள் விடுதலை பெற்றன. சோஷலிச நாடுகளின் வளர்ச்சியால் உலகம் முதலாளித்துவ முகாம், சோஷலிச முகாம் என இரு துருவங்களாகப் பிரிந்தது. அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ முகாம், சோவியத் ரஷ்யாவின் தாக்கம் தங்கள் நாடுகளில் பரவாமலிருக்க முயற்சிகள் மேற்கொண்டது. இருந்த போதும் இரு துருவச் சூழலில் முதலாளித்துவ நாடுகள் ரஷ்யாவின் முன்னுதாரணத்தால் தங்கள் நாடுகளில் புரட்சி வெடிக்காமல் தடுக்கவும், உழைக்கும் மக்களின் போராட்டங்களுக்கு அணை போடவும் உழைக்கும் மக்களின் எழுச்சிக்குக் காது கொடுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. சோசலிசத்தின் வளர்ந்து வரும் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்காக, அதை உலக வரலாற்றிலிருந்து துடைத்தெறியவும், முதலாளித்துவம்

சில சமரசங்களைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. இதனால் சமூகத் துறைகளுக்கு, பொதுத் துறைகளுக்கு ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டன, கூலி உயர்வு ஏற்பட்டது. சொத்து வரி, வருமான வரி மூலமாக, நாடுகளுக்குள்ளே பொருளாதார ஏற்றத் தாழ்வு அதிகரிக்காமல் கட்டுப்படுத்தப்பட்டது. வளர்ந்த நாடுகளில் பெரும உற்பத்திமுறையின் அடிப்படையிலான நுகர்வு வளர்ச்சி ஏற்பட்டது. இந்த வளர்ச்சிநிலை 1973-74 வரை நீடித்தது. இந்தக் காலக்கட்டத்தில் உற்பத்தியானது பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தில் இருந்தது. நிதியமைப்பும் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே செயல்பட்டது.

அதே போது சோசலிசத்தை அடியோடு அழிப்பதற்கான நேட்டோ, சீட்டோ என பல ராணுவக் கூட்டமைப்புகளை அமெரிக்கா ஏற்படுத்தியது. சோசலிஸ்டுகள் அமெரிக்காவில் வேட்டையாடப் பட்டார்கள். அமெரிக்காவால் உலகெங்கும் தொடுக்கப்பட்ட போர்கள், ராணுவ நடவடிக்கைகளால் மேலும் மேலும் அதிகரிக்கப்பட்ட ராணுவ நிதி ஒதுக்கீடுகளால் அதன் பொருளாதார வளர்ச்சியும், உற்பத்தித் திறனும் நலிவடைந்தன. 1970களில் பொருளாதாரத் தேக்கமும் லாப வீழ்ச்சியும் ஏற்பட்டது.

அமெரிக்காவின் குறையும் தங்க இருப்புகளாலும், பெருகும் டாலர் வெளியீடுகளாலும் டாலரின் மதிப்பு வீழ்ச்சி பெற்றுக் கேள்விக்குட்படுத்தப் பட்டதால் நிக்சன் அரசு தங்கத் தரத்தை விட்டு வெளியேறியது. பெட்ரோ டாலர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. பொருளாதாரத் தேக்கத்திலிருந்து வெளிவரவும், லாபத்தை அதிகரிக்கவும் நவீன தாராளமயம் என்ற பெயரில் உழைக்கும் வர்க்கத்தையும், மூன்றாம் உலக நாடுகளையும் சுரண்டுவதற்கான நவீன காலனியாதிக்கக் கொள்கைகள் நிறைவேற்றப்பட்டன. நிறுவனங்கள், சொத்துக்களின் மீதான வரிவிதிப்பு குறைக்கப்பட்டதாலும், கூலிக் குறைவாலும் பொருளாதார ஏற்றத்தாழ்வு நாடுகளுக்கிடையேயும், நாடுகளுக்குள்ளும் அதிகரித்துள்ளது. இருப்பினும் நவீனக் காலனியாதிக்கக் காலக்கட்டத்தில் உலகின் மொத்தப் பொருளாதார வளர்ச்சி குறைவாகவே காணப்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் அபரிமிதமான வளர்ச்சி பெற்றுள்ளன.

### நிதிமயமான முதலாளித்துவம்:

புதிய தாராளமயக் கொள்கைகளே நிதிமயத்திற்கான கோட்பாடை வழங்கியுள்ளன. வளர்ந்த நாடுகளில் முதிர்ச்சியடைந்த முதலாளித்துவத்தில் நிதித்துறை நடவடிக்கைகளின் வெளி கணிசமாக உயர்ந்து நிதிமயமாக்கம் ஆட்சி செலுத்துகிறது. 1970களிலிருந்தே ஏகபோக முதலாளித்துவம் நிதிமய வடிவைப் பெற்றது. இது நிதிக் குமிழிகள் உருவாவதற்கும், தொடர்ந்து

வரும் பொருளாதார நிதி நெருக்கடிகளுக்கும், பெருகிவரும் வேலையின்மைக்கும் காரணமாக உள்ளது.

முதலாளித்துவம் முதிர்ந்த வளர்ந்த நாடுகளில் உற்பத்திச் செயல்பாடுகளில் லாபவீதங்கள் குறைந்ததால் மூலதனத் திரட்டல் தேக்கமடைந்துள்ளது. உலக அளவில் உற்பத்திச் செயல்பாடுகள் பெருமளவில் மூன்றாம் உலக நாடுகளுக்கு மாற்றப்பட்டன. வளர்ந்த நாடுகளின் முதலாளித்துவ அரசுகள் நிதிமயத்தையே ஊக்கப்படுத்துகின்றன.

உற்பத்தித் துறையைக் காட்டிலும் நிதித்துறை, ரியல் எஸ்டேட், வங்கித் துறை, சேவைத் துறை ஆகிய சுற்றோட்டத் துறைகளே பெருக்கமடைந்துள்ளன. மொத்தப் பொருளாக்க மதிப்பில் உற்பத்தித் துறையின் பங்கு குறைந்து, சுற்றோட்டத் துறைகளின் பங்கு (FIRE-Finance, Insurance, Real estate) அதிகரித்துள்ள போக்கு நிதிமயத்தையே குறிப்பிடுகிறது. நிதிமயம் பொருளாதார அமைப்பெங்கும் அழிவேற்படுத்தும் தாக்கங்களை உருவாக்கியுள்ளது.

நிதிசாரா நிறுவனங்கள், வங்கிகள், இல்லத்தார்களின் செயல்பாடுகளில் ஏற்பட்ட மாற்றமே நிதிமயத்தின் மையக்கூறாக உள்ளது என கிரேக்கப் பொருளாதாரவியலாளர் கோஸ்தாஸ் லாபாவித்சாஸ் குறிப்பிடுகிறார். இதில் முதலாவதாக நிதிசாரா நிறுவனங்கள் நிதி நிறுவனங்களைச் சாராமல் தன்னிச்சையாகவே நிதி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இரண்டாவதாக வங்கிகள் முற்றிலும் கடன் பெற்றுக் கடன் சேவையளிப்பதை காட்டிலும் திறந்த நிதிசந்தைகளில் வர்த்தகம் செய்வதன் மூலம் லாபம் பெறவே முற்படுகின்றன. மூன்றாவதாக தனிநபர்களும், இல்லத்தாரும் அத்தியாவசியப் பொருட்களையும், வீட்டுவசதி, கல்வி, உடல் நலம், போக்குவரத்துச் சேவைகள், என அனைத்திற்குமே கடன் பெற வேண்டிய நிலையும், நிதித் துறையையே அதிக அளவில் சார்ந்திருக்கும் போக்கும் ஏற்பட்டுள்ளது.

இவையே நிதிமயத்தின் மூன்று குறிப்பிடத்தக்க அம்சங்கள் என கோஸ்டாஸ் சுட்டிக்காட்டுகிறார். நிதிசாரா நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்குமான இடைவெளி அதிகரித்துள்ளது. தற்போதுள்ள ஏகபோக மூலதன நிறுவனங்கள், தங்களது லாபத்திலிருந்தே முதலீடுகளுக்கான நிதியைப் பெறுகின்றன. நிதிசார்ந்த திறன்களை வளர்த்துக் கொள்கின்றன. வெளியிலிருந்து கடன் தேவைப்பட்டால் திறந்த சந்தைகளில் பெறுகின்றன.

வங்கிகள் உற்பத்தி அடிப்படையிலான தொழில் நடவடிக்கைகளுக்கு நிதிக்கடன் அளிப்பதைக் காட்டிலும், நிதிச் செயல்பாடுகளுக்கும், தனி நபர்களுக்கும், சில்லறைக் கடன் துறைகளுக்குமே அதிக அளவில் கடன் அளிக்கின்றன. நிதி மயமாக்கத்தில் வங்கிகள் முக்கியப் பங்கு

வகுக்கின்றன. 1980களில் மிகச் சிறு பகுதியாக இருந்த வருவிப்புச் சந்தைகள் (derivative markets) 2011இல் 700 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்ந்தன. பெருமளவு விரிந்து பரந்த இந்த வருவிப்புச் சந்தைகளின் மையமாகச் செயல்படும் சர்வதேச வங்கிகள் நிதிமயமாக்கத்தின் உந்துசக்தியாகவும் உள்ளன.

லாபம் பெறுவதற்கான அடிப்படை உற்பத்தித் துறையிலிருந்து சுற்றோட்டத் துறைக்கு மாற்றம் பெற்றுள்ளது. நிதி லாபம் முன்னிலை பெற்றுள்ளது. ஊதியங்களிலிருந்தும், கூலிகளிலிருந்தும் சுரண்டுவதன் மூலம் நேரடியாகவும் அமைப்பு சார்ந்தும் லாபம் அபகரிக்கப்படுகிறது. உற்பத்தித் துறையில் தொழிலாளரின் ஊதியமற்ற உழைப்பைச் சுரண்டி லாபம் பெறுவது முதல் வகைச் சுரண்டல். ஒரு தொழிலாளருக்குக் கடன் கொடுப்பதன் மூலம் கூலியைச் சுரண்டுவது இரண்டாம் வகைச் சுரண்டல். இது உபரி மதிப்பு சாராத சுற்றோட்டத் துறைகளில் நடைபெறும் கூடுதல் சுரண்டல். இதை மதிப்புச் சுரண்டல் எனவும் குறிப்பிடலாம்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி, சுற்றோட்டம், விநியோகம் ஆகியவற்றில் உற்பத்தியே முதன்மைப் பங்கு வகிக்கிறது. முதலாளித்துவத்தில் உற்பத்தியின் நோக்கம் மூலதனத் திரட்டலே, உபரி மதிப்பாக்கத்தைப் பெருக்குவதே ஆகும். மூலதனம் என்பது அதன் உடைமையாளருக்கு உழைப்பைச் சுரண்டுவதற்கான வாய்ப்பைத் தருகிறது. உற்பத்தி நிகழ்முறையில் தொழிலாளர்களின் ஊதியமற்ற உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் பெறப்பட்ட உபரி மதிப்பே லாபமாகிறது. லாபத்தின் ஒரு பகுதியே கடனுக்கான வட்டியாக நிதி மூலதன உடைமையாளருக்குச் செலுத்தப்படுகிறது. உபரி மதிப்பிலிருந்து நிதி மூலதனத்திற்கான வட்டி கிடைக்கிறதே தவிர நிதி மூலதனம் தன்னிச்சையாக தன்னைத்தானே பெருக்கிக் கொள்வதால் அல்ல. நிதி மூலதனம் குட்டி போடுவதில்லை. அப்படிப்பட்ட ஒரு மாய்மாலத் தோற்றத்தையே ஏற்படுத்துகிறது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இரண்டு வகையான மூலதனத் திரட்டல் காணப்படுகிறது. பங்குச் சந்தையின் மூலம் மூலதனம் திரட்டப்படுவதை நிதி மூலதனத் திரட்டல் எனலாம், இது இரண்டாம் வகையான மூலதனத் திரட்டல். இதன் மூலம் திரட்டப்படும் மூலதனம் அனைத்துமே உற்பத்தித் திறனுள்ள முறையில் முதலீடு செய்யப்படுவதில்லை. அப்படி என்றால் முதலாளித்துவச் சமூகத்தில் உண்மையான / முதன்மையான மூலதனத் திரட்டல் எங்கு நடைபெறுகிறது? நிச்சயமாக நிதித்துறைகளில் அல்ல. உற்பத்தித் துறைகளில் உழைப்பாளரின் ஊதியமற்ற உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் திரட்டப்படும் உபரி மதிப்பின் திரட்டலே

உண்மையான / முதன்மையான மூலதனத் திரட்டல் ஆகும். உபரி மதிப்பிலிருந்தே லாபம் பெறப்படுகிறது.

**உண்மையான மூலதனத் திரட்டல்:**

உற்பத்தித் துறையில் உபரிமதிப்பாக்கத்தின் மூலம் செய்யப்படும் மூலதனத் திரட்டலே உண்மையான மூலதனத் திரட்டல் ஆகும். உபரி மதிப்பாக்கத்திற்குத் தொழில்துறை மூலதனமும், உபரிமதிப்பைப் பணமாக ஈடேற்றம் பெற வணிக மூலதனமும் பங்களிக்கின்றன.

நிதி மூலதனத் திரட்டல்:

பங்குச் சந்தைகள், நிதி நிறுவனங்கள் போன்ற சுற்றோட்டத் துறைகளின் மூலம் செய்யப்படும் மூலதனத் திரட்டல் நிதி மூலதனத் திரட்டல் எனப்படுகிறது. நிதித் துறையில் புதிய மதிப்பு உருவாக்கப்படுவதில்லை. உற்பத்தித் துறையில் பெறப்பட்ட லாபத்திலிருந்தும், பெரும் தரப்பு மக்களின் வருவாய், ஓய்வூதியம், கூலி என அனைத்து விதமான வருவாய்களும் நிதிச் செயல்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டும் நிதி மூலதனம் திரட்டப்படுகிறது. உபரி மதிப்பு சாராத சுற்றோட்டத் துறைகளில் நடைபெறும் இந்தக் கூடுதல் சுரண்டலில், மதிப்பு சுரண்டல் பிரதான பங்கு வகுக்கிறது.

நிதிமயமாக்கத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் நிதி பரிவர்த்தனைகளின் மூலமே அதிக லாபம் பெறப்படுகிறது, உபரிமதிப்பாக்கத்துக்கு நேரடியான தொடர்பில்லாத(மறைமுகத் தொடர்பு கொண்ட) லாப வடிவங்கள் அதிகரித்துள்ளன. இந்த ஒட்டுமொத்த சுரண்டல் அமைப்பை நிதிமூலமான அபகரிப்பு (financial expropriation) என கோஸ்தாஸ் குறிப்பிடுகிறார்.

பங்குச் சந்தைகள் அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளன.ஆனால் பங்குச் சந்தையின் சந்தை மூலதனத்தின் மொத்த மதிப்புமே உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்படுவதில்லை. சந்தை மூலதன மதிப்பிற்கும், உற்பத்தித் துறையில் செய்யப்படும் மூலதன மதிப்பிற்கும் இடையிலான வேறுபாடே நிதிமுதலீட்டாளர் லாபம் என்று பொருளாதார அறிஞர் ஹில்ஃபெர்டிங்க் வரையறுத்துள்ளார்.இதிலிருந்தே, நிறுவனங்களின் முதன்மை பங்குதாரர்களும், நிதி நிறுவனங்களும், இடைத்தரகர்களும் பெரும் லாபம் அடைகிறார்கள். நீண்ட கால அளவில் மட்டும் தான் பங்குச் சந்தை நிலைகள், மூலதனத் திரட்டலுக்கான சுழற்சியுடன் ஒத்து போகிறது. குறுகிய கால அளவில் செய்யப்படும் ஊக முதலீடுகளே இந்த வேறுபாடு ஏற்பட காரணமாகிறது. இந்த ஊக முதலீடுகளை கட்டுப்படுத்தவும், நிதிச் செயல்பாடுகளை ஒழுங்குமுறை படுத்தவும் வரிகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக பங்கு பரிவர்த்தனை

வரியை (security transaction tax) விதிக்க வேண்டும். டோபின் என்ற பொருளாதார அறிஞர் நாணயப் பரிவர்த்தனைகளில் செய்யபடும் ஊக முதலீடுகளைத் தடுக்க ஒரு வரிமுறையை முன்மொழிந்தார். இது டோபின் வரி என அழைக்கப்படுகிறது. ஆனால் இந்த வரிவிதிப்பினால் நிதித்துறையின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்று நடைமுறைபடுத்தப்படாமல் தடுக்கப்படுகிறது.

யார் யாருக்கு உதவுகிறார்?

டாலரின் மேலாதிக்கத்தை அடிப்படையாக கொண்ட நிதிமயமாக்கத்தின் உறிஞ்சு குழல்கள் உலகெங்கும் பரவியதால் அங்கிருந்தெல்லாம் மதிப்பு / செல்வம் அமெரிக்காவுக்குக் கடத்தப்படுகிறது. அமெரிக்கா மிகப்பெரும் கடனாளி நாடாக உள்ளது. வளரும் நாடுகளிலிருந்து வரும் கடன் மூலதனங்களே அமெரிக்க நுகர்வுக்கு நிதியளிக்கின்றன.

வளரும் நாடுகளின் நிதித்துறை அமைப்புகள் வளர்ந்த நாடுகளின் நிதித்துறை அமைப்புகளைச் சார்ந்திருக்கும் நிலை உள்ளதால் வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்கு மதிப்பு கடத்தப்படக் காரணமாகிறது. இது வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளுக்குக் கப்பம் கட்டுவதைப் போல் உள்ளது என கோஸ்டாஸ் குறிப்பிட்டுள்ளார்.

அந்நிய முதலீடுகள் வளரும் நாடுகளில் வளர்ச்சியை ஏற்படுத்தும் எனப் பரிந்துரைக்கப்பட்டாலும், உண்மையில் அவை வளரும் நாடுகளிலிருந்து நிதியை அபகரிப்பதற்கான கருவியாகவே செயல்படுகின்றன. அது போலவே அந்நிய நிறுவனங்களாலும் நமக்குப் பெரும் இழப்பே ஏற்படுகிறது. பொருளாதார அறிஞர்கள் பால் பரனும், ஹாரி மேக்தாஃபும் எந்த நாடும் அதன் எல்லைக்குள் அந்நிய நிறுவனங்களை அனுமதிக்கக் கூடாது, அந்நிய நிறுவனங்கள், வளங்களை வெளிநாட்டுக்குக் கடத்துவதற்கான குழாய்களே என குறிப்பிடுகின்றனர்.

1870லிருந்து 1914 வரை பிரிட்டனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மூலதனத்தின் அளவு 2.4 பில்லியன் பவுண்ட். ஆனால் அதிலிருந்து பிரிட்டன் பெற்ற வருவாய் மதிப்பு 4.1 பில்லியன் பவுண்ட் . அமெரிக்க நிறுவனங்கள் 1950-63க்கு இடைப்பட்ட பகுதியில் 17.4 பில்லியன் டாலர் மூலதனங்களை ஏற்றுமதி செய்தன. ஆனால் அதன் மூலம் 29.4 பில்லியன் டாலர் லாபமடைந்தன. இதெல்லாம் பழங்கதை இப்பொழுதெல்லாம் அந்நிய முதலீடுகள் வளர்ச்சிக்கே உதவுகின்றன எனக் கருதுவோமானால் அது தவறு.

உலகளவில் பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்கு வறுமையை ஒழிக்கவும், வளர்ச்சிக்காகவும் தாராளமாக தங்கள் செல்வத்தை வழங்குகின்றன, என்பது தான் நம் காதுகளில் தொடர்ந்து ஓதப்படும் கதை. அமெரிக்காவை மையமாகக் கொண்ட உலகளாவிய நிதி ஒருமைப்பாட்டிற்கான

அமைப்பும் (ஜி.எஃப்.ஐ), நார்வே பொருளியல் பள்ளியின் பயன்பாட்டு ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை இதை அப்பட்டமான பொய் என நிரூபித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையில் நடக்கும் அனைத்து விதமான நிதி பரிவர்த்தனைகள், பரிமாற்றங்கள், நிதி உதவி, வெளிநாட்டு முதலீடு, வர்த்தகம், கடன் ரத்து, வெளி நாட்டில் வேலை செய்வோரால் பரிமாற்றப்படும் நிதி, பதிவு செய்யப்படாத மூலதன கடத்தல் அனைத்துமே இந்த ஆய்வில் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

2012இல், வளர்ந்த நாடுகளிடமிருந்து வளரும் நாடுகள் மொத்தம் 1.3 லட்சம் கோடி டாலர் பெற்றன (இதில் நிதி உதவி, முதலீடு, வெளிநாட்டு வருமானம் ஆகியவை அடங்கும்). ஆனால் அதே ஆண்டு வளரும் நாடுகளிலிருந்து 3.3 லட்சம் கோடி டாலர் வளர்ந்த நாடுகளைச் சென்றடைந்துள்ளது. வளரும் நாடுகளிடமிருந்து 2 லட்சம் கோடி டாலர் பறிக்கப்பட்டுள்ளது. 1980 முதல் 2012 வரை வளரும் நாடுகளிலிருந்து மொத்தம் 16.3 லட்சம் கோடி டாலர் வளர்ந்த நாடுகளால் அபகரிக்கப்பட்டுள்ளது. இதில் வட்டித் தொகை மட்டும் 4.2 லட்சம் கோடி டாலர் செலுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது சொல்லுங்கள் இதில் யார் யாருக்கு உதவுகிறார்?

பணக்கார நாடுகள் ஏழை நாடுகளை வளர்க்கவில்லை; ஏழை நாடுகளைச் சுரண்டியே பணக்கார நாடுகள் வளர்ந்து வருகின்றன.

1990களிலிருந்து நிலையற்ற வெளிநாட்டுத் தனியார் முதலீடுகள் நிதிச் சமநிலையைக் கடுமையாகப் பாதித்து, நிதி நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. வளரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் அந்நிய மூலதன பாய்ச்சல் வரமா சாபமா? என்று பார்த்தால் சாபக்கேடுதான் என்கிறது பாகிஸ்தானின் வளர்ச்சிக்கான ரிவீயுவில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வுக் கட்டுரை.

நிலையற்ற அமெரிக்க டாலர் அதைச் சார்ந்து ஊசாலாடும் மற்ற நாணயங்களின் பரிமாற்ற விகிதங்களிலும், வட்டி வீதங்களிலும் பெரும் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் சர்வதேச நிதிச் சந்தைகள் பெரும் வளர்ச்சியும், லாபமும் அடைந்துள்ளன. இது உலகெங்கும் பணவீக்கம் அதிகரிப்பதற்கே காரணமானது பணவீக்கம் அதிகமானால் நிதிமயமாக்கத்தின் மூலம் பெறப்படும் லாபம் குறைந்து விடும் என்பதற்காகத்தான் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முறை (inflation targeting) உலகெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாறு பணவீக்கத்தைக் குறைப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகள் வளரும் நாடுகளில் அதிக வட்டி வீதங்கள் விதிக்கப்படுவதற்கும் பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தி பொருளாதாரக் குறுக்கத்தை ஏற்படுத்தவும் காரணமாக அமைந்துள்ளன.

வளரும் நாடுகளில் காணப்படும் உயர்ந்த வட்டி வீதம், அந்நிய முதலீட்டாளர்கள் வளர்ந்த நாடுகளில் மலிவுக் கடன் பெற்று, வளரும் நாடுகளின் நிதிச் சொத்துக்களில் முதலீடு செய்வதன் மூலம் நிதி லாபம் பெறுவதையே ஊக்கப்படுத்துகிறது. அந்நிய முதலீடுகள் அதிகரிக்கும் போதும், வெளிநாட்டு நாணயங்களில் கடன் பெறுவது அதிகரிக்கும் போதும் நாணயப் பரிவர்த்தனை ஏற்ற இறக்கங்களில் ஏற்படும் இழப்புகளைக் காப்பீடு செய்ய அந்நிய செலவாணி இருப்புகளை அதிகளவில் சேமிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. வளரும் நாடுகளின் மத்திய வங்கிகள் அந்நியச் செலவாணி இருப்புகளை அதிகரிக்க அமெரிக்க அரசின் நிதிப் பத்திரங்களை வாங்கிக் குவிக்குமாறு நிர்பந்திக்கப்படுகின்றன. இதுவும் வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்கு மூலதனம் அபகரிக்கப்படுவதற்குக் காரணமாகிறது. டானி ரோட்ரிக்கின் 'அந்நிய செலாவணி இருப்புகளுக்கான சமூகச் செலவு' என்ற ஆய்வறிக்கை 1990களின் முற்பகுதியிலிருந்து வளரும் நாடுகளின் அந்நியச் செலவாணி இருப்புக்களில் மிக விரைவாக உயர்ந்துள்ளது எனவும், இந்த இருப்புக்கள் வளரும் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 30 சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டுகிறது. மேலும் வெளிநாட்டு கடன் வாங்குவதால், இந்த நாடுகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு உலக அளவில் மொத்த உற்பத்தி (ஜிடிபி) மதிப்பில் 1 சதவீதத்தை எட்டியுள்ளதாகக் குறிப்பிடுகிறது.

2000களில் அமெரிக்காவின் மொத்த லாபத்தில் நிதி லாபத்தின் பங்கு 45%ஆக உயர்ந்துள்ளதாக கோஸ்தாஸ் குறிப்பிடுகிறார்.

நிதி முதலீடுகளில் இழப்புகளைத் தவிர்ப்பதற்காக 'ஹெட்ஜிங்' (hedging) எனப்படும் இழப்புக் காப்புமுறை செயல்படுத்தப்படுகிறது. ஆனால் இதையே லாபம் ஈட்டுவதற்கான கருவியாகப் பயன்படுத்தி ஊக முதலீட்டாளர்களும், நிதி நிறுவனங்களும் அதிக லாபம் ஈட்டி வருகின்றன. வேலியே பயிரை மேயும் கதையாக இழப்புகளைத் தடுப்பதற்கான கருவியும் எதிர்மறையாக இழப்புகளை அதிகப்படுத்துகின்றன. இதனால் சிறு முதலீட்டாளர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பங்குச் சந்தை ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் அபாயங்களைக் குறைப்பதற்காகவே வர்த்தக வங்கிகள் சொத்து நிதி வருவிப்புகளில் புத்தாக்கங்களை ஏற்படுத்தி சந்தைகளை விரிவுபடுத்தின. சொத்து வருவிப்புகளில் ஏற்படும் அபாயங்களைப் போக்கப் பாதுகாப்புக் கருவிகள் (securitization) செயல்படுத்தப்பட்டன. இவை எதிர்பார்த்த படி அபாயங்களைக் குறைக்கவில்லை, ஊக லாபங்களை பெறுவதற்கான புதிய வாய்ப்புகளை வழங்கியதுடன் எதிர்பாராத புதிய நெருக்கடிகளையே அதிகரித்துள்ளன. உண்மையான மூலதனத் திரட்டல்,நிதி

மூலதனத் திரட்டல் இடையில் பொருந்தா நிலையை,முரண்பாடுகளை நிதிமயமாக்கம் அதிகரித்துள்ளது. முதலாளித்துவம் ஏற்படுத்தியுள்ள பல்வேறு முரண்பாடுகளுள் இது ஒன்று மட்டுமே.

சமூகத்தின் அனைத்து தரப்பினருமே நிதிமயமாக்கத்தின் ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர். நிதிமயமாக்கத்தின் மூலம் தனி நபர்கள்,குடும்பங்களின் கடன் நிலை அதிகரித்துள்ளது. அமைப்புகள், நிறுவனங்கள், அரசுகள் என அனைத்தின் கடன் நிலையும் அதிகரித்துள்ளது. உலகெங்கும் கடன் நிதி சார்ந்தே பொருளாதாரம் இயங்கி வருகிறது. நிதிமயமாக்கம் மூன்றாம் உலக நாடுகளை கடன் பொறியில் சிக்கும் நிலையை அதிகப்படுத்தியுள்ளது. கட்டற்று எங்கும் பரவிய நிதிமயமாக்கத்தாலும், நிதி நெருக்கடிகளை குறைப்பதற்கான புத்தாக்க முயற்சிகளாலும் நிதி நெருக்கடிகள் ஏற்படுவதற்கான அபாயம் அதிகரித்துள்ளதே ஒழிய குறைந்தபாடில்லை. நிதி முதலீடுகளின் மூலம் உலகின் பெரும்பணக்காரரான வாரன் பஃபெட் நிதியமைப்பில் பேரழிவை ஏற்படுத்தும் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். முதலாளித்துவ பொருளியலாளர்களில் பலர் நிதித்துறையை ஒழுங்குமுறைக்குள் கொண்டு வரவேண்டும் நிதிமுதலீடுகளில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தையே முன் வைத்துள்ளனர். முதலாளித்துவ அமைப்பு முறையை பாதுகாக்கும் விதமாக நவீன தாராளமயத்தை சீர்திருத்துவதன் மூலம் மட்டுமே பொருளாதார நெருக்கடிகளுக்கு முடிவுகட்ட முடியாது. அரசியல் பொருளாதார அமைப்பு மாற்றத்தின் மூலமே நீடித்தத் தீர்வைப் பெற முடியும்.

**ராணுவ மேலாதிக்கம்:**

உலகச் சந்தையின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகளால் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் அமெரிக்காவின் அரசியல் அதிகாரம், ராணுவ பலத்தைச் சார்ந்துள்ளது.

இரண்டு உலகப் போர்களின் போதும் ராணுவத் தளவாட உற்பத்தியால் பொருளாதார வளர்ச்சி பெற்ற அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி குறைவதற்கும் ராணுவ ஆதிக்கமே முக்கியக் காரணமாக உள்ளது. இழந்த பொருளாதார மேன்மையை இட்டு நிரப்ப அது ராணுவ பலத்தையே நம்பியுள்ளது.

சோசலிசம் ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று பல பொய்ப் பரப்புரைகள் செய்து, சோசலிசத்தை நீக்க வேண்டும் என்ற நோக்குடன் போர் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டது. சோவியத் ரஷ்யா இருந்த போது அதன் வளர்ச்சியைத் தடுக்கவும், உலக

வரைபடத்திலிருந்து சோஷலிசத்தைத் துடைத்தெறியவும் ராணுவக் கூட்டமைப்புகளை ஏற்படுத்தியது. பனிப் போர் என்று கூறப்பட்டாலும் அமெரிக்கா வெளிப்படையாகவே சீனா, கொரியா, வியட்நாம், கியூபா, வெனிசுலா ஆகிய நாடுகளின் மீது போர் தொடுத்தது.

சோவியத்து ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பிறகு பனிப்போருக்கு மாற்றாக தீவிரவாதத்திற்கு எதிரான போர், ஜனநாயகத்துக்கான போர், மனித உரிமைகளுக்கான போர், சர்வாதிக்கத்திற்கு எதிரான போர் எனப் பல்வேறு போர்வையில் போர் தொடுப்பதற்காக ராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டைக் குறையாமல் பார்த்துக் கொண்டது. இதன் மூலமே தன் மேலாதிக்கத்தைத் தக்க வைத்துள்ளது. அணு ஆயுத வளர்ச்சியைத் தடுப்பதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட அமெரிக்கா மறுத்தது. அது உலகெங்கும் தீவிரவாதத்தையே விதைத்துள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் சரிவை அடுத்து அமெரிக்காவில் எல்.எல்.டபிள்யூ. புஷ் நிர்வாகத்தின் பாதுகாப்புத் துறை மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக் கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியது மார்ச் 1992 பாதுகாப்புத் திட்டமிடலுக்கான வழிகாட்டுதல், பாதுகாப்புத் துறைக் கொள்கை துணைச் செயலாளர் வொல்போவிட்ஸினால் உருவாக்கப்பட்டது. அதன் படி அமெரிக்காவின் முதன்மையான தேசியப் பாதுகாப்பு இலக்கானது "எந்தவொரு உலகளாவிய போட்டியாளரின் தோற்றத்தையும் தடுக்கும்" விதமாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

செப்டெம்பர் 11, 2001ஐத் தொடர்ந்து இந்த அணுகுமுறையே அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு உத்திக்கான கொள்கையானது. இதைத் தொடர்ந்து ஈராக்கின் மீதான அமெரிக்கா தொடுத்த போரானது ஒரு புதிய உலகப் போரை பிரகடனப்படுத்தியதாக பெலாமி ஃபொஸ்டர் (Naked Imperialism) குறிப்பிடுகிறார்.

ஜார்ஜ் புஷ்ஷின் நிர்வாகம், அமெரிக்கப் பாதுகாப்பின் மறுகட்டமைப்பு என்ற பெயரில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தையும், ஆக்கிரமிக்கும் போக்கையும் பட்டவர்த்தனமாக்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கான அறிக்கையையே மீண்டும் உறுதிப்படுத்தியது.

**சீன எதிர்ப்பு குவாட்:**

வளர்ந்து வரும் சீனாவின் பொருளாதார வளர்ச்சியைத் தடுத்து அதைத் தனிமைப்படுத்தும் வகையில் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நான்கு நாடுகளைக் கொண்ட குவாட் என்ற ராணுவக் கூட்டணியை அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது. அணிசேரா நாடுகளில் ஒன்றாக இருந்த இந்தியா பொருளாதாரச் சீர்திருத்தத்திற்குப் பின் அதிக அமெரிக்கச் சார்பு

கொண்ட நாடாக மாறியுள்ளது. அதன் வெளிப்பாடே '123' ஒப்பந்தம். தற்போது நரேந்திர மோடி அரசு அமெரிக்காவுடன் மேலும் அதிக நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாஜக ஆட்சியில் 2015ல் அமெரிக்காவும், இந்தியாவும் "ஆசிய-பசிபிக், இந்தியப் பெருங்கடலுக்கான கூட்டு மூலோபாய நோக்கு" குறித்த அறிக்கையில் கையெழுத்திட்டன. அதற்கடுத்த ஆண்டில், இரு நாடுகளும் தளவாடப் பரிமாற்றங்களுக்கான ஒப்பந்த அறிக்கையில் (லெமோவா) கையெழுத்திட்டன. அமெரிக்க இராணுவப் படைகளுக்கு முதன்முறையாக இந்திய இராணுவத் தளங்களைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டது. இது கிட்டத்தட்ட அமெரிக்க இராணுவத் தளத்தை இந்தியாவில் நிறுவியதற்குச் சமானமானது என்றே கூறலாம். தென் கொரியா, நியூசிலாந்து, வியட்நாம் போன்ற பிற நாடுகளையும் குவாட் கூட்டணியில் இணைத்து குவாட் பிளஸ் ஆக விரிவுபடுத்தும் முயற்சியிலும் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.ஆசியாவின் நோட்டோ ஒப்பந்தம் என சீனா இதை வன்மையாகக் கண்டித்துள்ளது. ரஷ்யாவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மைக் பாம்பியோவும், ட்ரம்பும் அவக்கேடான முறையில் சீன வெறுப்புப் பிரசாரத்தைத் தூண்டியதை உலகறியும். ஜோ பிடன் நிர்வாகமும் சீன எதிர்ப்புப் போக்கையே கடைப்பிடிக்கிறது. ஜோ பிடனின் நிர்வாகம் அமெரிக்கப் பொருளாதாரத்தைக் 'குறைமதிப்பிற்கு' உட்படுத்தும் "சீனாவின் தவறான, நியாயமற்ற, சட்டவிரோத நடைமுறைகளை"த் தடுப்பதற்கான அனைத்துக் கருவிகளையும் பயன்படுத்தும் என்றே அமெரிக்கக் நிதியமைச்சர் ஜேனட் யெல்லன் தெரிவித்துள்ளார்.

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்த டிரம்ப் நிர்வாகத்தின் முடிவிலிருந்து (ஜோ பிடன் நிர்வாகம்) பின்வாங்க மாட்டோம் என்றும், ஜெருசலேமில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தொடர்ந்து செயல்படும் என்றும் இஸ்ரேல் சார்புடன் ஜோ பிடன் நிர்வாகம் செய்துள்ள அறிவிப்பு பாலஸ்தீனியர்களுக்கு வழக்கம் போல் ஏமாற்றமே அளித்துள்ளது. பிடன் தலைமையிலான நிர்வாக மாற்றம் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை உயர்த்திப் பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கையிலிருந்தும் இராணுவக் கூட்டணியிலிருந்தும் பின்வாங்கப் போவதில்லை. உலகச் சந்தை அமெரிக்காவின் மீது வைத்துள்ள குருட்டு நம்பிக்கைகள் தொடரும் வரை உலக நாடுகளிடமிருந்து அமெரிக்கா மலிவுக்கடன் பெறும்.வீழும் டாலரை அவைத் தாங்கிப் பிடிக்கும். ஆனால் இந்நிலை என்றென்றும் தொடர முடியாது.

எப்படிக் கடவுள் மீதான நம்பிக்கைகள் பக்தர்களுக்குப் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகின்றனவோ, அதே போல் அமெரிக்க வல்லரசின் சர்வ வல்லமை பற்றிய குருட்டு நம்பிக்கைகளும், மற்ற நாடுகளுக்கும் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளுக்கும், அவற்றின் உழைக்கும் மக்களுக்கும் பொருளாதார இழப்புகளையே ஏற்படுத்துகின்றன. குருட்டு நம்பிக்கைகளால் மட்டுமே ஒரு பொருளாதார அமைப்பை, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை நீண்ட நெடுங்காலம் பாதுகாக்க முடியாது.

**வரலாற்றுப் பாடம்:**

இங்கிலாந்தில் நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சி பொருளாதார உபரியை உற்பத்தித் திறனுள்ள முறையில் பயன்படுத்தாமல் மேட்டுக்குடியினர் தங்களது ஆடம்பரச் செலவுகளுக்காகவும் மாதா கோவில்கள், மாட மாளிகைகள் கட்டவும், போர்களில் ஈடுபடவும் செலவளித்ததாலே ஏற்பட்டது என்ற பால் பரணின் கோட்பாட்டை தாமஸ் லேம்பர்ட் என்ற பொருளியலாளர் தரவுகளின் அடிப்படையில் நிரூபித்து 'மந்த்லி ரிவியூ' மாத இதழில் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

இதற்கு சுன்சு என்ற அறிஞர் உருவாக்கிய பரன் விகிதம் என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தியுள்ளார். முதலீட்டு மதிப்பிற்கும், பொருளாதார உபரி மதிப்பிற்கும் இடையிலான விகிதம் பரன் விகிதம் என அழைக்கப்படுகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட ஆய்வுகளின் தரவுகள் இங்கிலாந்தில் 13ஆம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை பொருளாதார உபரி மதிப்பின் அளவில் ஏற்பட்ட குறைவு அதன் பொருளாதார நெருக்கடியை விளக்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்திற்கான பரன் விகிதத்தைக் கணக்கிட்டு ஆய்வு செய்த அவர் 1200இலிருந்து 1860 வரை பரன் விகிதம் குறைந்ததாகவும், 1800க்கு பிறகே ஒன்றிற்கும் மேல் அதிகரித்ததாகவும் கண்டறிந்துள்ளார்.

முதலாளித்துவத்தின் எதிர்கால மாற்றம் அல்லது மற்றொரு பொருளாதார அமைப்பின் பரிணாமம் என்பது ஒரு சமூகத்தின் பொருளாதார உபரி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே அமைந்துள்ளது. நிலப்பிரபுத்துவத்தில் உபரிமதிப்பு வீணாகச் செலவிடப்பட்டதைப் போலவே முதலாளித்துவத்திலும் உபரி மதிப்பு உற்பத்தித் திறனற்ற முறையில் பயன்படுத்தப்பட்டால், முதலாளித்துவத்திற்கு அதுவே ஆபத்தாக முடியும் என்று குறிப்பிடுகிறார். பொது சுகாதாரத்தில் போதுமான அளவு முதலீடு செய்வதிலும், கோவிட்-19 தொற்றுநோய் போன்ற நெருக்கடியை எதிர்கொள்வதிலும் முதலாளித்துவம் அடைந்த

தோல்வியானது, பஞ்சம் மற்றும் நோய்களைத் தடுப்பதில் தோல்வியடைந்த நிலப்பிரபுத்துவத்தின் தோல்வியை ஒத்ததாகும். கோவிட் தொற்றுநோய் முதலாளித்துவத்தைத் தாக்கியது போல கரும் இறப்பு எனப்படும் பிளேக் நோயினால் ஏற்பட்ட அழிவு ஒரு பலவீனமான நிலப்பிரபுத்துவ அமைப்பை மிகவும் கடுமையாகத் தாக்கியது. உற்பத்தி முதலீடுகளுக்குப் போதுமான முதலீட்டுப் புலங்கள் பெரும்பாலும் இல்லை என்பதையும், பரன், சுவீஸி குறிப்பிட்டுள்ளபடி முதலீட்டை சமூகமயமாக்குவதற்கான தேவை அதிகரித்து வருவதை அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதும், முதலாளித்துவத்திலிருந்து இறுதியாக சோசலிசத்தை நோக்கிய மாற்றத்தின் தொடக்கமாகலாம். நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியும் அதன் பின்விளைவும் ஒரு நீண்ட தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாகவே மாற்றம் ஏற்படும் என்பதையே குறிப்பிடுவதாக கூறுகிறார். முதலாளித்துவத்தில் சமூகத்தின் உபரிமதிப்பை உற்பத்தித் திறனுள்ள முறையில் பயன்படுத்தாமல் ஊகமுதலீடுகளுக்காகவும், ராணுவத்திற்காகவும் செலவு செய்யப்படுமானால் அதை அழிவிலிருந்து பாதுகாக்க முடியாது. ஆகவே முதலாளித்துவத்தைக் கடந்து செல்வோம்.

காலனியாதிக்கம் நேற்றைய வரலாறு மட்டுமல்ல இன்றைய நிஜமாகவும் உள்ளது. நாளையும் தொடருமா என்பது மூன்றாம் உலக நாடுகளின் விழிப்பு நிலையையும், செயல்திறனையும் பொறுத்தே அமைந்துள்ளது. ஏகாதிபத்திய அமைப்புகளையும் நவீன தாராளமயக் கொள்கைகளையும் புறக்கணிப்பதன் மூலம் மூன்றாம் உலக நாடுகள் கூட்டணி சேர்ந்து தங்களுக்குள்ளே வர்த்தகப் பரிவர்த்தனைகளையும், பொருளாதார ஒத்துழைப்பையும் உதவிகளையும் செய்வதற்கான அமைப்பு முறைகளை ஏற்படுத்த வேண்டும். இதை சர்வதேசியவாதத்திற்கு எதிரானதாகப் பார்க்க வேண்டியதில்லை. இன்றைய உலகமயமாக்கமும், நிதிமயமாக்கமும் சுரண்டலையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதை எதிர்த்துப் பொருளாதாரத் தற்சார்பை ஏற்படுத்துவதன் மூலமே சுரண்டலற்ற உலகமயமாதலையும், உண்மையான சர்வதேசியத்தையும் அடைய முடியும். மூன்றாம் உலக நாடுகளின் தேசியவாதமும், அவை தேசியநலன்களை முன்னிறுத்துவதும் சர்வதேசியவாதத்திற்கு எதிரானதல்ல. தேசியத்தையும் தேசநலன்களையும் புறக்கணித்து சர்வதேசியவாதத்திற்கு நீளம் தாண்டவோ, உயரம் தாண்டவோ முடியாது. டாலருக்கு வந்த வாழ்வு மூன்றாம் உலக நாடுகளிலிருந்து பறிக்கப்பட்டது, டாலருக்கு வாழ்வு கொடுத்தது போதுமே, என்று விழிப்புப் பெற்று மூன்றாம் உலக நாடுகள் வாழத் தொடங்குவோமே!

(தொடரும்)

# கியூபாவின் புரட்சிப் பெண்கள் (12)

**சமந்தா**

## மரியெலா காஸ்ட்ரோ எஸ்பின்



இது வரை நாம் கண்ட கியூபாவின் புரட்சிப் பெண்கள் கியூபப் புரட்சிக்கு முன்னர் பிறந்தவர்கள், கியூபப் புரட்சியின் வெற்றிக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள்... மரியெலா காஸ்ட்ரோ எஸ்பின் அவர்களுக்கு அடுத்த தலைமுறையை சேர்ந்தவர். பிறகு எதற்காக அவர்களோடு இவரையும் சேர்த்துள்ளோம், இதற்கும் ஒரு முக்கியக் காரணம் உள்ளது. அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதோடு விட்டு விடாமல் அதை அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்துச் சென்றதில் மரியெலா முக்கியப் பங்காற்றியுள்ளார் என்பதை நீங்களே தெரிந்து கொள்வீர்கள்.

மரியெலா காஸ்ட்ரோ எஸ்பின் கியூபப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு 1962 ஜூலை 27இல் ஹவானாவில் புரட்சியாளர் வில்மா எஸ்பானுக்கும், கியூபாவின் முன்னாள் அதிபரான ரவுல் காஸ்ட்ரோவுக்கும் மூன்றாவது மகளாக பிறந்தார். இவருக்கு அலெஜாண்ட்ரோ காஸ்ட்ரோ எஸ்பான் என்ற சகோதரரும் உள்ளார்.

மரியெலா காஸ்ட்ரோ ஹவானாவில் உள்ள "என்ரிக் ஜோஸ் வரோனா" என்ற உயர் கல்வி நிறுவனத்தில் உளவியல், கல்வித் துறையில் பட்டம் பெற்றார்.

கியூபாவில் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு 1960களில் ஓரினச் சேர்க்கையாளர்கள் புரட்சியின் எதிரிகளாகக் கருதப்பட்டு கட்டாயத் தொழிலாளர் உழைப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களுக்கு மறுகல்வி அளிக்கப்பட்டது, 1967இல் தொழிலாளர் முகாம்கள் மூடப்பட்டன. 1993 வரை எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அரசு மருத்துவ

முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

2010இல் மெக்சிகன் செய்தித்தாள் லா ஜோர்னாடாவுக்கு அளித்த பேட்டியில் ஃபிடல் காஸ்ட்ரோ ஓரினச் சேர்க்கையாளர்களுக்கான தொழிலாளர் முகாம்கள் குறித்து வருத்தம் தெரிவித்ததோடு, பெரும் அநீதி என்று கூறி, அவர்கள் மீது தனிப்பட்ட முறையில் தப்பெண்ணங்கள் தனக்கு இல்லை என்ற போதும், மற்ற அரசியல் விஷயங்களில் தான் கவனம் செலுத்தியதாகவும், அந்த நிலைமைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.




மரியெலா குழந்தைப் பருவத்திலிருந்தே ஓரினச் சேர்க்கையாளர் மீது வெறுப்புக் கொண்ட சமூகச் சூழலில் வளர்ந்ததால் குழந்தையாக இருக்கும் போது தானும் பிரச்சனைக்குரியவராய் இருந்ததாக ஒப்புக்கொள்கிறார். தான் "ஓரினச் சேர்க்கையாளர்களைப் பார்த்துச் சிரித்து கேலி செய்ததாகவும் நினைவு கூர்கிறார். அவருடைய 'எல்ஜிபிடி' நண்பர்களின் (திருநர், பிற பாலினத்தார், பிற பாலியல் நிலைப்பாடுடையோர் ('LGBTQ+') மூலமே அவர்களைப் பற்றியும், அவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், போராட்டங்கள் குறித்தும் விழிப்புணர்வு அடைந்ததாகக் குறிப்பிடுகிறார். 'எல்ஜிபிடி' சமூகத்தார், அரசின் சட்டம், கொள்கை, சமூகத் தரநிலைகள், பாரம்பரியம் எனப் பல்வேறு அடிப்படையில் இடைவிடாமல்

குறிவைக்கப்பட்டதாகவும் அவர் கூறுகிறார்.




மரியெலா சொல்கிறார் “பெற்றோரிடம் கேள்விகள் கேட்க நாங்கள் எப்போதும் அனுமதிக்கப்பட்டதால், நாங்கள் அடிக்கடி உரையாடுவோம். அனைவரின் உரிமைகளையும் பாதுகாக்காதது தீர்க்கப்பட வேண்டிய ஒரு துயரம் என்று பெற்றோர் எப்போதும் எங்களுக்குக் கற்பித்தனர். எல்ஜிபிடி, எச்.ஐ.விஆல் பாதிக்கப்பட்ட நபர்களையும் உள்ளடக்கியதே "அனைவர்” என்ற பதம் என்று அவர்களிடமே கற்றுக் கொண்டோம்.” தான் குழந்தையாக இருந்த போது ஒரு நபர் தனது பாலியல் நிலைப்பாடு காரணமாக அவரது தந்தையால் நிராகரிக்கப்பட்டதையும் அதனால் மனமுடைந்து அவர் தற்கொலை செய்து கொண்டதையும் கேட்டு அதிர்ச்சியடைந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

வரலாற்று ரீதியாக, கியூபாவில் திருநர் விடுதலைக்கான இயக்கம் விரிவு பெற்று எல்ஜிபிடியினரின் விடுதலை இயக்கமாக வளர்ச்சி பெறுவதற்கு வழிவகுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேல் மகளிர் கூட்டமைப்பைத் தலைமை தாங்கிப்



பெண்களை "உற்பத்தியிலும், புரட்சிகர" வேலைகளிலும் ஒருங்கிணைத்த பெருமைக்குரிய மரியெலாவின் தாய் வில்மா எஸ்பின் பெண்களின் உரிமைகளுக்காகவும், ஓரினச் சேர்க்கையாளர்கள், திருநர், மாற்றுப் பாலினத்தார், மாற்றுப் பாலியல் நிலைப்பாடுடையோரின் (LGBTQ+) சம உரிமைகளுக்காகப் போராடினார். 1988இல் தேசிய சுகாதார சேவையில் பாலின-மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகளை சேர்க்க வில்மா போராடினார். ஆனால் அது பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்படாததால் சட்டமாக நிறைவேறவில்லை. தாய் விட்டுச் சென்ற பணியை மகள் மரியெலா முன்னெடுத்தார். 2008இல் அதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. வில்மாவிடம் ஊக்கம் பெற்று மரியெலா அவரது பணியைத் தொடர்வதன் மூலம் தாய்க்குப் பெருமை சேர்த்து வருகிறார்.

ஏற்கனவே உணர்திறன் கொண்ட ஒருவர் (வில்மா) கிடைத்தது எங்களுக்கு நல்வாய்ப்பாக அமைந்தது என மரியெலா கூறுகிறார். தந்தை ராவுல் ஆரம்பத்தில் அமைதி காத்த போதும், எப்போதுமே தன்னையும், தனது உடன்பிறப்புகளையும் அவர்களது நம்பிக்கைகளுக்காகவும், அவர்களுக்கு ஏற்புடைய விசயங்களுக்காகவும், காரணங்களுக்காகவும் போராட ஊக்குவித்ததாகவும் கூறியுள்ளார்.

தன் தந்தை ராவுலும் தன் தாயால்தான் உணர்திறனும், கல்வியும் பெற்றதாகவும் அதனால்தான் ஒருமித்த கருத்தை அடைவதற்கான செயல்பாடுகளில் ஈடுபட்டதாகவும், கியூபக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இது குறித்த புரிதலை ஏற்படுத்தியதாகவும் சொல்கிறார் மரியெலா.

என் வாழ்க்கையில் எழுச்சியூட்டும் முன்மாதிரியாக இருந்த ஒரு மிக முக்கியமான கல்வியாளரை நான் வாழ்த்த விரும்புகிறேன், உங்கள் குடும்பத்தைக் கைவிடாமல் நீங்கள் புரட்சியை நேசிக்க முடியும் என்றும், புரட்சியைக் கைவிடாமல் உங்கள் குடும்பத்தை நேசிக்க முடியும் என்றும் எனக்குக் கற்றுக் கொடுத்தவர். ஒரு தந்தையாகவும், ஒரு புரட்சியாளராகவும் உங்கள் உதாரணத்திற்கு நன்றி எனத் தன் தந்தை ராவுல் காஸ்ட்ரோவை பற்றி கூறியுள்ளார்.

2007இல் வில்மா எஸ்பின் இறந்தார். "நாம் பாலின சமத்துவத்தை அடைய முடியும் என்று நான் அவருக்கு உறுதியளித்தேன், அது இன்னும் நிறைவேறாததால் என்னால் இப்பணியை விட்டு விட முடியாது." என்கிறார் மரியெலா.

1959இல் கியூபாவில் கருக்கலைப்பு இலவசமாகவும் சட்டப்பூர்வமாகவும் ஆக்கப்பட்டது, ஊதியத்துடன் ஒரு வருட மகப்பேறு விடுப்பு வழங்கப்பட்டது, கியூப அரசு பொதுக் குழந்தைப் பராமரிப்புச் சேவையைக் குடிமக்களுக்கு வழங்கியது. பாலின வேறுபாடுகளைக் களையும் விதமாக அனைவருக்கும் சம ஊதியம் வழங்கப்பட்டது. ஓரினச் சேர்க்கை குற்ற நடவடிக்கைகளிலிருந்து 1970களில் நீக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பண்பாட்டுச் சூழலிலும் மாற்றம் ஏற்பட்டது.

பாலியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் பாகுபாடுத்துவது சட்ட விரோதமாக்கப்பட்டது. ஓரினச் சேர்க்கையாளர்களையும், திருநர்களையும் அவமரியாதை செய்வதைத் தடுக்கும் விதமாக காவல்துறைக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கியூபாவில் ஒரு பண்பாட்டுப் புரட்சியை மரியெலா முன்னெடுத்துள்ளார். 'எல்ஜிபிடி+' உரிமைகளுக்கான போராளியாகவும் உள்ளார். மரியெலா காஸ்ட்ரோ 'எல்ஜிபிடி+' சமூகத்தின் வெளிப்படையான ஆதரவாளராக உள்ளார். அதற்காகத் தனது சொந்த குடும்பத்திற்கு எதிராகச் செல்வதாக இருந்தாலும் அவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடுவேன் என்று பகிரங்கமாகக் கூறியுள்ளார். 'எல்ஜிபிடி+' சமூகத்தின் அங்கீகாரத்திற்கான போராட்டத்திற்கான முக்கிய இயக்குவிசையாகவும், தூண்டுகோலாகவும் மரியெலா பரவலாக அறியப்படுகிறார். லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், கியூபாவிலும் அச்சமூகத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் விதமாகக் காலங்காலமாகப் பரப்பப்படும் தவறான கருத்துகளையும் கலைக்கும் விதமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மரியெலா தனது தாய் வில்மா எஸ்பின் 1960இல் ஏற்படுத்திய கியூபப் பெண்கள் கூட்டமைப்பை மாதிரியாகக் கொண்டு கியூபாவின் பாலியல் கல்விக்கான தேசிய மையத்தை ஹவானாவில் உருவாக்கி, அதன் இயக்குநராகச் செயல்பட்டு வருகிறார். இவ்வமைப்பு சமூகத்தால் ஓரங்கட்டப்பட்ட விளிம்புநிலை மக்களின் சம உரிமைகளுக்காகவும், சமூக மாற்றத்திற்காகவும் பணியாற்றி வருகிறது. 'எல்ஜிபிடி' சமூகத்தினர் சட்ட உதவி, கல்வி, சுகாதார சேவைகள் பெறுவதற்கு இவ்வமைப்பு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

இந்த வேலையின் முக்கியத்துவத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர் வில்மா என மரியெலா தன் தாயைக் குறிப்பிடுகிறார். கியூபா பாலியல் கல்விக்கான தேசிய மையத்தை (செனெசெக்ஸ்)

உருவாக்கும் முன்பு மரியெலா கியூபப் பெண்கள் கூட்டமைப்பில் பெண்களின் உரிமைகளுக்காகப் போராடும் சமூக ஆர்வலராகச் செயல்பட்டார். மரியெலா ஒரு நேர்காணலில் கியூப மகளிர் கூட்டமைப்பு "பல அரங்கங்களில் ஆணாதிக்கத்தை எதிர்த்துப் போராடியதாகவும் கியூப மகளிர் கூட்டமைப்பு நிறுவப்பட்ட பின்னர், கியூபப் பெண்களின் பொது, பொருளாதார சமூக நிலை வியத்தகு அளவில் உயர்ந்தது - பெண்களுக்கு வேலைவாய்ப்பு சம ஊதிய வாய்ப்புகள் மகப்பேறு கால விடுப்பு பெண்களுக்கான சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

மரியெலா திருநர்களுக்கு முழு கவனம் செலுத்துவதற்கான தேசிய ஆணையத்தின் இயக்குநராகவும் செயல்படுகிறார். 'எல்ஜிபிடி' உரிமைகளின் அங்கீகாரம், எய்ட்ஸ் தடுப்பு குறித்து திருநர்கள்பால் முழுக் கவனம் செலுத்துவதற்கான தேசிய ஆணையம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

மரியெலா 2005இல் திருநர்கள் பாலியல் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை பெறவும், அவர்கள் சட்ட வழியில் பாலினத்தை மாற்றிக் கொள்வதற்குமான ஒரு திட்டத்தை முன்மொழிந்தார். அதன் அடிப்படையில் கியூபர்களுக்குப் பாலியல் மாற்ற அறுவை சிகிச்சையைக் கட்டணமில்லாமல் அனுமதிக்கிற சட்டம் ஜூன் 2008இல் நிறைவேற்றப்பட்டது.

1990இல் உலக சுகாதார அமைப்பு (WHO) சர்வதேச நோய்களின் வகைப்பாட்டிலிருந்து ஓரினச் சேர்க்கையை அகற்றியது. அதையொட்டி ஒவ்வொரு மே17ஆம் நாளும் திருநர் வெறுப்புக்கு எதிராகவும், தன்பாலின, இரு பாலினச் சேர்க்கை மீதான வெறுப்புக் கலாசாரத்திற்கு எதிரான சர்வதேச தினமான மே 17ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது.

2008ல், பாலியல் கல்விக்கான தேசிய மையமும், திருநர் மீது முழு கவனம் செலுத்துவதற்கான தேசிய ஆணையமும் 'எல்ஜிபிடி' சமூகத்தினரின் பிரச்சினைகள் குறித்தும், ஓரினச்சேர்க்கையாளர் மீதான வெறுப்பு, திருநர் வெறுப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான மாதமாக மே மாதத்தை அறிவித்தது. ஒவ்வொரு மே மாதமும் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், எல்ஜிபிடி + சமூகத்தினர் கொண்டாடுவதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது.

. 1996ல், கியூபா கல்வி அமைச்சகம் (MINED), கியூபாவின் பாலியல் கல்விக்கான தேசிய மையத்துடன் இணைந்து கியூப பள்ளிகளில் குழந்தைகளுக்கு இனப்பெருக்கம், பாலுறவு, பாலின சமத்துவம், பாலியல் வன்முறை பாலுறவு மூலம் பரவும் நோய்த்தொற்றுகள் ஆகியவற்றைக் கற்பிப்பதற்கான ஒரு தேசிய பாலியல் கல்வித் திட்டத்தை உருவாக்கியது. ,

மரியெலா காஸ்ட்ரோ கியூப பன்முக பாலியல் ஆய்வு மையத்தின் தலைவராகவும், பாலின அடையாள பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான தேசிய ஆணையத்தின் தலைவராகவும், எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்கான நேரடி நடவடிக்கைக் குழுவின் உறுப்பினராகவும், பாலியல் நலத்திற்கான உலக கூட்டமைப்பின் (WAS) நிர்வாக உறுப்பினராகவும் உள்ளார். பாலியல் கல்விக்கான தேசிய மையம் (CENESEX) வெளியிடும் பாலியலும், சமூகமும் என்ற ஆய்வு பத்திரிகையின் இயக்குநராகவும் உள்ளார். மரியெலா 13 ஆய்வுக் கட்டுரைகளையும் ஒன்பது புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

பல்வேறு நிறுவனங்களில் எச்.ஐ.வி / எய்ட்ஸை பற்றி நிலவும் களங்கத்தை குறைக்கும் விதமாக மரியெலா மேற்கொண்ட ஆய்வு,பணியின் விளைவாக கியூபாவில் பாலியல் நலத்தில் பெரும் நேர் நிறையான மாற்றங்களுக்கு வழிவகுத்தன. கியூபாவில் எச்.ஐ.வி தொற்று விகிதம் மிகக் குறைந்த அளவிலே உள்ளது. மேலும் எச்.ஐ.வி வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாட்டின் சுகாதார அமைப்பு மூலம் இலவச ஆன்டிரெட்ரோவைரல் மருந்துகள் கிடைக்கின்றன.
உலக சுகாதார நிறுவனம் ஜூன் 2015ல் தாய் மூலம் குழந்தைக்கு எச்.ஐ.வி, சிபிலிஸ் தொற்று பரவுதலை வெற்றிகரமாக தடுத்த முதல் நாடாக கியூபாவை அங்கீகரித்தது.

2013 மே 5 ல், எல்ஜிபிடி + சமூகத்திற்கான விழிப்புணர்வை மையமாகக் கொண்ட சமூகநீதி மன்றத்தின் விருதை பெறுவதற்காக மரியெலா பிலடெல்பியாவுக்குச் சென்றார், எல்ஜிபிடி சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வை பரப்பும் நிறுவனங்களுடன் அவர் பணியாற்றியதற்காக. குழுவின் தலைவரும் நிறுவனருமான மால்காம் லாசின், மரியெலா உண்மையிலே எல்ஜிபிடி சமத்துவத்திற்கான ஒரு சர்வதேச கதாநாயகர் என்றும் எல்ஜிபிடி கியூபர்களுக்காக குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளார்" என்றும் போற்றினார்.
மரியெலா தேசிய மக்கள் அவையின் உறுப்பினராக செயல்பட்டார். 2014ல் வேலைவாய்ப்பில் பாலியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் பாகுபாடு காட்டத் தடை விதிக்க கியூபச் சட்டமன்றத்தில் வாக்களிக்கப்பட்ட போது, மரியெலா பாலியல் நிலைப்பாட்டின் பாலின அடையாளம், பாலியல் சார்புநிலை அடிப்படையில் பாதுகாப்பை உறுதி செய்யவில்லை என்று அந்த மசோதாவை எதிர்த்து வாக்களித்தார்.
மரியெலா பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சையை மேற்கொள்ளாமலே திருநர் தங்கள்

பாலின அடையாளத்தை மாற்ற அனுமதிக்கும் சட்ட முன்னெடுப்பையும் செய்துள்ளார். குடும்பச் சூழலில் பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர், வயதானவர்களின் உரிமைகளை மிகவும் வலுவாக உத்தரவாதம் செய்யும் விதமாகவும், பாலினப் பாத்திரங்களை மேலும் ஜனநாயகப்படுத்துவதற்காகவும் குரல் கொடுத்துள்ளார்.

ஒரே பாலினத் திருமணத்தை சட்டபூர்வமாக அங்கீகரிக்கத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். கியூப அரசு குடும்ப நெறியில் திருமணத்தின் வரையறையில் பாலினத்தைப் பொருட்படுத்தாமல் திருமணம் என்பதை இரண்டு நபர்களின் இணையேற்பாக, அங்கீகரிக்கவேண்டும் என்ற மாற்றத்தை மரியெலா முன்மொழிந்தார்.

2018இல் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் ஒருபாலினத் திருமணத்தைச் சட்டபூர்வமாக்குவதற்கு முன்மொழியப்பட்ட போதும், தேவாலயங்களும், பலதரப்பட்ட கியூபர்களும் அதை எதிர்ப்பதால் அதற்கு வெளிப்படையான சட்டப்பூர்வமான அங்கீகாரம் கிடைக்கப்பெறாமல் தடுக்கப்பட்டுள்ளது.

திருமணம் என்பது ஒரு சமூக, சட்ட அமைப்பாகவும், குடும்ப அமைப்பின் முறைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, ஆனால் அது ஒன்று மட்டுமே குடும்ப அமைப்பு அல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் இணையேற்பது மட்டுமே திருமணமாக அங்கீகரிக்கப்படவும் இல்லை அதே போது, ஒரே பாலினத்தாரின் இணையேற்பு திருமணமல்ல என நிராகரிக்கப்படவும் இல்லை என்பதால் இதை முழுக்கப் பின்னடைவாகப் பார்க்க இயலாது. அதில் எல்லாப் பன்முகத்தன்மை கொண்ட குடும்பங்களும், நேரடியாக இல்லாவிடினும், அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கியூபாவின் முந்தைய அரசியலமைப்பு இனம், தோல் நிறம், பாலினம், தேசியத் தோற்றுவாய், மத நம்பிக்கை அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடை செய்தது. அந்தப் பட்டியலில் இப்போது பாலினம், பாலியல் நிலைப்பாடு, பாலின அடையாளம், வயது, இனத் தோற்றம், உடல் ஊனம், பிராந்தியத் தோற்றம் ஆகியவையும் சேர்க்கப்பட்டுள்ளன.

1975ஆம் ஆண்டில், கியூபாவில் குடும்ப சட்ட நெறி நிறைவேற்றப்பட்டது, இது குடும்பத்திற்குள் பெண்கள், குழந்தைகளின் உரிமைகளுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்கிறது. வீட்டு வேலைகளிலும், குழந்தை வளர்ப்பிலும் ஆணும் பெண்ணும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

குழந்தை வளர்ப்பிலும், குடும்ப நிர்வாகத்திலும் ஆண்களின் சமமான பங்களிப்பை ஏற்படுத்த

மகப்பேற்றுச் சட்ட மாற்றத்தின் மூலம் பேறுகால விடுப்பு தந்தைக்கும் அளிக்கப்படுகிறது. ஏனென்றால் இதற்கு முன்பு, பெண்களுக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்பட்டது. தற்போது ஆண்களுக்கு உள்ள உரிமையும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கியூபக் குடும்பத்தின் பரிணாமத்தில் இன்று, நிறையப் பெண்கள் வீட்டுத் தலைவர்களாக உள்ளனர். ஒருபாலினத் தம்பதிகள் குடும்பமாக வாழ்கின்றனர், குடும்பத்தில் மற்றவர்களைக் கவனிக்கும் சுமையிலிருந்து பாட்டிகள் விடுதலை பெற்றுள்ளனர். அதற்கு பதிலாக அவர்கள் தாம் விரும்பித் திட்டமிடப்படி தங்கள் வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். கியூபாவில் வீட்டு வன்முறைக்கு எதிராக மிகக் கடுமையான சட்டங்கள் உள்ளன. வீட்டு வன்முறை, பாலியல் வன்கொடுமை மட்டுமல்லாது, பொது இடங்களில் துன்புறுத்தல், பணியிடங்களில் அச்சுறுத்தல் ஆகியவையும் குற்றமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மரியெலாவுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். மரியெலா சிலியைச் சேர்ந்த ஜுவான் குட்டிரெஸ் பிஷ்மானுடனான முதல் திருமணத்தின் மூலம் இரண்டு மகள்களை பெற்றார். அதற்கு பின் இத்தாலியர் பாவ்லோ டிட்டோலோவை மணந்து ஒரு குழந்தையையும் பெற்றுள்ளார்.

மரியெலா தனது பன்முகத் தன்மைச் செய்திகளின் மூலம் ஒரு புதிய, மிகவும் முற்போக்கான கியூபாவை ஏற்படுத்த நாடு முழுவதும் அயராது பயணம் செய்கிறார்.

2009இல், பாலியல் தொடர்பான அறிவியல் ஆய்வுக்கான (SSSS) பொதுச் சேவை விருது மரியெலாவுக்கு வழங்கப்பட்டது, மேலும் 2012இல் உலகப் பல்கலைக்கழக அவையின் (COMAU) கல்விசார் தனிச் சிறப்பிற்கான யுரேகா விருதையும் மரியெலா பெற்றார்.

மரியாலா காஸ்ட்ரோ எல்ஜிபிடி சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு ஆர்வலராகப் பணியாற்றியதற்காக குவாடலஜாரா சர்வதேசத் திரைப்பட விழாவில் (எஃப்.ஐ.சி.ஜி) அவருக்கு மேகி பரிசு வழங்கப்பட்டது.

மரியெலா காஸ்ட்ரோவின் நெடும்பயணம் கியூபாவின் எல்ஜிபிடி புரட்சி என்று 2016இல் எச்.பி.ஓ.க்காக இயக்குநர் ஜான் ஆல்பர்ட் ஓர் ஆவணப்படம் வெளியிட்டுள்ளார்.

ஒருவரின் பாலியல் சார்புநிலை அவர் மீதான மதிப்பைக் குறைக்காது, பாலியல் அடையாளம், பாலியல் நிலைப்பாடு என்பது ஒரு மனித உரிமை, இது ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்கிறார் மரியெலா.

கியூபாவில் சுதந்திரமான பேச்சுக்காக யாரும் தண்டிக்கப்படுவதில்லை. சுதந்திரமான,

அசௌகரியமான எண்ணங்கள் கியூபாவில் ஒரு குற்றமாக இருக்குமானால் பாலியல் சுயநிர்ணய உரிமைக்கான எனது வாதத்திற்காக நான்தான் சிறையில் இருக்க வேண்டிய நபராக இருந்திருப்பேன். வாஷிங்டனால் இயக்கப்படும் கூலிப் படையினரே சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்கிறார் மரியெலா.

சமுதாயத்தில், ஆணாதிக்கம் என்ற பாரம்பரியக் கருத்து ஆண்களின் ஆரோக்கியத்திற்கு உண்மையான ஆபத்தாக இருப்பதாகக் குறிப்பிடுகிறார். ஆணாதிக்க மாதிரி நெருக்கடியில் உள்ளது. "நாம் ஆணாதிக்க ஓரினச்சேர்க்கை-வெறுப்பு கலாச்சாரத்தை மாற்றா விட்டால் ... ஒரு புதிய சமுதாயமாக நாம் முன்னேற முடியாது, சோசலிசத்தின் மூலம் விடுதலை ஆற்றல் பெற நாம் விரும்புகிறோம், "நாம் சமூக நீதி, சமூகச் சமத்துவத்தின் அடிப்படையில் உறவுகளை அமைப்போம்" என அறைகூவல் விடுக்கிறார் மரியெலா.

எல்ஜிபிடி பிரச்சினைகளில் மரியெலா பணியாற்றத் தொடங்கிய போது, நல்வாய்ப்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவைப் பெற்றார்.

ஓரினச் சேர்க்கையினரின் உரிமைகளை முன்னெடுப்பதற்கு கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு அதிகரித்து வருகிறது. கியூபச் சமுதாயத்தில் மீதமுள்ள அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்ற வேண்டும் என்ற அறிக்கைக்குக் கட்சி ஒப்புதல் அளித்துள்ளது, இதனை ஓரினச் சேர்க்கைத் திருநர்களுக்குப் பயனளிக்கும் விதமான கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கப் பயன்படுத்த முடியும் என்று மரியெலா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"கியூபாவிற்கு எதிரான பொருளாதார, நிதி, வர்த்தக முற்றுகை நீக்கப்படும் என்று நம்புகிறேன், கியூபா மீதான முற்றுகை நீக்கப்பட்டால் கியூபாவின் மீதான பெருஞ்சுமை குறையும், உலகத் தொடர்புடன் நாம் உயிர்வாழ முடியும். இதனால் பொருளாதாரம் வளரவும் ஊதியங்கள் உயரவும் முடியும். ஆனால், நாங்கள் நமது சுதந்திரத்தைச் சமரசம் செய்து பலவீனமடைய மாட்டோம். சமத்துவம், சமூக நீதி குறித்த நமது கொள்கைகளை நாங்கள் ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்று நம்புகிறேன். இதற்காகவே எங்கள் பெற்றோர் போராடினார்கள், நாங்கள் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்கிறார் மரியெலா.

ஆனால் முற்றுகையை நீக்குவது மட்டுமே வளர்ச்சியைத் தூண்டாது. நமது சமூக அமைப்பை மேம்படுத்த வேண்டும். முதலாளித்துவத்திற்கு மாற்றான ஒரு முரணற்ற முற்போக்கான மாற்றான மார்க்சியத்தால் கியூபப் புரட்சி கியூப மக்களை விடுவிக்க முயன்றது.. "இந்த

அடிப்படையில், எல்லா விதமான பிரிவினைவாதங்களையும், பாகுபாடுகளையும், சமூக விலக்கல்களையும் அகற்ற வேண்டும்." என்பதை உயர்த்தி பிடிக்க வேண்டிய வரலாற்று, சமூகப் பொறுப்பை புரட்சி கொண்டுள்ளது. "புரட்சி ஆதிக்கத்தின் பல வழிமுறைகளை அகற்றுவதில் வெற்றி பெற்றது, ஆனால் உலகின் பிற நாடுகளைப் போலவே எல்ஜிபிடி சமத்துவ பிரச்சினையில் தெளிவு இல்லை, ஆனால் நாம் சோசலிசத்தை வலுப்படுத்த விரும்பினால் [அதுமே நம் நோக்கம்] இப்பிரச்சனையைத் தீர்ப்பதில் முன்னேற வேண்டும்.. உலகளாவிய உணர்திறனை மாற்றுவதன் மூலமும், அனைவருக்கும் கல்வி கற்பிப்பதன் மூலமும் நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை" எனக் கூறியுள்ளார்.

மரியெலா காஸ்ட்ரோ இயங்கியல் அடிப்படையில் மிகவும் நியாயமான, மக்களின் நேரடிப் பங்கேற்பை உறுதி செய்யும், அனைவரையும் அரவணைக்கும் வகையான சோசலிசத்தை ஆதரிக்கிறார் கியூபாவில் பாலியல் பன்முகத் தன்மைக்கான உரிமைக்காகப் போராடுகிறார்.

50 ஆண்டுக்காலப் புரட்சியில், முழுமையான இறையாண்மையுடனும், சமூக நீதிக்கான தேடலுடனும் எட்டப்பட்ட அனைத்தையும் பார்ப்பது மிகவும் ஆர்வமூட்டுபவை, ஆனால் பரந்துபட்டு நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது,

இயங்கியல் அடிப்படையில் சமூகத்தில் தொடர்ந்து எழும் அனைத்து முரண்பாடுகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்களை அடையாளங்காண வேண்டும் என்றும் சொல்கிறார் மரியெலா.

பாலினச் சமத்துவத்திற்கான போராட்டம் என்பது பெண் விடுதலையுடன் முழுமை பெறுவதில்லை. இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் ஒடுக்கப்படுபவர்கள் பெண்கள் மட்டுமல்ல, பிற பாலினத்தினரும், பிற பாலியல் சார்பு கொண்டவர்களும் கடுமையான ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பெண் விடுதலைக்கான போராட்டங்கள் பாலியல் சமத்துவத்திற்கான வெளியை விரிவுபடுத்தட்டும். பெண்கள், பிற பாலினத்தினர், பிற பாலியல் சார்பு கொண்டவர்களின் விடுதலையின் மூலம் பாலினச் சமத்துவமுள்ள சமூகத்தைக் கட்டமைப்போம். பெண்களின் புரட்சியையும், பாலினச் சமத்துவத்துவத்துக்கான புரட்சியையும் அடுத்த கட்டத்துக்கு வளர்த்தெடுத்ததில் முக்கியப் பங்கு வகித்த மரியெலாவின் முன்னுதாரணத்தை நாமும் பின்பற்றி முன்னேறுவோம்.

(தொடரும்)

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |